
ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ராமாநுஜன் பத்ராதிபரான
ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரஸ்வாமியின் பல பல நூல்களிலிருந்தும்
மாதப் பத்திரிகைகளிலிருந்தும் தொகுக்கப்பட்ட
உபந்யாஸங்களைக் கொண்ட

அண்ணஸ்வாமி யுபந்யாஸ மாலை.

—: மூன்றுமிதழும் நான்காமிதழும் :—

['இ' என்னுமெழுத்தை முற்கொண்ட உபந்யாஸங்கள் 10]

தொகுப்பாளர்:

ஸ்ரீ. அ. அக்காரக்கனி அனந்தாழ்வான்

— ★ —

தனிப்பிரதியின் விலை ரூ. **2-00**

—* ● *—

ஆனந்த–ஸ்ரீ ஆடி, ஆவணி–மீ — ஜூலை, ஆகஸ்டு, 1974.

http://acharya.org



ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம்
ஜகதாசார்ய பத்மவிபூஷண மஹாமஹோபாத்யாய
அண்ணங்கராசாரிய ஸ்வாமிகள்

http://acharya.org

ஸ்ரீ:

அண்ணஸ்வாமியின் உபந்யாஸ மாலை

(ஊன் றூமி தந்)

['இ' என்னுமெழுத்தை முற்கொண்ட உபந்யாஸங்கள்]

24. இப்புவியிலரங்கேசற் கீடளித்தவர்பெருமை

மணவாளமாமுனிகளுக்கு இரண்டு வாழிதிருநாமங்கள் வழங்கி வருவன. ஒன்று **நித்யம்;** மற்றொன்று நைமித்திகம். ''செய்யதாமரைத் தாளிணை'' என்னும் வாழிதிருநாமம் **நித்யா**நுஸந்தானத்திலிருப்பதால் நித்யமெனப்படும். ''இப்புவியிலரங்கேசற்கீடளித்தான் வாழி**யே**'' இத்யாதிகள் திருநக்ஷத்ர விசேஷங்களில் மட்டுமே அநுஸந்திக்கப்படுவதால் நைமித்திகமெ**னப்**படும். அந்த நைமித்திக வாழிதிருநாமத்தின் ஸாராம்சத்தை விளக்குவன மேல்வரும் உப**ந்யா**ஸங்கள். மணவாளமாமுனிகளின் வைபவத்தைக் கேட்க விரும்புமவர்களுக்கு உபந்யாஸகர்**கள்** எதையோ சொல்லிப் போதைப் போக்கி விடாமல் இந்த விஷயங்களை எடுத்துரைத்தால் கேட்பவர்களுக்குக் கர்ணாம்ருதமாம்.

— மணவாள மாமுனிகளின் திருநாவிறு —

நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயமானது ஆழ்வார்களாலும் ஆசாரியர்களாலும் பெருமைபெற்றுப் பொலிகின்றது. இவ்வாழ்வாராசார்ய பரம்பரையானது பொய்(கை)யாழ்வார் தொடங்கிப் பொய்யிலாத மணவாளமாமுனிகளோடு தலைக்கட்டுகின்றது. இப்பெரியார்கள் நமக்குச் செய்தருளின மஹோபகாரங்களுக்கு நாம் செலுத்த வேண்டிய கைம்மாறு அவர்களுடைய புகழ்களை வாயாரச் சொல்லிப் போற்றுவதொன்றேயாம். நாமாகச் சில செய்யுள்களையோ சுலோகங்களையோ இயற்றிப் போற்றுவதிற் காட்டிலும் முன்னோர்கள் மொழிந்தவற்றைக் கொண்டு போற்றுவது மேம்பட்டதாம். ஆழ்வார்களில் நம்மாழ்வாரொருவர்க்கு மட்டுமே மதுரகவிகள் அருளிய கண்ணிநுண்சிறுத்தாம்பு துதியுள்ளது. மற்றுள்ள ஆழ்வார்களுக்கு அவரவர்களின் திவ்வியப் பிரபந்தத் தனியன்களைத் தவிர வேறொரு துணுக்கையும் துதியாக அமைந்திலது. இனி ஆசாரியர்களைப் பற்றிப் பேசப்புகுவோமாயின் எம்பெருமானாரொருவர்க்குத் தவிர மற்ற எவர்க்கும் தோத்திர நூல் அமைந்திலது. இராமாநுச நூற்றந்தாதியானது ஸ்வாமியின் காலத்திலேயே அவதரித்து மேன்மை பெற்றது; யதிராஜ ஸப்ததி, யதிராஜ விம்சதி, யதிராஜ தண்டகம் முதலானவை பிற்காலத்தில் தோன்றியவை; நிற்க. ஸமகாலத்தில் தோன்றிய துதிநூல் நூற்றந்தாதியொன்றேயாம். வடுகநம்பி யென்பவர் யதிராஜ வைபவமென்றொரு வடமொழி நூல் பணித்தாரெனினும் அது சரித்திர நூலேயன்றித் தோத்திர நூலன்று. பல்கலையோர் தாம் மன்ன வந்த விராமானுசன் திருவடிகளில் ஆச்ரயித்திருந்த ஆயிரக்கணக்கான ஸ்ரீ வைஷ்ணவர்களில் எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளென்று பரிகணிதரான மஹான்கள் ஒவ்வொருவரும் மிகச்சிறந்த பண்டிதோத்தமர்கள்; அவர்களுள்ளும் ஆழ்வான் ஆண்டான் பிள்ளான் அனந்தாழ்வான் அருளாளப் பெருமாளெம்பெருமானார் எம்பார்..........என்னுமிவர்கள் ப்ரசண்ட பண்டிதர்கள். இவர்கள் எதிராசர் திறத்துப் பெரிய துதிநூல் பணித்ததாகத் தெரியவில்லை. இக்குறையை அமுதனார் நூற்றந்தாதியில் ஒரு பாசுரத்தில் காட்டியுமுள்ளார். ''இந்நிலத்தே எனையாளவந்த விராமாநுசனை **இருங்கவிகள்** புனையார்'' என்று; இதன் பொருளை நாம் விவரிக்க வேண்டுமோ ?

http://acharya.org

இராமானுசர்க்குப் பிற்பட்டவர்களான எம்பார் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை திருவாய்மொழிப்பிள்ளை முதலான ஆசாரியர்களுக்கு ஒரு தோத்திர நூலும் திருவவதரிக்கக் கண்டிலோம். இதனால், தோத்திரம் செய்யக்கூடிய பெருமை அவ்வாசிரியர்கள்பக்கலிலே இல்லையென்று நாம் சொல்லுவதாகக் கருதலாகாது. பிரகிருதம் மணவாளமாமுனிகளைப் பற்றி நாம் விஜ்ஞாபிப்பதை மட்டும் குறிக்கொள்ள வேணும்.

"ஏராருமெதிராசரெனவுதித்தான்வாழியே" என்று வாழ்த்தப்பட்டு வருகின்ற நம் மாமுனிகள் எம்பெருமானாருடைய அபராவதாரர் என்பதில் ஐயமில்லை. இவ்வளவே யன்று; அவர்தம் அவதாரத்திற்காட்டிலும் மிக்க மேம்பாடுடையது மாமுனிகள் தம் அவதாரம். ஸ்வதந்திரமாகப் புதிய நூல்களை யருளிச் செய்வதில் விசேஷ விருப்ப மற்று வியாக்கியான ரூபமான க்ரந்தங்களை யருளிச் செய்வதிலேயே ஊக்கமும் ஊற்றமும் இருவர்க்கும் துல்யமானது. ஸ்ரீ பாஷ்யம் வேதாந்த தீபம் வேதாந்தஸாரம் கீதாபாஷ்யம் என்னுமிவை வியாக்கியான க்ரந்தங்களேயன்றோ. அப்படியே மாமுனிகளும், "சீருலகாரியர் செய்தருள் நற்கலை தேசுபொலிந்திடு நாள்" என்கிறபடியே பிள்ளைலோகாசாரியருடையவும் அவரது திருத்தம்பியாருடையவும் அருமருந்தான திவ்விய ரஹஸ்ய நூல்களுக்கு வியாக்கியானங்களையருளிச் செய்தார். எம்பெருமானார் வேதார்த்த ஸங்க்ரஹம், கத்யத்ரயம், நித்யம் என்கிற ஸ்வதந்த்ர க்ரந்தங்கள் சிலவற்றையும் அருளிச் செய்தாப் போலே மாமுனிகளும் யதிராஜ விம்சதி, தேவராஜமங்களம், திவ்யதேச மங்களாசாஸன பத்யமாலிகை உபதேசரத்தினமாலைமுதலிய ஸ்வதந்திர நூல்களையுமருளினார்.

இவ்வகையாலே இருவர்க்கும் ஸாம்யமென்பது நிற்க. மாமுனிகளுக்கு எம்பெருமானாரிற் காட்டிலும் மிகுந்த ஆதிக்கியம் கேண்மின். "ஓராண் வழியாய்" என்கிற உபதேச ரத்தினமாலைப் பாசுரத்தின்படி எம்பெருமானார்க்கு ஒரு ஏற்றம் தெரிந்துகொள்ளுகிறோம். அதாவது, ஆளவந்தார் முதலான முன்னோர்கள் அர்த்தங்களின் சீர்மையைக் கண்டு மறைத்தொளித்துப் போந்தார்களென்றும், எம்பெருமானார் அங்ஙனன்றிக்கே 'பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறு'மென்று கட்டளையிட்டதாகவும் காண்பதேயாம். இப்படி பிறர்க்குக் கட்டளையிட்ட எம்பெருமானார், முன்னம் தாம் ரஹஸ்யார்த்தங்களை ஏடுபடுத்தி விளக்கியிருக்கவேண்டும். ப்ரஹ்ம ஸூத்ரத்திற்குப் பல வியாக்கியானங்களிட்டவர் ரஹஸ்யப்பொருள் விளக்கமாக ஒரு நூலும் பணித்திலர். அது அவர்க்குப் பெரிய குறையேயாம். அக்குறையைத் தீர்த்துக்கொள்வதற்காகவே அவர் தாமே மாமுனிகளாகத் திருக்கோலம் பூண்டார். இவ்வவதாரத்தில் செய்தருளின காரியங்களே மிக மிகப் புகழத்தக்கவையாயின. ஆனதுபற்றியே இவ்வவதாரத்தனியனுக்கும் வாழிகளுக்குமே நாடும் நகரமும் நன்கறிந்த பெருமை விளைந்து அது சந்திர ஸூரியர்களுள்ள வரையில் விளங்குமதாயிற்று. இம்மஹோபகாரத்தின் மாண்புகண்டே மாமுனிகளுக்குத் தோத்திர நூல்கள் மிகமிகத் தோன்றின. வடமொழியில் வரவரமுநி சதகமென்று இரண்டு சதகநூல்கள் எல்லையில்லாப் பேரின்பவெள்ளமே வடிவெடுத்தனவென்னும்படி தோன்றியுள்ளன. ஒன்று எறும்பியப்பா பணித்தது. மற்றொன்று அஸ்மத்குலகூடஸ்தர் பணித்தது. அன்றியும், "பிள்ளைப்பெருமாளையங்கார் அஷ்டப் பிரபந்தங்கள்" என்னுமாபோலே அஷ்ட திக்கஜாசார்யர்களின் அஷ்டப் பிரபந்தங்களும் தமிழில் தோன்றியுள்ளன. எறும்பியப்பாவென்னுமாசிரியர் வடமொழியில் வரவரமுநி சதகமொன்றேயன்றி வரவரமுநி காவியம், வரவரமுநிசம்பூ, வரவரமுநிகர்ணாம்ருதம், அம்ருதத்வநி இத்யாதிகளான பலபல துதிநூல்களையும் பணித்துள்ளார்.

http://acharya.org

இத் துதிநூல்களெல்லாவற்றிலும் கூறப்பட்டுள்ள விஷயங்களை ஸாரமாக வெடுத்துரைப்போமாயின் 'மாமுனிகளின் திருநாவீறு பரம விலக்ஷணம்' என்பதொன்றேயாம். இராமாநுசநூற்றந்தாதியின்ஸாரப்பொருள் — ஸ்வாமியெம்பெருமானார் புறச்சமயிகளின்வாதங்களை வேரறக்களைந்து வெற்றிபெற்றாரென்பது. *வாதியர்காள்! உங்கள் வாழ்வற்றதே — வாழ்வற்றது தொலை வாதியர்க்கு — தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும்......நீசரும் மாண்டனர்......* இத்தகைய பாசுரங்களே நூற்றந்தாதியில் அடுத்தடுத்துவரும். விரோதி நிரஸன காரியம் அவ்வவதாரத்தில் தலைக்கட்டிற்றாகையாலே இவ்வவதாரத்தில் [மாமுனிகளான அவதாரத்தில்] தாம் அம்ருதபானம் செய்தருள்வதும் தமர்களை அம்ருதபானம் செய்வித்தருள்வதுமாய் நின்றது. இவ்விரண்டவதாரங்களையும் உற்றுநோக்குமளவில் உடையவரை ஸூர்யனாகவும் மாமுனிகளைச் சந்திரனாகவும் அறுதியிடலாம். ஆனால் ஆகாசத்திலுள்ள சந்திரனுக்குக் கலைகள் குறைவதும் ஏறுவதுமாகவேயிருக்கும். மாதத்தில் ஒருநாள்தான் ஸகலகலா பரிபூர்ணனாகச் சந்திரனைப் பார்க்கமுடியும். ஸ்ரீமத் வரவரமுநி சந்திரனுக்கு எப்போதும் ஸகலகலாபரிபூர்ணஸ்திதியொழிய வேறில்லை. அந்தச் சந்திரனுக்குக் களங்க ஸம்பந்தமுள்ளது ப்ரஸித்தம், சாஸ்த்ர ஸித்தமுமாம். இந்தவரவரமுனி சந்திரனுக்கு எவ்விதமான களங்கப்ரஸக்தியுமில்லை.

பண்டிதர், வித்வான், வாக்மி... ...இத்யாதி விருதுகள் பலர்க்குக் கிடைக்கும். கிடைத்தும் வருகிறது. விசதவாக் சிகாமணியென்கிற விருது மாமுனிகளொருவர்க்கே அஸாதாரணம். கூறினது கூறல், மயங்கவைத்தல், நலிந்து பொருள் கொள்ளவைத்தல். இன்னது சொல்லிற்றென்று தெரியாதபடி பேசிவைத்தல், பிறர் மனம் நோவப்பேசுதல், வீணாக வளர்த்துதல், முன்னோர் மொழிந்த மொழிகளுக்கு மாறாகப் பேசுதல், முன்பின் முரண்படப் பேசுதல் முதலிய குற்றங்குறைகளை இதர ஆசிரியர்களின் நூல்களில் பார்க்க இயலும். இங்ஙனே சொல்லுதலால் அபசாரம் நேர்ந்தாலும் இதனை எம்பெருமானும் எம்பெருமானாரும் அபசாரமாகக் கொள்ளார்கள். 'ஸத்யமுக்தம்' என்று திருவுள்ளம் பற்றுவர்களென்பதில் ஐயமில்லை.

பகவத் விஷயத்திற்கு ஊற்றுவாயான நம்பிள்ளை தமது நித்ய காலக்ஷேபத்தை அரங்கன் திருமுன்பே நடத்தியிருந்தும் அவரை ஆசார்யராகக் கொள்ளவோ அவர்க்குத் தனியன் விஜ்ஞாபிக்கவோ மனங்கொண்டிலன் மதிளரங்கன். மாமுனிகள் பக்கலிலே சிஷ்யவ்ருத்தி பண்ணி சந்திர ஸூரியர்களுள்ளவரையில் உலகில் ஓங்கி நிற்க உலகம் புகழும் தனியனை விண்ணப்பம் செய்தது மிகவற்புதம். அந்தத் தனியன் மானிடவாக்கன்று, தெய்வவாக்கேயென்பதை அடுத்த உபந்யாஸத்திலுல் ரூதலிக்கின்றேன்.

(இப்புவியிலரங்கேசற்கீடளித்தவர் பெருமையில்)

அழகியமணவாளனுடைய சிஷ்யத்வவைபவம்

தென்திருவரங்கங்கோயில்கொண்ட தெய்வசிகாமணிப் பெருமான் நம் மணவாள மாமுனிகளுக்குத் தான் சிஷ்யனாகி அவரைத் தனக்கு ஆசார்யனாகக் கொண்டு க்ருதார்த்தனாகக் குதூஹலித்தான். திருவாய்மொழிக்குச் சிறந்த வியாக்கியானமாக அமைந்த ஈடு முப்பத்தாறாயிரப்படியின் விசேஷார்த்தங்களை மணவாள மாமுனிகளின் திருவாக்கினால் கேட்கப்பெறவேணுமென்று ஆவல்கொண்டான். தனது திருக்கோயிலின் திருமுன்பே உள் கருடமண்டபத்தில் எழுந்தருளியிருந்து ஸாதித்தருளவேணுமென்று கட்டளையிட்டனன். அதைக்கேட்டவுடனே மாமுனிகள்,

http://acharya.org

"நாமார் பெரியதிரு மண்டபமார் நம்பெருமாள்
தாமாக வெம்மைத் தனித்தழைத்து — நீமாறன்
செந்தமிழ் வேதத்தின் செம்பொருளை நாளுமிங்கே
வந்துரையென் றேவுவதே வாய்ந்து."

என்று நைச்சியமாய் அநுஸந்தித்து மறுநாள் தொடங்கி ஓராண்டளவும் பகவத் விஷய ப்ரவசனம் நடத்திவந்தார்; அவ்வாண்டில் ஸகல உத்ஸவங்களும் நிறுத்தப் பட்டன. பிறகு ஸமாப்தி தினத்தில் ஸ்ரீரங்கநாதன் ஒரு சிறு குமாரனாய்த் திருவோலக்கத்திலே வந்து நின்று,

"ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்."

என்கிற திவ்யபத்யத்தைக் கைகூப்பி நின்று விஜ்ஞாபித்தனனாக இதிஹாஸம் ப்ரஸித்தமாகவுள்ளது. இதுவொரு அதிசயோக்தியான இதிஹாஸமாயிருக்கலாமென்று சிலர் நினைக்கக்கூடும். மணவாளமாமுனிகளின் திருவடிகளிலும் அவருடைய வைபவங்களிலும் ப்ரதிபத்தியுள்ளவர்களுங்கூட இதுவொரு அதிசயோக்தியாயிருக்குமோவென்று நினைக்கக்கூடும். இத்தனியனில் சொற்கள் அமைந்திருக்கிற அமைப்பை ஆராயுமிடத்தில் இது தெய்வவாக்கேயன்றி மானிட வாக்காக இருக்கமுடியாதென்பதை ப்ராமாணிகர்கள் எளிதிலுணரலாம். "ஏன்? **ஸ்ரீசைலேசதயாபாத்ர** மித்யாதி ச்லோகம் ஸாதாரணமாகவொரு வ்யுத்பந்நனால் இயற்றமுடியாததோ? இதைவிட இன்னமும் அதிசயித்ததாக இயற்றமுடியுமே. இது தெய்வவாக்காகவே யிருக்கவேணுமென்று எதுகொண்டு சொல்வது?" என்னில்; அதை நன்கு நிரூபிக்கிறோம். இந்த ச்லோகமருளிச் செய்தவனாகச் சொல்லப்படுகிற அரங்கத்தம்மான்தானே பண்டு இராமபிரானாகவும் கண்ணபிரானாகவும் திருவவதாரம் செய்தருளியிருந்தவனென்பதில் ஒருவருக்கும் ஸந்தேஹமில்லையே. "மாமுனி வேள்வியைக்காத்து அவபிரதமாட்டிய அடுதிறலயோத்தி யெம்மரசே! அரங்கத்தம்மா!" என்றும், "கோவலனாய் வெண்ணெயுண்டவாயன் அண்டர் கோனணியரங்கன்"! என்றும், "மதுரைமாநகரந்தன்னுள் கவளமால் யானைகொன்ற கண்ணனை யரங்கமாலை" என்றும் ஆழ்வார்கள் ஸ்ரீராம ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாகவே அரங்கநாதனை அருளிச் செய்திருப்பது அபலபிக்க முடியாததன்றோ. அப்படி இராமபிரானாகத் திருவவதரித்திருந்த காலத்திலும் கண்ணபிரானாகத் திருவவதரித்திருந்த காலத்திலும் சில வ்யக்திகளிடத்தில் ஆச்ரயித்து, அவ்விடங்களில் திருவுள்ளத்திற்கு த்ருப்தியில்லாமலே முடிந்திருக்கிறது. ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு குறைகண்டு வெறுப்புடனிருக்க நேர்ந்தது. அந்த வெறுப்பெல்லாந்தீர இப்போது மணவாளமாமுனிகளை ஆச்ரயித்து "ஸதாசார்ய லக்ஷணபூர்த்தியுள்ள இவரை ஆச்ரயிக்கப்பெற்றோமே!" என்று மகிழ்ச்சிகொண்டமை இந்த ஸ்ரீசைலேச ச்லோகத்தில் ஒவ்வொரு விசேஷணத்தினாலும் ஸ்புடமாகக் காட்டப்பட்டிருப்பதை நன்கு நிரூபிக்கின்றோம் காண்மின்:—

1. **ஸ்ரீசைலேசதயாபாத்ரம்** என்பது முதல் விசேஷணம். ராமாவதாரத்தில் சைலேசதயாபாத்ரமானவொரு வ்யக்தியை வணங்கிக் கெட்டேன்; இப்போது ஸ்ரீசைலேசதயாபாத்ரமான வ்யக்தி விசேஷத்தை வணங்கி வாழ்கிறேன் என்கிறது. ராமாவதாரத்தில் வணங்கப்பட்ட சைலேசதயாபாத்ரமான வ்யக்தி யாரென்னில்; ஸுக்ரீவன். சைலமாவது ரிச்யமூக பர்வதம். அதற்கு ஈசர்—மதங்கமுனிவர். அவருடைய தயைக்குப் பாத்ரபூதன் ஸுக்ரீவன் என்பது ஸ்ரீராமாயணம்

http://acharya.org

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினோராவது ஸர்க்கத்திலுள்ள கதையினால் ஸ்பஷ்டம். ஆயிரம் யானை பலங்கொண்டவனான துந்துபியென்னுமரக்கன் எருமைக்கடா வடிவெடுத்துக் கிஷ்கிந்தைக்கு வந்து வாலியைச் சண்டைக்கழைக்க, இருவர்க்கும் பிரபலமான போர் நடந்து வாலியினால் துந்துபி சரீரம் முழுதும் மடியும்படி பிசையப்பட்டு அவ்வரக்கன் மரணமடைந்து தரையில்விழ, வாலி அவனுடைய வுடலை ஒரு யோசனைதூரம்போய்விழும்படி வீசியெறிய, அப்போது அவனது வாயிலிருந்து ரத்தத்துளிகள் காற்றினால் தள்ளுண்டு [சைலேசரான] மதங்கமாமுனிவரின் ஆச்ரமத்தில்போய்விழ, அதைக்கண்ட அம்முனிவர் மிகுந்த சீற்றங்கொண்டு தன் ஞானத்ருஷ்டியினால் இங்ஙனம் தீச்செயல் செய்தவன் வாலியென்றுணர்ந்து "பரிசுத்தமான எனது ஆச்ரமத்தை இவ்விதம் அபரிசுத்தமாக்கினவன் யாவனோ அவனும் அவனன்பர்களும் இவ்வாச்ரம பரிஸரங்களில் வந்தால் உடனே மரணமடையக் கடவர்கள்" என்று சாபமிட்டு அச்சாபம் நடத்தைக்கு வருவதற்கு ஒரு நாள் கெடு கொடுத்திருப்பதாகவும் சொல்ல, உடனே அவ்வனத்திலுள்ள [வாலியைச் சேர்ந்த] வானரர்களெல்லாரும் ஓடிச்சென்றனர். சாபபயத்தினால் வாலி அவ்விடம் வருவதற்கில்லாதபடியாயிற்று. அவனுடைய ஸம்பந்தமற்றவனான ஸுக்ரீவன் மாத்திரம் தனது அன்பர்களுடன் அவ்வாச்ரமத்தில் வாழ்ந்து வந்தனனாதலால் அவன் * சைலேச தயாபாத்ரமாயினன். "**ஸுக்ரீவம் சரணம் கத:**" என்கிறபடியே அவனை வணங்கியிருந்த இராமன் பிறகு அவனாலே மனஸ்தாபப்பட நேர்ந்துவிட்டது. அவ்விஷயம் கிஷ்கிந்தாகாண்டம் முப்பதாவது ஸர்க்கத்தில் விளங்கியதே. அதாவது—மாரிகாலம் முடிந்தபின்பும் ஸுக்ரீவன் சேனைகளைத் திரட்டிக்கொண்டு வராமற்போகவே பெருமாள் இளையோனை நோக்கி 'லக்ஷ்மணா! இன்னமும் சுக்ரீவன் என்னை அடியோடு மறந்து வாளா கிடக்கின்றனன் காண்; செய்ந்நன்றி மறந்த மாபாதகனன்றோ சுக்ரீவன்; நீ உடனே அவனிடஞ்சென்று நான் சொன்னதாகச் சொல்லு; செய்ந்நன்றிமறந்த பாபிஷ்டன் புருஷர்களிற் கடையானவன்; அவன் மரணமடைந்தால் அவனது உடலை மாமிசந்தின்னும் ஜந்துக்களும் தின்னமாட்டா. லக்ஷ்மணா! என் பராக்ரமத்தைச் சுக்ரீவன் நன்றாக அறிந்திருந்தும் சிறிதும் அச்சமில்லாமல் கிடக்கிறானே; வாலி சென்றவழி அவனுக்கும் திறந்திருக்கிறதென்று அவனிடம் கூறு. அவனை உற்றுறவினரோடும் யமபுரமனுப்பச் சித்தமாயிருக்கிறேனென்று தெரிவி' என்று கூறியிருப்பதேயாம். "**ஸுக்ரீவம் நாதமிச்சதி**" என்றும் "**ஸுக்ரீவம் சரணம் கத:**" என்றும் ஈடுபட்டவிடத்திலே இப்படி மனஸ்தாபப்பட நேர்ந்துவிட்டதனால், முன்பு சைலேச தயாபாத்ரபூதனனொருவனை வணங்கி வருந்தின குறைதீர இப்போது ஸ்ரீசைலேசதயாபாத்ரபூதரான மாமுனிகளை வணங்கி வாழ்கின்றேனென்றதாயிற்று. திருமலையாழ்வாரென்கிற திருவாய்மொழிப்பிள்ளையின் இன்னருளுக்கு இலக்கான மாமுனிகளை வணங்குகின்றேனென்கை.

இனி இரண்டாவது விசேஷணம் **நீபக்த்யாதி குணார்ணவம்**. ஸ்ரீராமனாக அவதரித்திருந்த அக்காலத்திலே ஸுக்ரீவன் காலிலே குனிந்ததுபோலவே லவணார்ணவத்தின் காலிலும் குனிந்தமை யுத்தகாண்ட ப்ரஸித்தம். "ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி" என்ற விபீஷணாழ்வானுடைய வாக்கின்படி லவணார்ணவத்தை நோக்கிச் சரணாகதி பண்ணியிருந்து அங்கும் மநஸ்தாபம் மிகுந்தது. அக்கடலரசன் முகங்காட்டிற்றிலனாக, மிகவும் சீறிச் சிவந்து "**சாபமாநய ஸௌமித்ரே!...... ஸாகரம் சோஷயிஷ்யாமி**" — லக்ஷ்மணா! வில்லையும் கொடிய அம்புகளையும் கொண்டுவா; இதோ கடலை வெறுந்தரையாக்கிவிடுகிறேன் என்று கூறி நிக்ரஹத்திலேயன்றோ துணிந்து நின்றது. சரணாகதி பண்ணினவிடத்திலே இது தகுமோ? அப்படியான குறைதீர அந்த லவணார்ணவத்தைவிட்டு நீபக்த்யாதி

http://acharya.org

குணார்ணவத்தை அடிபணிந்து வாழப் பார்க்கிறபடி. ஞானபக்தி விரக்திகளுக்குக் கடலான மாமுனிகளை வணங்குகின்றேனென்கை.

இனி மூன்றாவது விசேஷணம் **யதீந்த்ரப்ரவணம்.** இப்போது ஸ்ரீரங்கநாதனாயிருக்கின்ற பெருமானே "மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்திசெய்ய நின்றான் அரங்கத்தரவினணையான்" என்கிறபடியே திருவேங்கடமுடையானாகவும் நின்ற நிலையிலே எம்பெருமானார்க்கு [ஸ்ரீராமாநுஜர்க்கு] சிஷ்யனாயினன். "அப்பனுக்குச் சங்காழியளித்தருளும் பெருமாள்" என்று போற்றப்படுகின்ற ஸ்ரீராமாநுஜரிடம் திருமலையப்பன் திருவாழி திருச்சங்கு பெற்றதனால் அந்த யதீந்த்ரரிடத்தில் சிஷ்யவ்ருத்தி கொண்டிருந்தது ப்ரஸித்தம். ஆனால் அங்கு மநஸ்தாபமொன்றும் நேரவில்லையாகிலும் இராமாநுச நூற்றந்தாதியில் "தன்னையுற்றாட்செய்யுந் தன்மையினோர்" என்கிற பாட்டைத் திருச்செவி சாத்தினபின்பு 'யதீந்த்ரரிடத்திலே சிஷ்யவ்ருத்தி செய்வதிற் காட்டிலும் யதீந்த்ரப்ரவணரானார் திறத்திலே சிஷ்யவ்ருத்தி செய்வதுதான் சிறந்ததென்று தோன்றிவிட்டது. அந்தப் பாசுரத்தில், தன்னையுற்றாட் செய்வதிற்காட்டிலும் தன்னையுற்றாட் செய்யுந்தன்மையினோர் மன்னு தாமரைத் தாள்தன்னையுற்று ஆட்செய்வாரே சிறந்தவரென்று எம்பெருமானார் திருவுள்ளம்பற்றியதாக வெளியிடப்பட்டுள்ளதன்றோ! அதனால் யதீந்த்ரப்ரவணரை யிறைஞ்சுகின்றேனென்கிறதாயிற்று. மணவாளமாமுனிகளுக்கு யதீந்த்ரப்ரவணரென்ற திருநாமம் சிறப்பாகக் கிடைத்ததென்றுணர்க.

இனி ச்லோகத்தின் ஸமாப்தி ***வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.*** இராமனையும் கண்ணனையுமவதரித்த இரண்டவதாரங்களிலும் இரண்டு முனிகளிடத்திலே சிஷ்யவ்ருத்தி செய்திருந்தானெம்பெருமான். ராமாவதாரத்தில் விச்வாமித்திர முனிவன் பக்கலிலும், க்ருஷ்ணாவதாரத்தில் ஸாந்தீபனிமுனிவன் பக்கலிலும் சிஷ்யவ்ருத்தி செய்திருந்து அவ்விருவரிடத்திலும் வெறுப்பேயாயிற்று எம்பெருமானுக்கு. எங்ஙனேயென்னில், விச்வாமித்திரர் ஸ்ரீராம லக்ஷ்மணர்களுடன் மிதிலையில் ஜனக சக்ரவர்த்தியினது வேள்விச்சாலையில் புகுந்தபின் கௌதம புத்திரரும் ஜநக புரோஹிதருமான சதாநந்தர் [பாலகாண்டம் 51-ஆம் ஸர்க்கம் முதலாக] விச்வாமித்ரருடைய பழைய கதைகளைச் சொல்லத்தொடங்கி அவர் ரஜோகுண தமோகுணங்களுக்கு வசப்பட்டுச்செய்த செயல்களையெல்லாம் சொல்லிவர, அதெல்லாம்கேட்ட இராமன் 'இப்படிப்பட்ட வொருவரையா நாம் ஆசாரியனாகக் கொண்டோம்!' என்று வெறுத்திருக்க நேர்ந்தது. கிருஷ்ணாவதாரத்தில் அவந்திகாபுரியில் வாழ்ந்து வந்த ஸாந்தீபநிமுனிவரிடத்தில் அறுபத்துநான்கு கலைகளையும் பயின்ற கண்ணபிரான் "**ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய**" என்ற உபநிஷத்தின் கட்டளையிலே குரு தக்ஷிணை ஸமர்ப்பிக்கநின்றவளவிலே அம்முனிவர் "மாதவத்தோன் புத்திரன் போய்மறிகடல்வாய்மாண்டானை ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தான்" என்கிறபடியே என்றைக்கோ பிரபாஸ தீர்த்தத்தில் விழுந்து மாண்டுபோன மகனை மீட்டுத்தரவேணுமென்று வேண்ட அப்படியே கொடுத்தனன். கண்ணபிரானை ஸாக்ஷாத் நாராயணமூர்த்தியென்று அறியாதவனல்லன் ஸாந்தீபநி முனிவன். அறிந்துவைத்தும் மோக்ஷபுருஷார்த்தத்தை விரும்பாதே மகனை மீட்டுத்தருகையாகிற க்ஷுத்ர புருஷார்த்தத்தை விரும்பினபடியால் அவன் பக்கலிலும் வெறுப்பேயாயிருந்தது. இப்படி வெறுப்புக்கு இலக்கான இரண்டு முனிகளையும்விட்டு ஸமஸ்த கல்யாண குணக்கடலாய் விரக்தாக்ரேஸரரான ரம்யஜாமாத்ருமுனியை வணங்கி வாழ்கின்றேனென்றதாயிற்று. இவ்வளவு அர்த்த விசேஷங்களைக்கொண்ட இந்த ச்லோகம் எம்பெருமான்தானே சொல்லியிருக்கவேண்டுமேயொழிய ஒரு மனுஷ்யனால் கவிசெய்திருக்க இயலாதன்றோ. எம்பெருமானது ஹ்ருதயந்தன்னிலே உறையும் விஷயங்களன்றோ இவை. இவற்றை ஏறிட்டுக்கொள்ளவும் முடியாதே பிறரொருவர்க்கு. ஆகவே இந்தத் தனியன் தெய்வவாக்கே என்பது திண்ணமாயிற்று. *

http://acharya.org

(இப்புவியிலரங்கேசற்கீடளித்தவர் பெருமையில்)

மாமுனிகளின் வியாக்கியான வைபவோபந்யாஸம்

வியாக்கியானமருளிச்செய்வதில் மாமுனிகளின் திறமை ஒப்புயர்வற்றது. ஸூத்ரம் போன்ற ஸ்ரீ லோகாசார்ய திவ்யஸூக்திகளுக்கு அவதாரிகையிடுகிற அழகும், மூலத்திற்கு அர்த்தமருளிச் செய்கிற வைகரியும், ஆங்காங்கு அர்த்தங்களைப் பிண்டீகரித்து நிகமித்தருளுகிற சைலியும், மதாந்தரங்களைக் கண்டித்தெழுதினாலும்கூட ஒருவருடைய மனமும் நோகாதபடிக்கும் வீணான தூஷண பரிஹாஸங்கள் சிறிதும் புகாதபடிக்கும் எந்த இடத்தை யெடுத்தாலும் சாஸ்த்ரார்த்தமே கைகொள்கனியாம்படிக்கும் 'ஸகல சாஸ்த்ர ஸாகர பாரங்கதர் இவரொருவரே' என்று திண்ணமாகஎண்ணும்படிக்கும், மயங்கவைத்தல் முதலிய குற்றங்களுக்குச் சிறிதுமிடமில்லாதபடிக்கும் ஸ்ரீ ஸூக்திகளருளிச் செய்தவர் மாமுனிகளொருவரே. உண்மையில், இவ்வாசிரியருடைய ஸ்ரீஸூக்திகளை ஸேவித்தபின்பு இன்னொருவரது வாக்கில் வாயை வைத்தால் சுவைக்கேடு தோன்றியே தீரும். பல சொல்லியென்? மற்றையோருடைய நூல்களைக் காணும்போது அவரவர்களது ஞானத்தை அளவிட்டு அறியும்படியாகவுள்ளது. மாமுனிகளின் வியாக்கியானங்களை ஸேவிக்குமளவில் மாருதியை நோக்கி இராமபிரானருளிய வாசகமே நினைவுக்கு வருகிறது- *நாந்ருக்வேத விநீதஸ்ய நாயஜுர்வேததாரிண:, நாஸாமவேதவிதுஷ: சக்யமேவம் ப்ரபாஷிதும்* நூநம் வ்யாகரணம் க்ருத்ஸ்நம் அநேந பஹுதா ச்ருதம்* இத்யாதி ஸ்ரீராமாயணச்லோகங்கள் காண்க.

நம்மாழ்வார் தம்முடைய பெருமையைத் திருவாய்மொழியில் "துவளில் மாமணிமாடம்" "உண்ணுஞ்சோறு பருகுநீர்" முதலான பதிகங்களில் தாமே வெளியிட்டுக்கொண்டவாறுபோல, மாமுனிகள் தாமும் ஆர்த்திப்பிரபந்தத்தில் ஒரு பாசுரத்தினால் தமது பெருமையைத் தாமே அருளிச் செய்யும்படியாயிற்று நம்போல்வார் நிச்சலும் அநுஸந்தித்து உய்வதற்காக. அந்தப்பாசுரம் கேண்மின் :-

தென்னரங்கர் சீருக்கிலக்காகப் பெற்றோம்
தேவனுறை திருப்பதியே யிருப்பாகப் பெற்றோம்
மன்னியசீர் மாறன்கலை யுணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்
முழுது நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்
பின்னையொன்றுதனில்நெஞ்சு போராமற் பெற்றோம்
பிறர்மினுக்கம் பொறாமையிலாப் பெருமையும் பெற்றோமே.

இச்செய்யுளமுதத்தை நம்முரைகொண்டு விரித்துரைத்து அன்பர்கள் களிப்பாராக

(இப்புவியிலரங்கேசற்கீடளித்தவர் பெருமையில்)

மாமுனிகளின் ஸ்ரீ ஸூக்தி தத்வப்ரதர்சநோபந்யாஸம்

உலகில் பேசுவதெல்லாம் பேச்சல்ல, எழுதுவதெல்லாம் எழுத்தல்ல. பட்டர் ஸ்ரீ குணரத்நகோசத்தில் "அநாக்ராதத்வம் பஹுகுணபரீணாஹி" என்று ஆரம்பித்து ஐந்து விசேஷணங்களிட்டு வாக்விலஸிதம் இப்படி இருக்கவேணுமென்றருளிச்செய்கிறார். அப்படிப்பட்ட வாக்விலஸிதம் மணவாளமாமுனிகளினுடையதேயாகும்.

http://acharya.org

"பதாநாம் ஸௌப்ராத்ராத் அநிமிஷநிஷேவ்யம் ச்ரவணயோ:" என்று அந்தச் லோகத்தில் பட்டர் பணித்த அதிசயம் மாமுனிகளின் திவ்ய ஸூக்திகளில் தவிர வேறெங்கும் காணக்கிடைக்காது. சொல்லமைப்பென்பதொன்றுண்டே அது மற்றையோருடைய வியாக்கியானங்களில் ஸாதாரணமாகவேயிருக்கும். நம் மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களில் அது ஆச்சரியம் அற்புதம் அந்யாத்ருசம் என்றே சொல்லத்தக்கதாக விளங்கும். இதைத் தெரிந்துகொள்வது எல்லார்க்கும் எளிதன்று. முராரி யென்கிற வொரு மஹாகவி "அப்திர் லங்கித ஏவ வானரபடை: கிந்த்வஸ்ய கம்பீரதாம் ஆபாதாலநிமக்நபீவர தநுர் ஜாநாதி மந்தாசல:" என்கிறன். வானர முதலிகள் கடலைக் கடந்துவிட்டார் களானாலும் மேலெழச்சென்ற வவர்களுக்குக் கடலின் ஆழம் சிறிதும் தெரியாதென்றும் மந்தரமலையொன்றே அதனையறியவல்லதென்றும் இந்த ச்லோகத்தில் கூறப்பட்டிருப்பதுபோல, ஸாரஸ்வதஸாரத்தை உட்புகுந்து மர்மஸ்பர்சியாக உணரப்பெற்றவர் கடல்சூழ்ந்த மண்ணுலகுக்குள் மணவாளமாமுனிகளொருவரேயென்று குடப்பாம்பில் கையிட்டுரைப்பர் அவருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளில் நன்கு ஆழ்ந்தவர்கள். திருப்பதியில் வாழ்ந்த ஸ்ரீமத் திருமலை அனந்தாண்பிள்ளை புரிசை ஸ்வாமிபோல்வார்.

அஸூயையினாலும் த்வேஷத்தினாலும் பலர் அவருடைய ஸ்ரீஸூக்தியமுதக் கடலில் அவகாஹிக்கப்புகுவதில்லை. அவகாஹிக்கும் பாக்யம் பெற்றவர்களிலும் பலர் 'மணிப்ரவாள ஸ்ரீஸூக்திதானே' என்று ஸாமான்யமாக நினைத்து மேலெழப் பார்த்துச் செல்வர்கள். "தேநாவலோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம்" என்று பட்டர் அருளிச்செய்தபடி அநுபவபாக்ய பரிபாகமுள்ளவர்கள் யாரோ சில ஸூக்ருதிகளேயாவர்.

மாமுனிகளின் திவ்யக்ரந்தங்களுக்குள் தத்வத்ரய வியாக்கியானமொன்றை ஸேவிக்குங்கால் — "ஸகலசாஸ்த்ரங்களிலும் ஸ்ரீபாஷ்ய ஸூதாநிதியிலும் ஆழ அவகாஹித்த மஹாஜ்ஞானநிதி இவரல்லது வேறு எவருமில்லை" என்று சபதமிட்டுரைக்கலாம். ஞானம் என்பது வேறு, வ்யுத்பத்தி என்பதுவேறு. அந்த வ்யுத்பத்தியானது ஸகலதந்த்ரங்களிலும் மணவாளமாமுனிகளுக்கு மிகவும் அதிசயிக்கத்தக்கது. இதை நிரூபிக்க அவருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளில் பலபலவிடங்களுண்டு. அவற்றை 'விசதவாக் சிகாமணி வாக்வைசத்யம்' என்கிற நூலிலே விரிவுக்கு அஞ்சாமல் விளக்கியிருக்கின்றேன். ஓரிடந்தன்னையே இங்குக் குறிப்பிடுகிறேன். தத்வத்ரயமென்னும் ஸ்ரீலோகாசார்ய க்ரந்தத்தில் ஈச்வரப்ரகரணத்தில்(22)"இதுக்கு ப்ரயோஜனம் கேவலலீலை" என்றொரு சூர்ணையுள்ளது. எம்பெருமானது ஜகத் ஸ்ருஷ்டியாகிறவியாபாரத்திற்கு வெறும் லீலையேப்ரயோஜனம் என்றபடி. ஸ்ரீபாஷ்யத்திலும் (ஸூ. 171.) *லோகவத்து லீலாகைவல்யம்* என்கிற ஸூத்ரத்தின் பாஷ்யத்திலே "ஜகத்ஸர்கே லீலைவ கேவலா ப்ரயோஜநம்* என்றும் *பரஸ்ய ப்ரஹ்மணோ லீலைவ ப்ரயோஜநம்* என்றும் ஸ்ரீஸூக்தி விந்யாஸமுள்ளது. இதில் எந்த வித்வானுக்கும் எவ்விதமான விசிகித்ஸையும் எளிதாகத் தோன்றமாட்டாது ஆனால் இங்கு மணவாளமாமுனிகளின் ப்ரஜ்ஞாவிசேஷம் ஆராய்ச்சி செய்யப்புகுந்தவிதம் ஊன்றி நோக்கத்தக்கது. லீலையாவது என்ன? என்று கேட்டால் அதற்குப் பொருள் சொல்லவேண்டுமே. ஒரு காரியம் செய்யுமிடத்து அப்போதுண்டாகுமொரு மனோவிநோதமொழிய பிற்பாடு வருவதொரு பலனைக் கணிசியாமல் பண்ணும் வியாபாரத்திற்கு லீலையென்று பெயர். சிறுவன் லீலைசெய்கிறனென்றால் விளையாடல் என்கிறவொரு வியாபாரத்தைச் செய்கிறனென்பதன்றோ பொருளாகிறது. ஆகவே லீலையென்பது ஒரு வியாபாரமென்று முடிந்தது. "ஸ்ருஷ்டிக்கு லீலை ப்ரயோஜநம்" என்றால் இந்த வாக்யம் ஸமந்விதமாகிறதாவென்று பார்க்கவேணும். ஸ்ருஷ்டியும் வியாபாரமாயிற்று. ஸ்ருஷ்டியாகிற வியாபாரத்திற்கு லீலையாகிற வியாபாரம் ப்ரயோஜன மென்றதாகத் தேறுகின்றது;

http://acharya.org

'ஸ்ருஷ்டிதான் லீலை' என்று ஸமாநாதிகரணமாகச் சொல்லவேணுமேயொழிய 'ஸ்ருஷ்டிக்கு லீலை ப்ரயோஜநம்' என்று வ்யதிகரணமாக வாக்விந்யாஸம் பண்ணுவதில் ஸமந்வயம் இல்லைபோல் காண்கிறதல்லவா? ஸ்ரீபாஷ்யகாரரும் பிள்ளை லோகாசார்யரும் வ்யதிகரணமாக வாக்விந்யாஸம் செய்திருப்பதைக் கீழே யெடுத்துக்காட்டினோம். இது எப்படி பொருந்தும்? என்கிற சங்கை தோன்றுவதே ஸாமான்ய ஞானிகளுக்கு அரிது. தத்வத்ரயவியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் இந்த சங்கையை ஒருவாறு உத்தாபனம்பண்ணி ஸமாதானமுமருளிச் செய்திருக்குமழகு ஆழ்ந்த ஞானம் படைத்தவர்களுக்கே அவகாஹிக்க நிலமானது; அவ்விடத்து ஸ்ரீஸூக்திகள் காண்மின் :—

> **''லீலையாவது தாதாத்விகரஸமொழிய காலாந்தரத்தில் வருவதொரு பலத்தைக் கணிசியாமல் பண்ணும் வ்யாபாரமேயாகிலும் ''இதுக்குப்ரயோஜனம்'' என்று ஸ்ருஷ்டிரூப வ்யாபாரத்துக்கு ப்ரயோஜனமாகச் சொல்லுகையாலே தாதாத்விகரஸ மாத்ரத்தைச் சொல்லிற்றாகக் கடவது.''** என்பது மாமுனிகளின் அமுதமொழி.

இதில் ''லீலையாவது......பண்ணும் வியாபாரமேயாகிலும்'' என்கிற வாக்யம் வெகு கம்பீரமானது. ''பண்ணும் வ்யாபாரமாகையாலே *இதுக்குப்ரயோஜனம் கேவலலீலை* என்கிற மூல ஸ்ரீஸூக்தி ஸமந்விதமாக மாட்டாதாகிலும்'' என்பது இங்கு விவக்ஷிதம். மூல ஸ்ரீஸூக்தி அஸமஞ்ஜஸமாயிருக்கிறது என்பதைத் தம் திருவாக்கினால் வெளியிடக் கூசி வாக்யமருளிச்செய்கிறவழகு என்போல்வார் எடுத்துரைக்கக் கூடியதோ? ''அகிலபுவந ஜந்மஸ்தேம பங்காதிலீலே'' என்றும் ''ஜகதுத்பத்தி ஸ்திதி ஸம்ஹார அந்த:ப்ரவேச நியமநாதிலீலம்'' என்றும் ஸமாநாதிகரணமாகவே அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யகாரருங்கூட ''ஜகத் ஸ்ருஷ்டௌ லீலைவ ப்ரயோஜநம்'' என்று வ்யதிகரணமாக அருளிச்செய்தபடியால் அதையடியொற்றிப் பிள்ளை லோகாசார்யர் (மூலத்தில்) 'இதுக்குப்ரயோஜநம் கேவலலீலை' என்று அருளிச்செய்திருந்தாலும் இது சிறிது திருத்தியமைக்கவேண்டிய ஸ்ரீஸூக்தியேயாகும்; ''இதுக்கொரு ப்ரயோஜனமில்லை; இது கேவலலீலையே'' என்று வாக்ய ஸந்நிவேசமிருந்திருக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றிய மாமுனிகள் அதைப் பூப்பறித்தாப்போல் காட்டியிருக்கிறவிதம் சாஸ்த்ர வ்யுத்பத்தியில் ஆழ்ந்திருக்குமவர்களுக்கே நிலமாகக்கூடியது. மாமுனிகள் காட்டியருளிய ஸமாதானம் எத்தகைத்தென்னில்; தற்காலத்தில் தோன்றும் ரஸத்திற்கு ஹேதுவான வ்யாபாரத்திற்குத்தான் லீலையென்று பெயர்; ஆனால் இங்கு மூலம் ஸமந்விதமாவதற்காக அவ்வர்த்தத்தைச் சிறிது குறைத்துக்கொள்ளவேண்டும். தற்காலத்தில் தோன்றும் ரஸத்துக்கு ஹேதுவான வ்யாபாரம் என்கிறவரையில் போகாமல் தற்காலத்தில் தோன்றும் ரஸம் என்றமட்டில் லீலாபதார்த்தமாகக்கொண்டால் மூலம் ஸமந்விதமாய்விடுகிறது என்று நிரூபித்தருளினாராயிற்று. இது லாக்ஷணிக நிர்வாஹம், ஔபசாரிக நிர்வாஹம் எனப்படும். ''ஜகத் ஸ்ருஷ்டௌ லீலைவ ப்ரயோஜநம்'' என்கிற ஸ்ரீபாஷ்யகாரருடைய திவ்யஸூக்தியை ஒரு சதுச்சாஸ்த்ர வித்வானிடத்தில் கொடுத்து சங்கையை வெளியிட்டு ஸமாதானம் பண்ணச் சொன்னால் வெகு ச்ரமப்பட்டு நாலு நாழிகை வாக்யராசிகளைப் பரப்பிக் காடுபாய்ந்து ஏதோ கூறுவர். சுருக்கமாக அதை எழுதிக்கொடுக்கவேணுமென்று கேட்டாலோ ஒரு வித்வானாலும் அது த்ருப்திகரமாகச் செய்யமுடியாதென்பதை ஸத்யமாகச் சொல்லுகிறேனடியேன். மாமுனிகள் **''தாதாத்விகரஸமாத்ரத்தைச் சொல்லிற்றாகக் கடவது''** என்ற மிகவழகியவொரு சிறு வாக்கியத்தில் முடித்தருளினது அவரொருவர்க்கே அஸாதாரணமான பாண்டித்ய ப்ரகர்ஷத்திற்குக் குன்றிலிட்ட விளக்காகும்.

http://acharya.org

இதை இங்கு நாம் எடுத்துக்காட்டியது — மாமுனிகள் இப்படி ஆழ்ந்து காண்பவர் என்பதற்காக மாத்திரமல்ல; இங்ஙனே நலிந்து நிர்வஹிக்கக்கூடிய ஸ்ரீஸூக்திகளையருளிச் செய்யுமியல்பு மாமுனிகளிடம் சிறிதும் காணக்கிடைக்காது என்பதற்காகவுமென்க. **விசதவாக்சிகாமணி** பட்டம் இவரொருவர்க்கே தகும்.

ஆராய்ச்சியில் தலைசிறந்த இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகள் மஹாசாஸ்த்ரஜ்ஞர்கள் உள்குழையத் தக்கவை மாமுனிகளின் ரஹஸ்ய வியாக்யான க்ரந்தங்களிலே நிதியாக அமைந்திருப்பதை உற்றுநோக்குங்கால் 'நீறுபூத்த நெருப்பு' என்றொரு பழமொழியுண்டே, அது மாமுனிகளைத்தான் சேருமென்பர் பெரியோர். ஸ்ரீஸூக்தியோ தமிழ்; அர்த்தங்களோ கஹநசாஸ்த்ரார்த்தங்கள். அருளிச்செய்த மஹாசார்யரோ டம்பமென்பது சிறிதுமில்லாதவர். அவருடைய ஞானபூர்த்தியும் ஆத்மகுண பூர்த்தியுமன்றோ அழகியமணவாளனை அடிபணியச்செய்தன. இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த பேராசிரியரை வழிபடும் மரபில் தோன்றினேமென்கிற பாக்யவிசேஷத்தை நினைதொறும்சொல்லுந்தொறும்நெஞ்சிடிந்துகுமடியேனுக்கு. *

(இப்புவியிலரங்கேசற்கீடளித்தவர் பெருமையில்)

மணவாளமாமுனிகளின் அஷ்டதிக்கஜாசாரியர்கள்

மணவாளமாமுனிகளின் சிஷ்ய வர்க்கங்களில் எண்மர் தலைமைபெற்று **அஷ்டதிக்கஜங்க**ளென்கிற சிறப்புப்பெயரும் பெற்று உலகம்போற்ற நின்றார்கள். அவர்களது திருநாமம்:— 1. வானமாமலை ஜீயர், 2. பட்டர்பிரான் ஜீயர், 3. திருவேங்கட ராமாநுஜ ஜீயர், 4. கோயிலண்ணன், 5. பிரதிவாதி பயங்கரமண்ணன், 6. எறும்பியப்பா, 7. அப்பிள்ளை, 8. அப்பிள்ளார். இவர்களுள் 'எறும்பியப்பா' என்பவர் வந்து ஆச்ரயித்தவிதம் வெகு விசித்திரமானது. சோளஸிம்ஹபுரமென்று பிரசித்தமான திருக்கடிகைக்கு அருகிலுள்ள எறும்பியென்னும் அக்ரஹாரத்திலே தோன்றி தேவராஜாசார்யரென்று திருநாமம் பூண்டிருந்த இவர் மஹாவித்வான். இவர் ஒருகால் ஸ்ரீரங்கத்திற்கு வந்து அங்கே தம் உறவினரான அண்ணனது திருமாளிகையில் தங்கியிருக்கையில் அவரோடுகூட மணவாளமாமுனிகளின் காலக்ஷேப கோஷ்டியிலும் அந்வயிக்கப் பாக்கியம் பெற்றார். அப்போது மாமுனிகளின் ஸர்வதோமுகமான ப்ரஜ்ஞாவிசேஷத்தைக் கண்டுகளித்தும், அவரது திருவடிகளில் ஆச்ரயிக்க பாக்யபரிபாகம் விளையாமலே அங்கு தீர்த்த ப்ரஸாதங்களும் பெறுமலே தம்மூருக்குத் திரும்பிவிட்டார். தம் திருமாளிகையிலுள்ள பெருமாளுக்குத் திருவாராதனம் கண்டருளப் பண்ணப் புகுந்து கோவிலாழ்வார் திருக்காப்பை நீக்கப் பார்க்கையில் திருக்காப்பு திறக்கப் பெற்றதில்லை. பல வுபாயங்கள் செய்து பார்த்தும் ஒருபடியாலும் திறக்கப்போகாமையாலே மிக வருந்தி அமுது செய்யாமலே, 'இது என்ன அபசார பலமோ!' என்று மனம் நொந்து மூர்ச்சித்துக் கிடந்தார். அன்றிராக்கனவில் அவருடைய ஆராதனப் பெருமாளான சக்ரவர்த்தி திருமகன் எதிரேவந்து தோன்றி 'நமக்கு ஆருயிராய் உலகுக்கு ஒருயிரான மணவாளமாமுனிகளின் திருவடிகளிலே பணியாமல் மீண்டு வந்தீராதலால் உமக்கு நாம் கதவு திறந்திலோம்; ஆதிசேஷன் தானே மாமுனிகளாக வந்து அவதரித்தமை அறிவீராக; அவரது திருவடிகளிற் சென்று ஆச்ரயித்துத் தூய்மைபெற்று வந்தாலன்றி உமது கையில் நாம் திருவாராதனம் கொள்வதில்லை' என்று சொல்லி மறைய, அப்பாவும் துயிலெழுந்து மிக வியந்து இவ்வதிசயத்தை அன்பர்களுக்கு அறிவித்து அப்போதே புறப்பட்டுத் திருவரங்கம் சென்று சேர்ந்து மாமுனிகளின் திருவடி

http://acharya.org

களிலே வேரற்ற மரம்போலே விழுந்து இச்செய்தியை விண்ணப்பம்செய்து அபராத க்ஷாமணம் செய்துகொண்டு 'இனி அடியேனுக்கு இத்திருவடி நிழலொழியப் புகலிடம் வேறொன்றில்லை; நெறிகாட்டி நீக்கப் பாராதே அடியேனை அத்தாணிச் சேவகத்திற்கு ஆட்படுத்திக் கொண்டருளவேணும்' என்று மிகவும் பிரார்த்தித்து மாமுனிகளின் பரிபூர்ண அநுக்ரஹத்தைப்பெற்று அன்று தொடங்கி ஸகலார்த்தங்களும் சிக்ஷிக்கப்பெற்றுக் கிருதார்த்தரானார். இவர் பரமபக்தி தலையெடுத்து மாமுனிகள் விஷயமான காவ்யம் நாடகம் சம்பூ ஸ்தோத்ரங்கள் பலவும் பணித்தார். இவர் தம்முடைய இல்லத்தில் பரம்பரையாக ஆராதிக்கப்பட்டுவந்த சக்ரவர்த்தி திருமகன் ஸ்தானத்தில் மணவாளமாமுனிகளையே எழுந்தருளப் பண்ணி ஆராதித்து வந்தார். இதனை (எறும்பியப்பா) தாமே "வரவரமுநிர் பூயஸா பாஸமாநோ ரக்ஷத்வஸ்மாந் ரகுகுலபதே ராஸ்திதோ பத்ரபீடம்" என்கிற தமது ஸ்ரீஸூக்தியினால் வெளியிட்டருளினர். ... ... *

(இப்புவியிலரங்கேசற்கீடளித்தவர் பெருமையில்)

மைஸூரனந்தாழ்வான் கண்ட மாமுனிகள் பெருமை

மணவாள மாமுனிகளை எம்பெருமானாருடைய அபராவதாரமென்று அஷ்டதிக்கஜாசார்யர்களனைவரும் ஸாக்ஷாதநுபவத்தினால் நிர்ணயித்துப் பல பாசுரங்களும் ச்லோகங்களும் பணித்துள்ளார்கள். அவை ஜகத் ப்ரஸித்தமானவை. அவ்வளவு ப்ரஸித்தியில்லாமல் வித்வத் கோஷ்டியில் மட்டும் ப்ரஸித்தமானதொரு விஷயம் இங்கு விஜ்ஞாபிக்கப்படுகிறது. திருநாராயணபுரத்தில் மண்டயம் அனந்தாழ்வாரென்று ஸுப்ரஸித்தரான மஹாவித்வான் எழுந்தருளியிருந்தார். மைஸூர் அனந்தாழ்வானென்றும் அவர் வழங்கப்படுவதுண்டு. **வேதாந்த வாதாவளி** யென்று ஜகத்ப்ரஸித்தமான மஹா க்ரந்தரத்னங்களை யருளிச் செய்தவர் இவரே. இவர் ஜீவித்திருந்த காலம் மிகவும் ஸமீபமானதே. (அதாவது சென்ற நூற்றாண்டினிடையில்எழுந்தருளியிருந்தவர்.) இவருடைய திருவுருவப்படம் ஸேவிக்கலாகிறது. அவருடைய சதுச் சாஸ்த்ர பாண்டித்ய ப்ரபாவங்களைக் கொண்டாடாதவர்களில்லை. அவரிடத்தில் ஸாமாந்ய சாஸ்த்ரங்கள் பயின்ற வித்வான்களின் சிஷ்யர்கள் [பல மதஸ்தர்கள்] இற்றைக்கும் ப்ரஸித்திபெற்று விளங்குகிறார்கள். இம்மஹாவித்வான் மைஸூர் ஸ்ரீபரகாலமடத்தில் ஆஸ்தானவித்வானாக அமர்த்தப்பட்டிருந்தார். அங்கு இதர ஸம்ப்ரதாயஸ்தர்களான பல வித்வான்களிடையே இவரொருவரே ஸ்ரீமத் வரவரமுநி ஸம்ப்ரதாயஸ்தராக விளங்கிவந்தார். இவரையும் ஸ்வஸம்ப்ரதாயஸ்தராக்கிக் கொள்ளவேணுமென்று அந்த ஸ்ரீபரகால மடாதிபதி ஸ்வாமிக்குத் தோன்றி அந்த அவாவை அடிக்கடி தெரிவித்துவர, இவர் அதற்கு இடங்கொடாது வந்தார். கடைசியாக, விசேஷ த்ரவ்யோபபத்திகளையும் ஜாகீர் ஜமீன்களையும் கொடுப்பதாகச் சொல்லி நிர்ப்பந்திக்கவே இவரும் சிறிது இசைவுகாட்டியிருந்தார். 'நாளை காலைமுதல் திருமண்காப்பை மாற்றிக்கொள்வது' என்று ஒருநாள் இவர் எண்ணியிருக்கையில் அன்றிரவு கனவிலே எம்பெருமானார் ஆதிசேஷரூபேண இவர்க்கு ஸேவை ஸாதித்து உடனே மணவாளமாமுனிகளான திருக்கோலத்துடனும் ஸேவைஸாதித்து 'நாமே அவர், அவரே நாம்' என்று சொல்லி மறைந்தருளினார். இவரும் துயில் விழித்தெழுந்து எம்பெருமானாருடைய கருணைத் திறத்திற்கு மிகவும் வியந்து தாம் எண்ணியிருந்த எண்ணத்திற்காக மிகவும் அநுதபித்து, காலையநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஒரு ச்லோகத்தையெழுதி அந்த மடாதிபதி ஸ்வாமி ஸன்னிதியிலே ஸமர்ப்பித்தார். அந்த ச்லோகமாவது:-

http://acharya.org

"சேஷ: ஸ்ரீமாந் நிகமமகுடயுக்மரக்ஷாப்ரவ்ருத்த:
ஸ்ரீமத்ராமாவரஜமுநிதாம் ஸௌம்யஜாமாத்ருதாஞ்ச,
விந்தந் த்ருப்யத்விமத படலீபாடநோத்தாம ஸூக்தி:
பூயாத் பவ்யப்ரதிதமஹிமா ச்ரேயஸே பூயஸே ந:" — என்பது.

அந்த ஸமயத்தில் அந்த அனந்தாழ்வான்ஸ்வாமி ந்யாய பாஸ்கரமென்கிற மஹா க்ரந்தமெழுதிக்கொண்டிருந்தார். அதில் இரண்டாவது பரிச்சேதமெழுதி வருகையில் இந்த மஹாநுக்ரஹம் நேர்ந்தபடியினுல் அந்த மஹாக்ரந்தத்தோடு கூடவே இவ்வநுக்ரஹ விசேஷமும் சாச்வதமாக உலகில் விளங்கவேணுமென்று கருதி மேலே குறித்த ச்லோகத்தை அந்த க்ரந்தத்தில் இரண்டாவது பரிச்சேதத்தில் விந்யாஸம் செய்தருளித் தாமே அச்சிட்டு வெளியிட்டார். இந்த ச்லோகத்தின் கருத்தாவது — உபய வேதாந்தங்களையும் காத்தருளவேணுமென்று திருவுள்ளங்கொண்ட திருவனந்தாழ்வான் எம்பெருமானுராகத் திருவவதரித்து ஸம்ஸ்க்ருத வேதாந்த குத்ருஷ்டிகளை நிரஸித்தும், மணவாளமாமுனிகளாகத் திருவவதரித்து த்ராவிட வேதாந்த குத்ருஷ்டிகளை நிரஸித்தும் இப்படி உபயவேதாந்த ப்ரதிஷ்டாபனம் செய்து பெருமைபெற்றனன். அத்திருவனந்தாழ்வான் நமக்கு ஸகலவித நன்மைகளும் அளித்தருளவேணுமென்பதாம். ... ... *

(இப்புவியிலரங்கேசற்கீடளித்தவர் பெருமையில்)

திருவாய்மொழி நூற்றந்தாதியின் பெருமை

'திருவாய்மொழி நூற்றந்தாதி மணவாளமாமுனிகளருளிச்செய்தது' என்றுலே போதும் இதன் பெருமையையுணர. உலகில் தோன்றியுள்ள அந்தாதி வெண்பா நூல்களில் நிகரற்ற நூல் இஃதொன்றேயாம். ஆசிரியர்களருளிச்செய்த எந்த நூலையெடுத்துக்கொண்டாலும் 'இது நிகரற்றது' 'இஃது ஒப்பற்றது' என்றே சொல்லும்படியாயிருக்கும். அப்படிச் சொல்லுவதன்று இது. இதன் சிறப்பை யாவருமிசையும்படி நன்கு நிரூபிக்கிறேன் கேண்மின். திருவாய்மொழியாயிரமும் அந்தாதியே; இயற்பாவில் எட்டு திவ்வியப் பிரபந்தங்கள் அந்தாதியே. கண்ணிநுண் சிறுத்தாம்பு அந்தாதியே; பெரியாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் தம்தம் திருமொழிகளில் ஒவ்வொருபதிகம் அந்தாதியாகப் பாடியுள்ளார்கள். கிம் பஹுநா? உலகில் பல்லாயிரம் அந்தாதிப் பிரபந்தங்கள் தோன்றியுள்ளன. அவை யெல்லாவற்றினுடையவும் ப்ரக்ரியை எப்படிப்பட்டதென்றுல் செய்யுளைத் தொடங்கவேண்டியது நூலாசிரியர்களின் தம்தம் இஷ்டத்தைப் பொறுத்தது. செய்யுளை முடிக்கவேண்டியதும் தங்கள் தங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. தங்களிஷ்டப்படி முடித்த சீரையோ சொல்லையோ எழுத்தையோ தொட்டுக்கொண்டு மேற்பாட்டு ஆரம்பம் செய்வது என்பதொன்றே அந்தாதிபாடுகிறவர்களனைவருங்கொண்ட நியதியாகும். (உதாரணம்.) பொய்கையாழ்வார் *வையம் தகளியா* என்று தொடங்கினுர். (வையம்) என்று ஆரம்பம் செய்தது அவரிஷ்டமே. கடையடியை "இடராழி நீங்குகவே யென்று" என்று முடித்தார். இதுவும் அவரிஷ்டமே. அவர் "இடராழிநீங்குகவேயிங்கு" என்றுலும் கேள்வியில்லை. அந்தாதிபாடுவார் வெண்பாவிலோ கட்டளைக் கலித்துறையிலோ முடிக்குஞ்சொல்லை அவரவர்களிஷ்டப்படி பாடலாம்—பாடியிருக்கிறுர்கள் என்பது நிர்விவாதம்.

இனி மணவாளமாமுனிகளின் திருவாய்மொழி நூற்றந்தாதியின் அமைப்பைப்பற்றிக் கேண்மின். நம்மாழ்வார் "உயர்வற" என்று திருவாய்மொழி தொடங்கினபடியால் அதற்குக் கட்டுப்பட்டு 'உயர்வே பரன்படியை' என்று தம்முடைய

http://acharya.org

அந்தாதியைத் தொடங்கினர். (திருவாய்மொழியில்) அடுத்த பதிகம் (வீடுமின் முற்றவும்) என்று தொடங்குவதால் (மாமுனிகள் தம்முடைய அந்தாதி) அத்தோடும் சேரும்படி "வேராகவே விளையும் வீடு" என்று (வீடு) என்பதையே கடைச்சீராக வைத்துப் பாசுரத்தை முடித்தார். அதற்கு மேற்பாட்டைத் தம் இஷ்டப்படி தொடங்காமல் தமது நூலுக்கும் அந்தாதியடைவு குலையாதபடிக்கு (வீடுசெய்து) என்றே தொடங்கினர். நூறு பாட்டும் இந்த நிபந்தனைக்குக் கட்டுப்பட்டே அவதரித்துள்ளன. செய்யுளுக்குரிய மோனையின்பமும் எதுகையின்பமுங்கூட தம்மிஷ்டத்தைப் பொறுத்ததல்லவென்பதை உற்றுநோக்கவேணும். (வீடு) என்றதற்கு மோனை சேரும்படி (வேராகவே) என்ன வேண்டிற்று. (வேராக) என்றதற்கு எதுகை சேரும்படி முன்னடியில் (வாராமல்) என்ன வேண்டிற்று. இவ்வளவோடுங்கூட ஒவ்வொரு பதிகத்தின் ஸாரத்தையும் ஒவ்வொரு வெண்பாவில் அடக்கவேண்டிற்று. பாட்டுத்தோறும் நம்மாழ்வார் திருநாமமும் தவருது வரவேண்டியதாயிற்று. இத்தனை நிர்ப்பந்தங்களைக்கொண்டு பாடின அந்தாதி நூல் இஃதொன்று தவிர மாநிலத்தில் வேறொன்று கிடையாது. உணரெனில் காட்டலாம் "மாமுனிகள் திருவாய்மொழிக்கு இங்ஙனே நூற்றந்தாதி அமைத்தார்; நாம் பெரிய திருமொழிக்கு இங்ஙனே ஒரு பிரபந்தமிடுவோம்" என்று சங்கற்பித்து ஒரு கவி முயன்றால் அப்போதுதான் இதன் அருமை பெருமை தெரியும். ... *

(இப்புவியிலரங்கேசற்கீடளித்தவர் பெருமையில்)

மாமுனிவன் மேற்கோள்விளக்கு

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த நான்கு ரஹஸ்ய வியாக்கியானங்களில் ஆளவந்தார்முதல் வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர், தேசிகன் வரையிலுமுள்ள ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளை மேற்கோளாக எடுத்துக்காட்டியிருக்குமிடங்களின் விவரணம். மேற்கோள்களுக்கு மாமுனிகளெழுதியருளின விவரணங்கள் இங்குக் காட்டவில்லை.

1. ஆளவந்தார் ஸ்ரீஸூக்திகள்

(ஸ்ரீவசநபூஷணம்) சூர்ணை 182. * அநந்தரம் பரமாசார்யரான ஆளவந்தார் வசனத்தை யருளிச் செய்கிருர் * ந தேஹம் ந ப்ராணந்......*

(ஸ்ரீவசந.) 259. "ஆகையிறே நாதமுனிகளுடைய திவ்ய வைபவத்தை யருளிச்செய்கிற ஆளவந்தார் * அசிந்த்யாத்புதாக்லிஷ்டஜ்ஞாந வைராக்யராசயே — அகாத பகவத்பக்தி ஸிந்தவே * என்றருளிச் செய்தது.

(ஸ்ரீவசந.) 323. * மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி: * என்று ஐஹிகபோகங்களையும், ஸர்வம் என்று அநுக்த ஸகல கதநத்தாலே மந்த்ர தேவதாபலாதிகளையுமெடுத்து இத்தனையும் ஆழ்வார் திருவடிகளே யென்று......... இவ்வர்த்தத்தைப் பரமாசார்யரான ஆளவந்தாருமருளிச்செய்தாரென்கை.

(ஸ்ரீவசந.) 380. இப்படி ஆழ்வாரருளிச் செய்த இவ்வர்த்தத்தை * நிராஸகஸ்யாபி ந தாவதுத்ஸஹே......என்று ஆளவந்தாருமருளிச்செய்தாரிறே.

(தத்வத்ரய) சூர்ணை 3. * சிதசிதீச்வரதத்ஸ்வபாவ * என்று ஆளவந்தாரும்......

குறிப்பு. 182. 259. என்றிப்படி குறிக்கும் லக்கங்களெல்லாம் அந்தந்த க்ரந்தங்களிலுள்ள சூர்ணைகளுக்கிட்டிருக்கிற லக்கங்கள். ஆங்காங்கு மணவாள மாமுனிகளின் வியாக்கியானத்தில் இவை காண்க.

http://acharya.org

(தத்வத்ரய.) 45. * ஸ்வாஸசய்யாஸந.........சேஷ இதீரிதே ஜநை: * என்றிறே ஆளவந்தாருமருளிச்செய்தது. மற்றுமுள்ள ததீயரைப்போலே அநியமமாயிராதே ஸர்வேச்வரன் அமுது செய்த சேஷமொழிய அமுது செய்யாத நியமத்தைப்பற்ற சேஷாசநரென்று ஸேனை முதலியாரை நிரூபிக்கிறது. *த்வதீயபுக்தோஜ்ஜித சேஷ போஜிநா * என்றுரிறே ஆளவந்தாரும்.

,, 70. * ஆச்ரயாதந்யதோ வ்ருத்தே ராச்ரயேண ஸமந்வயாத், த்ரவ்யத்வஞ்ச குணத்வஞ்ச ஜ்ஞாநஸ்யைவோபபத்யதே * என்றிறே ஆளவந்தாரருளிச்செய்தது.

,, 92. இந்த மதநிராகரணார்த்தமாகவிறே ஆளவந்தார் * ந்ருணா: ப்ரதாநம் * என்று பிரித்தருளிச்செய்தது.

(ஆசார்யஹ்ரு.) 66. பாஷ்யகாரர் அப்படி செய்தருளுகைக்கடி * விதயச்ச வைதிகாஸ் த்வதீயகம்பீர மநோநுஸாரிண: * என்று.....இவ்வாழ்வார் போல்வார் நினைவை சாஸ்த்ரங்கள் தான் பின்செல்லுமதாகப் பரமாசார்யரான ஆளவந்தார் அருளிச் செய்த வசனம்.

,, 87. * தவ தாஸ்யஸுகைகஸங்கிநாம் பவநேஷ்வஸ்த்வபி கீடஜந்ம மே * என்று........ பெரிய முதலியார் ப்ரார்த்தித்தார்.

,, 151. ஸாம்ஸாரிக ஸகலஸங்கமுமற்று உத்தமாச்ரமிகளாய்ப் பரமஹம்ஸ சப்தவாச்யரான நாதமுனிகள் யாமுனமுனிகள்போல்வாரையும்......அன்னமென்று சொல்லும்.

2. மாறனேரிநம்பி, பெரியநம்பி ப்ரஸ்தாவம்.

(ஸ்ரீவசநபூ.) 234. அபிமாநஹேதுவான ஜன்மவ்ருத்தாதிகளின்றிக்கே ஆளவந்தார்ஸ்ரீபாதத்தையுடையராய் அத்யாத்மஜ்ஞாந பரிபூர்ணராயிருக்கிற மாறனேரி நம்பி தம்முடைய அந்திமதசையிலே ‘ஆளவந்தார் அபிமானித்தருளின இத்தேஹத்தை ப்ரக்ருதி பந்துக்கள் ஸ்பர்சிக்கில் செய்வதென்?’ என்று அதி சங்கை பண்ணி ஸப்ரஹ்மசாரியான பெரிய நம்பியைப்பார்த்து ‘புரோடாசத்தை நாய்க்கிடாதே கிடீர்’ என்றருளிச்செய்து திருநாட்டுக்கெழுந்தருள, பெரியநம்பியும் அப்படியே பிறர் கையில் காட்டிக்கொடாதே தாமே பள்ளிபடுத்துவந்தெழுந்தருளியிருக்க, இத்தை உடையவர் கேட்டருளி, பெரியநம்பி ஸ்ரீபாதத்திலே வந்து ‘ஜீயா! மர்யாதை கிடக்கக் கார்யஞ்செய்ய வேண்டாவோ? தேவரீர் செய்தருள வேண்டிற்றே?’ என்ன, ‘ஆளிட்டந்திதொழவோ? நான் பெருமாளிற் காட்டில் உத்க்ருஷ்டனோ? இவர் பெரியவுடையாரிற்காட்டில் அபக்ருஷ்டரோ? * பயிலுஞ் சுடரொளி, * நெடுமாற்கடிமை கடலோசையோபாதியோ? ஆழ்வாரருளிச் செய்த அர்த்தத்தைச் சிறிது குறையவாகிலும் ஆசரிக்க வேண்டாவோ?’ என்று (பெரிய நம்பி) அருளிச்செய்த வார்த்தை.

(ஆசார்யஹ்ரு.) 85. ப்ரஸித்தரான நம்பிகள் மூவரிலும் ப்ரதாநரான பெரியநம்பி மாறனேரி நம்பிக்கு......செய்த புத்ரக்ருத்யமும்.

3. திருக்கோட்டியூர் நம்பி.

(முமுக்ஷுப்படி. சரமச்லோ. அவதாரிகை.) இதிலர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பி பக்கல் எழுந்தருளிற்று. நம்பிதாமும் இதில் அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரிகளில்லாமையையும் பார்த்திறே இவருடைய ஆஸ்திக்யாதர பரீக்ஷார்த்த

http://acharya.org

மாகவும் பலகால் நடந்து துவளப்பண்ணி சூளுறுறவு கொண்டு மாஸோபவாஸங் கொண்டு அருமைப்படுத்தியருளிச் செய்தருளிற்று.

(ஸ்ரீவசந பூ.) 73-ம் காண்க.

4. எம்பெருமானார்.

(ஸ்ரீவசந பூ.) 96 * க்ஷமா ஸத்யம் தமச் சம: * என்கிற விடத்தில் *தமோ பாஹ்யகரணாநாம் அநர்த்த விஷயேப்யோ நியமநம்; சம: அந்த:கரணஸ்ய ததா நியமநம் * என்றிறே பாஷ்யகாரருமருளிச்செய்தது.

,, 146. ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமாயிறே ப்ரபத்திதானிருப்பது. இப்படியிருந்துள்ள ப்ரபத்தியை * த்வத்பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே * என்று பண்ணியருளின பாஷ்யகாரர்க்கு ஸ்வபூர்வவ்ருத்தத்தை யநுஸந்தித்தவாறே அது தானும் அபராத கோடியிலேயாய் * த்வமேவ மாதா ச * என்று தொடங்கி இத்தலையில் அபராதத்தைப் பொறுக்கைக்குறும்பான பந்த விசேஷங்களை யெல்லாம்விண்ணப்பம் செய்துகொண்டு * தஸ்மாத் ப்ரணம்ய * இத்யாதியாலே இப்படி திருமுன்பே கூசாமல் வந்து நின்று ப்ரபத்திபண்ணின இவ்வபராதத்தைப் பொறுத்தருளவேணு மென்று க்ஷாமணம் பண்ண வேண்டும்படி நில்லா நின்றதிறே யென்கை.

,, 160. ....பாஷ்யகாரர் கத்யத்தில் உத்தர கண்டார்த்தம் அநுஸந்தித்தருளின க்ரமத்திலே...

,, 180. உத்தரவாக்யத்தில் நமஸ்ஸிலே புருஷார்த்தத்துக்கு இடைச்சுவரான விரோதிகளெல்லாம் தள்ளுண்ணுமென்னுமிடம் தோற்றவிறே * மநோவாக்காயை: * என்று தொடங்கி மூன்று சூர்ணையாலே ஸகலவிரோதி நிவ்ருத்தியையும் பாஷ்யகாரருளிச்செய்தது.

,, 234. காண்க. [முன்னே "2. பெரியநம்பி" என்றதன்கீழ்விவரணமுங்காண்க.]

,, 274. பாஷ்யகாரர்க்குக் காலக்ஷேப ப்ரகாரமருளிச் செய்கிறவிடத்தில்*த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா * என்றிறே பெரிய பெருமாளருளிச்செய்தது.

,, 385. "பாஷ்யகாரர் காலத்திலே ஒருநாள் பெருமாள்" இத்யாதி.

(தத்வத்ரய) 3. * அசேஷ சிதசித்வஸ்து சேஷிணே * என்று பாஷ்யகாரரும்.

,, 10. இதுதன்னை பாஷ்யத்திலே * ஏவம் ஹி ஸம்ப்தோத்தித்ஸ்ய பராமர்ச: .... அதத்ரூபத்வாத் ப்ரதிபத்தே: என்று பாஷ்யகாரரருளிச்செய்தார்.

,, 16. (இதுதான் * ருஜுத்வாலோகவத் * என்கிற ஸூத்ரார்த்தம்.) "வா சப்தோ மதாந்தரவ்யாவ்ருத்த்யர்த்த: ......ப்ரதமஸூத்ரே ஸ்தாபிதம்" என்றிறே இதுக்கு பாஷ்யம்.

,, 18. "ச்சேதநாதியோக்யாநி கடபடாதீநி வஸ்தூநி......இதி அவ்யக்த:" என்றிறே பாஷ்யகாரருமருளிச்செய்தது.

,, 34. இதெல்லாம் * கர்த்தா சாஸ்த்ரார்த்த வத்த்வாத் * என்கிற ஸூத்ரத்திலே பூர்வபக்ஷ ஸித்தாந்த ரூபேண பாஷ்யகாரர் தாமே விஸ்தரேண வருளிச்செய்தார்.

,, 35. * க்ருதப்ரயத்நாபேக்ஷஸ் து * என்கிற ஸூத்ரத்திலே இதெல்லாம் பாஷ்யகாரர்தாமே யருளிச்செய்தார்.

,, 37. "ஜ்ஞாநமாத்ரஸ்யாபதேசஸ் து......உபபத்யதே * என்றிறே தீபத்திலே பாஷ்யகாருமருளிச்செய்தது.

http://acharya.org

40. (தத்வத்ரய.) * பரகதாதிசயாதாநேச்சயா உபாதேயத்வமேவ யஸ்ய ஸ்வரூபம் ஸ சேஷ: பரச் சேஷீ * என்று சேஷ சேஷி லக்ஷணம் பாஷ்யகாரராலே அருளிச் செய்யப்பட்டது.

,, 41. * அயமேவாத்மசரீரபாவ:......என்றும்; யஸ்ய சேதநஸ்ய யத் த்ரவ்யம்...என்றும் வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் ஸ்ரீபாஷ்யத்திலும் ஆத்ம சரீரபாவலக்ஷணமாக பாஷ்யகாரரருளிச்செய்த நியந்த்ரு நியாம்யபாவம் ஆதாராதேயபாவம் சேஷசேஷிபாவமாகிற மூன்றும்......

,, 45. பாஷ்யகாரரும் இவர்களுடைய வைபவத்தை * ஸ்வச்சந்தாநுவர்த்தி * இத்யாதியாலே ஸ்ரீகத்யத்திலே பரக்கவருளிச்செய்தார்.

,, 79. இதுதன்னை பாஷ்யகாரர் ஸ்ரீவைகுண்ட கத்யத்திலே * திவ்யாவரண சதஸஹஸ்ராவ்ருதே......என்று தொடங்கி விஸ்தரேண அருளிச்செய்தாரிறே,

,, (அங்கேயே, மேல்) * தேஷாமபி இயத்பரிமாணம் இயதைச்வர்யம் ஈத்ருசஸ்வபாவமிதி பரிச்சேத்துமயோக்யே * என்று நித்யரால் பரிச்சேதிக்க வொண்ணாதென்று ஸ்ரீவைகுண்ட கத்யத்திலே பாஷ்யகாரர் அருளிச்செய்தவிது... ..

,, (அங்கேயே, மேல்) * அநந்தாச்சர்யாநந்த மஹாவிபவ* என்றிறே பாஷ்யகாரர்..*

,, 85. பகவத் ஸ்வரூப திரோதாநகரீம் விபரீதஜ்ஞாநஜநநீம் * என்று இதுதன்னை பாஷ்யகாரர் அருளிச்செய்தாரிறே.

,, 92. * ஸத்வரஜஸ்தமாம்ஸி த்ரயோ குணா: ...* என்றிறே பாஷ்யகாரரும்.

,, 117. இப்படி ஸ்ரீபாஷ்யத்திலே * யதக்நே ரோஹிதம் ரூபம்...என்று பாஷ்யகாரருமருளிச்செய்தார்.

,, 129. * நச ப்ருதிவ்யாத்யபாவமாத்ரம் ஆகாச இதி வக்தும் சக்யம் * என்றிறே பாஷ்யகாரருளிச்செய்தது.

,, 130. இதுதன்னை * ஆகாசே சாவிசேஷாத் * என்கிற ஸூத்ரத்திலே "ஆகாசே ச நிருபாக்யதா ந யுக்தா......ச்யேநாதிபதந தேசத்வேந" என்று தொடங்கி பாஷ்யகாரர் விஸ்தரேண அருளிச்செய்தார்.

,, 132. இதுதன்னை * அண்டாந்தர்வர்த்திநச் ச ஆகாசஸ்ய...என்று பாஷ்யகாரருமருளிச்செய்தார்.

,, 141. * அகில ஹேய ப்ரத்யநீக......ஸ்வரூப! * என்றிறே எம்பெருமானாரருளிச்செய்தது.

,, (அங்கேயே, மேலே) ஆதிசப்தத்தாலே குண சூர்ணையில் எம்பெருமானாரருளிச்செய்த குணங்களையெல்லாம் சொல்லுகிறது.

,, (அங்கேயே, மேலே) * ஆர்த்த:—ப்ரதிஷ்டாஹீந: ப்ரஷ்டைச்வர்ய: புநஸ் தத் ப்ராப்திகாம:......என்று சதுர்விதாதிகாரி வேஷத்தையும் ஸ்ரீகீதாபாஷ்யத்திலே அருளிச்செய்தாரிறே.

,, (அங்கேயே, மேலே) * ஸ்வாபிமதாநுரூபைகரூபாசிந்த்ய......என்று திவ்யமங்கள விக்ரஹ வைலக்ஷண்யத்தை அருளிச்செய்தாரிறே எம்பெருமானார்.

,, (அங்கேயே, மேலே) * ஸ்வாபிமதநித்ய நிரவத்யாநுரூப......பூமி நீளா நாயக! * என்றிறே எம்பெருமானாரருளிச்செய்தது.

http://acharya.org

(தத்வத்ரய) 195. "**ஸாதவ**:—உக்த லக்ஷணதர்மசிலா வைஷ்ணவாக்ரேஸரா:" என்றிறே இந்த ச்லோகத்துக் கர்த்தம் பாஷ்யகாரரருளிச்செய்தது.

(முமுக்ஷுப்படி.) 97. திவ்யபூஷணங்களாவன — ஆபரணாதர்ணையிலே பாஷ்யகாரர் அருளிச்செய்தாப்போலே......

,, 183. ஆகையிறே த்வய விவரணமான கத்யத்திலே......இத்யாதி சூர்ணையாலே ப்ரக்ருதிஸம்பந்த நிவ்ருத்தியையும் பாஷ்யகாரர் ப்ரார்த்தித்தருளிற்று.

,, (சரமச்லோ, அவதாரிகை.) இதிலர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பிபக்கல் எழுந்தருளிற்று.

,, (அங்கேயே, மேலே) "அதிகாரி துர்லபத்வத்தாலும் அர்த்த கௌரவத்தாலும் இத்தை வெளியிடாதே மறைத்துக்கொண்டு போந்தார்கள் எம்பெருமானார்க்கு முன்புள்ளார்; ஸம்ஸாரிகள் துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாதபடி க்ருபை கரைபுரண்டிருக்கையாலே அர்த்தத்தின் சீர்மை பாராதே அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினார் எம்பெருமானார்."

,, 243. * ஆக்ஷேபத:ப்ராப்தாத்......என்றிறே பாஷ்யகாரருமருளிச்செய்தது.

,, 274. தத்வ நிர்ணயம் பண்ணின உய்யக்கொண்டார் பக்திநிஷ்டராயிருக்கையாலே அவரை ப்ரபத்திநிஷ்டராம்படி பண்ணவேணுமென்று அவருக்கு இந்த (சரம) ச்லோகார்த்தத்தை யருளிச்செய்தவளவிலே 'அர்த்தஸ்திதி' அழகியதாயிருந்தது, ஆகிலும் அத்தை விட்டு இத்தைப்பற்றத்தக்க. ருசி எனக்கில்லை என்ன, "வித்வானைகையாலே அர்த்தத்துக்கிசைந்தாய், பகவத் ப்ரஸாதமில்லாமையாலே ருசி பிறந்ததில்லை" என்று அவர் விஷயமாக உடையவர் அருளிச்செய்தவார்த்தை.

,, (ஆசார்யஹ்ருதய.) 36. அடியார் தொண்டரென்கிற ப்ரபந்நஜநங்களுக்குக கூடஸ்தர்...**எம்பெருமானர்** முதலான ஆசார்யர்களும்.

,, 65. பாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யம் பண்ணியருளும்போது ஸூத்ரவாக்யங்களில் ஸந்திக்தங்களான அர்த்தங்களெல்லாம் இப்ப்ரபந்தத்தில் ஸூக்திகளைக்கொண்டு நிர்ணயித்து ஒருங்கவிட்டருளுவர்.

,, 66. பாஷ்யகாரர் அப்படிசெய்தருளுகைக்கடி * **விதயச்ச வைதிகாஸ் த்வதீய கம்பீர மநோநுஸாரிண:** * என்று...... இவ்வாழ்வார் போல்வார் நினைவை சாஸ்த்ரங்கள் தான் பின்செல்லுமதாகப் பரமாசார்யரான ஆளவந்தாரருளிச் செய்த வசனம்.

,, 85. த்யாகமண்டபமான பெருமாள்கோயிலில் திருவாலவட்டமும் கையுமாய்ப் பெருமாளுக்கு அந்தரங்கராய் நின்ற திருக்கச்சிநம்பியை வைதிகோத்தமரான உடையவர் அநுவர்த்தித்த க்ரமமும்.

,, (அங்கேயே, மேலே) யாகசப்தவாச்யமான திருவாராதனத்தில் பிள்ளையுறங்காவில்லிதாஸர் ஸ்பர்சத்தாலே காயசுத்தி பண்ணின உடையவரும்.

,, 91. [கலியுங் கெடும்போலே ஸூசிதம்.] இவர்தாம் மயர்வற மதிநலம் பெற்றவராகையாலே "கலியுங் கெடும்" என்று திருமங்கையாழ்வார் **உடையவர்** போல்வார் அவதரித்துக் கலியுகஸ்வபாவமும் கழியுமென்று மேல்வரும்சத்தை தர்சித்தருளிச்செய்தாப்போலே.

http://acharya.org

(ஆசார்யஹ்ரு.) 99. * அபயம் ஸத்வஸம்சுத்தி: * என்றும் * ஸத்வாநுரூபா ஸர்வஸ்ய ச்ரத்தா பவதி * என்றும் சொல்லுகிறவிடங்களில் ''ஸத்வம் அந்த:கரணம்'' என்று ஸத்வசப்தம் அந்த:கரணவாசியாக பாஷ்யகாரர் அருளிச் செய்தாரிறே.

,, 153. இராமானுசனுடையா ரென்றே நிரூபகமாம்படி உடையவர்க்குப் பரதந்த்ரரான ஆழ்வான் ஆண்டான் எம்பார் அருளாளப் பெருமாளெம்பெருமானர் முதலானவர்கள் போல்வாரைக் கிளியென்றும் பூவையென்றும் குயிலென்றும் மயிலென்றும் சொல்லும்.

,, 155. எம்பெருமானர் போல்வாரை மேகமென்று சொல்லும்.

,, 162. பாஷ்யகாரர் பக்கலிலே வேதாந்தார்த்தம் கேட்டு சிஷ்யனாய் 'நாமும் நம்மிராமானுசனையுடையோம்' என்கையாலே ஸ்ரீ வைஷ்ணவநம்பியென்று திருநாமமாய்......

,, 204. இப்படி அதிகாரம் பாராமல் அவர்கள் துர்க்கதியைப்பார்த்து உபதேசித்தருளும் ஸ்வபாவராய் * பாமன்னுமாறனடி பணிந்துய்ந்தவன் * என்று நிரூபகமாயிருக்குமெம்பெருமானர்க்குமே......

,, 224. புராணவித்தமராகையாலே பௌராணிகரான பாஷ்யகாரர் கத்யத்திலே இவ்வசநப்ரக்ரியையாலே த்யாஜ்யங்களினுடைய த்யாகபூர்வகமான சரணவரணத்தைப் பண்ணுகையாலும்.

,, 228. இது, * வீடுமின்முற்றத்தையும் பக்திபரமாக்கி யோஜித்தருளின எம்பெருமானர் நிர்வாஹக் கட்டளையைப் பிடித்தருளிச் செய்தார்......இது எம்பெருமானர் யோஜநையாய்ப் பின்புள்ளா ரெல்லாருமருளிச் செய்துகொண்டு போந்த மர்யாதையைப்பற்ற......

,, 233. * பரபக்திபரஜ்ஞாந பரமபக்த்யேக ஸ்வபாவம் மாம் குருஷ்வ * என்று ப்ரார்த்தித்த பாஷ்யகாரரைக் குறித்து *மத் ஜ்ஞாநதர்சந ப்ராப்திஷு நிஸ்ஸம்சயஸ் ஸுகமாஸ்வ* என்று சேரபாண்டியனிலுமவனருளிச் செய்த ஜ்ஞாநதர்சந ப்ராப்த்யவஸ்தைகள். ... ... *

5. எம்பார்.

(முமுக்ஷுப்படி.) 286. ''ஆஸ்திகனைய் இவ்வர்த்தத்தில் ருசி விச்வாஸங்களுடையனைய் உஜ்ஜீவித்தல், நாஸ்திகனைய் நசித்தலொழிய நடுவில் நிலையில்லை யென்று பட்டருக்கு எம்பார் அருளிச்செய்த வார்த்தை.'' — இவ்வர்த்தத்தில் [சரமச்லோகார்த்தத்தில்] அந்விதனைவன் பகவத்ப்ரபாவத்தால் இது ஸத்யமென்று ஆஸ்திகனைய் இவ்வர்த்தத்தில் ருசியும், இது தப்பாதென்கிற விச்வாஸமுமுடையனைய் உஜ்ஜீவித்தல், சாஸ்த்ரங்களெல்லா மொரு தலையும் இது ஒரு தலையுமாய் இப்படியிருப்பதொன்றுண்டோ வென்று நாஸ்திகனைய் இத்தை அநாதரித்து நசித்தலித்தனையொழிய நடுவொரு நிலையில்லை யென்று ஸகலசாஸ்த்ர வித்தமரான பட்டருக்கு ஆப்ததமரான எம்பார் அருளிச்செய்த வார்த்தை.

6. வங்கிப்புரத்துநம்பி.

(முமுக்ஷுப்படி.) 276. இந்த சரமச்லோகம் அநுவாதத்தினுடைய கோடியிலேயென்று ஆப்ததமரான வங்கிப்புரத்து நம்பியருளிச்செய்யும் வார்த்தை.

http://acharya.org

7. ஆழ்வான்.

(ஸ்ரீவசநபூ.) 73. திருக்கோட்டியூர் நம்பி ஸந்நிதியிலே ஆழ்வான் ஆறு மாஸம் ஸேவித்து நின்று மஹாநிதியாகப்பெற்ற அர்த்தமிறே இது.

,, 203. பிள்ளைப் பிள்ளையாழ்வானை (ஆழ்வான்) அங்கீகரித்தநாளிலே இவர் ஆபிஜாத்யாதிகளாலே உத்க்ருஷ்டராகையாலே பாகவத விஷயங்களில் அஸிநயமாக வர்த்தித்துக்கொண்டு போருகிறபடியைக்கண்டு "இவர்க்கு இப்பாகவதாபசாரம் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி தானே மேலாய் விநாசபர்யந்தமாக்கிவிடும், அதுக்கு வேலி இட்டுவைக்கவேணும்" என்று திருவுள்ளம்பற்றி ஒரயனத்தினன்று நீராடி பேறினவளவிலே இவரைப் பார்த்து "எல்லாரும் தானம் பண்ணுகிற காலத்திலே நீரும் நமக்கொருதானம் பண்ணமாட்டீரோ" என்ன, அடியேன் எத்தை தானம் பண்ணுவது, எல்லாம் அங்குத்தையதாயிருந்ததே. என்ன; 'அர்த்தஸ்திதியன்றே அது. அவ்வளவு போராது, கரணத்ரயத்தாலும் பாகவதாபசாரம் பண்ணாமல் வர்த்திக்கக்கடவேன் என்று நம் கையிலே உதகம் பண்ணித்தரவேணும்' என்ன; அப்படி இவருமுதகம் பண்ணிக்கொடுத்த வனந்தரம் ஒருநாள் பாகவத தோஷத்தைப் பூர்வ வாஸனையாலே நினைத்து 'நாமினி முடிந்தோம்' என்று பயப்பட்டு மூடிக்கொண்டு தம் திருமாளிகையிலே கண்வளர, இவர் முன்பு வருகிற காலத்தில் வரக்காணாமையாலே ஆழ்வான் இவர் திருமாளிகையிலே எழுந்தருளி 'என்தான்? முசிப்பென்? என்று வினவியருள தாம் மனஸ்ஸால் நினைத்தத்தை விண்ணப்பம் செய்து 'கரணத்ரயத்தாலும் அபசாரம் புகுராதபடி இத்தேஹத்தோடு வர்த்திக்கை அரிதாயிராநின்றது, என் செய்யக்கடவேன்?' என்று திருவடிகளைக் கட்டிக்கொண்டு கிடந்து க்லேசிக்க, இத்தனை அநுதாபமிவர்க்குண்டாகப்பெற்றோமே என்று உகந்தருளி 'மனஸ்ஸாலே நினைத்ததுக்கு அநுதாபமுண்டாகவே ஈச்வரன் க்ஷமித்தருளும்; ப்ரத்யக்ஷதண்டபயத்தாலே காயிகமாக ஒருவரையும் நலியக்கூடாது, ஆனபின்பு அவையிரண்டு மமக்குக் கரித்துத்தந்தோம்; இனி வாக்கொன்றையும் நன்றாகக் குறிக்கொண்டு வர்த்தித்துப்போரும்' என்றருளிச்செய்தது.

411. "வடுகநம்பி ஆழ்வானையும் ஆண்டானையும் இருகரையரென்பர்" வியாக்கியானம் காண்க.

(தத்வத்ரய.) 45. *வநாத்ரிநாதஸ்ய ஸுஸுந்தரஸ்ய வை ப்ரபுக்நசிஷ்டாச்யத ஸைந்யஸந்பதி: * என்று ஆழ்வானுமருளிச்செய்தார்.

,, 79. ஸீமையில்லாததொன்றுக்கு ஸீமையறியாமை ஸர்வஜ்ஞதைக்கு அநுகுணமென்னுமிடம் * நேவி! த்வந்மஹிமாவதிர் ந ஹரிணு......என்று ஸ்ரீஸ்தவத்திலே ஆழ்வானருளிச்செய்தார்.

,, 148. * யேஷ்வேகஸ்ய குணஸ்ய விப்ருடபி வை......வநாத்ரீச்வரம் * என்கிற ச்லோகத்திலே குணங்களினுடைய நித்ய நிஸ்ஸீம நிஸ்ஸங்க்யத்வங்களை அருளிச்செய்தாரிறே ஆழ்வான்.

,, 185. * குணௌஷ ஷட்பிஸ் த்வேதை:...அகணித மஹாமங்கள குண: * என்று இதுதன்னை ஆழ்வானருளிச்செய்தாரிறே.

,, 194. * இயம் வைபூஹீ வை...என்றும் * ஏவர் ஸ்திதே...என்றும் அவதாரஹேது இச்சையென்னுமிடத்தை ஆழ்வான் விசதமாகவருளிச்செய்தாரிறே.

,, 195. *யே பக்தா பவதேகபோகமநஸ:...என்றிறே ஆழ்வானுமருளிச்செய்தது.

http://acharya.org

8. அமுதனார்.

(ஸ்ரீவசநபூ.) 426. ஆகையிறே பிள்ளை யமுதனார் * பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி அப்பேறளித்தற்கு ஆறொன்றுமில்லை மற்றச்சரணன்றி * என்று ப்ராப்யப்ராபகங்களிரண்டும் ஏகவிஷயமேயாக அருளிச்செய்தது.

9. உய்யக்கொண்டார்

(உடையவர்காலத்தவர்.)

(ஸ்ரீவசநபூ) 3. * அத இதிஹாஸ புராணயோ: இதிஹாஸா: பலீயாம்ஸ:... என்று தொடங்கி தத்வநிர்ணயத்திலே உய்யக்கொண்டாராலும் ப்ரதிபாதிக்கப் பட்டது.

(முமுக்ஷுப்படி.) 274. காண்க. (கீழே பக்கம் 103 - ல் உள்ளது.)

10. பட்டர்.

(ஸ்ரீவசநபூ) 3. * மஹாபாரதம் ஹி பரிக்ரஹ விசேஷாவஹிதம் * என்று தொடங்கி... என்னுமளவாக பரிக்ரஹாதிசயத்தாலும் மத்யஸ்தகையாலும் புராணங்களிற் காட்டில் இதிஹாஸ விசேஷமான மஹாபாரதத்துக்குண்டான ப்ராபல்யம் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்யத்திலே பட்டராலும் ப்ரதிபாதிக்கப்பட்டதிறே.

,, 5. பெரிய பட்டரும் ஸ்ரீஸஹஸ்ரநாம பாஷ்ய உபோத்காதத்திலே "ஸ்ரீராமாயணவத் மஹாபாரதம் சரணம்" என்றருளிச்செய்தாரிறே.

,, 8. ஆகையிறே *யதுதாத்யதுதாஹரந்தி வீநாவதாரபகமேதத்ருஷ்ய போக்யா * என்று பட்டருமருளிச்செய்தது.

,, 38. * அர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி:* என்றருளிச்செய்தாரிறே பட்டர்.

,, 306. * பவதஸஹநீயாகஸி ரத: * என்றிறே பட்டருளிச்செதது.

(தத்வத்ரய.) 28. அஹமிதமபிவேத்மீதி...என்று பட்டரும் இப்படியிறே பௌத்த மத நிராகரணம் பண்ணுகிற விடத்தில் அருளிச்செய்தது.

,, 45. அஹ்நந்நஸஹஜதமஸ்யாஸ் ஸஹ்ராஸ் ஸ்ரஸ்தபந்தா: * என்றுறே பட்டர்.

,, 148. * தோஷோபதாவதி......அநர்க்கயந்தி * என்கிற ச்லோகத்தில் இவையித்தனையும் பட்டருளிச்செய்தாரிறே.

,, 150. * க்ஷமா ஸாபராதே...என்றிறே பட்டருளிச்செய்தது.

,, 160. * ப்ரளயஸமயஸுப்தம்......ஸ்ரீஸமக்ஷம் * என்றிறே பட்டருளிச்செய்தது.

,, 179. * நிர்நோந்நநஞ்ச...ச்நநயோ க்நணந்தி * என்று இதுதன்னை பட்டருளிச்செய்தாரிறே.

,, 202. * ஆஸ்தாம் தே குணராசிவத்......சீலாத் ஜகடூயதே * என்று அவதாரங்களையருளிச்செய்தவனந்தரத்திலே அர்ச்சாவதாரவைபவத்தை ஸங்க்ரஹேண ஒரு ச்லோகத்தாலே அருளிச்செய்தாரிறே பட்டர்.

(முமுக்ஷுப்படி.) 2. * தேஹாஸக்தாத்மபுத்திர் யதி பவதி...சதுர்த்தீப் ப்ரபந்ந: * என்று பட்டருளிச்செய்தபடியே...

http://acharya.org

(முமுக்ஷுப்படி.) 46. ப்ரஸாதநம் புஷ்யந்திமயி..என்கிறவிடத்திலே ஈச்வரனை புருஷகாரத்தாலே ஸ்தாநேயாகவும் பிராட்டியைப் பரிமைஸ்தாநேயாகவும் பட்டரருளிச்செய்கையாலே.

(ஆசார்யஹ்ரு.) *காருணிகோ ததாதி* என்று பட்டரருளிச்செய்ததுக்கும் சேரும்.

11. ஸேநாபதி ஜீயர்.

(முமுக்ஷுப்படி.) 41. ஜ்ஞாநாதிகரான ஸேநாபதி ஜீயர் அருளிச்செய்யும் வார்த்தை —* அகலகில்லேனிறையும் * என்று அவன் திருமார்விலே நித்யவாஸம் பண்ணுமிவள் அம்மார்பை விட்டுப் பிரியிலாயிற்று அவனுக்கு ப்ரதிபாதகமான இவ்வக்ஷரத்தை விட்டுப் பிரிவதென்று.

12. கிடாம்பிப் பெருமாள்.

(ஸ்ரீவசந பூ.) 385. ஸகல வேதாந்த தாத்பர்யார்த்தங்களெல்லாம் ஸம்சய விபர்யயமற நடந்துசெல்லுகிற நல்லடிக்காலமான பாஷ்யகாரர் காலத்திலே, ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளுந்தனையும் பார்த்துப் பெரிய திருமண்டபத்துக்குக் கீழாக ஜ்ஞாநாதிகரான முதலிகளெல்லாரும் திரள விருந்தவளவிலே ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் 'இது நெடுங்காலம் ஆர்வாசலிலே அவர்கள் புறப்பாடு பார்த்திருந்தோமோ ! என்று தெரியாது; இன்று வகுத்த சேஷியான பெருமாள் புறப்பாடு பார்த்து வந்திருக்க என்ன ஸுக்ருதம் பண்ணினோம் !' என்ன, தத்ப்ரஸங்கத்திலே நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்தவனுக்கு பகவத் விஷயத்திலே ருசி பிறக்கைக்கு அடியென் ? என்று விசாரிக்கச் செய்தே, யாத்ருச்சிகஸுக்ருதமென்ன அஜ்ஞாதஸுக்ருதமென்னப் பிறந்ததாய், அவ்வளவிலே கிடாம்பிப் பெருமாளிருந்தவர் 'நமக்கு பகவத் விஷயம்போலே ஸுக்ருத தேவரென்றும் ஒருவருண்டோ ஆச்ரயணீயர் ?' என்ன. பிள்ளை திருநறையூரரையர் 'ஸுக்ருதமென்று சொல்லுகிறதும் நினைக்கிற விஷயந்தன்னைக்காண்' என்றருளிச்செய்ய, ஆக இப்படி பின்பு பிறந்த வார்த்தைகளை இவ்விடத்திலே நினைப்பது.

13. முதலியாண்டான்.

(ஸ்ரீவசந பூ.) 411. "வடுக நம்பி ஆழ்வானையும் ஆண்டானையும் இருகரையரென்பர்" என்றவிடத்து ஐதிஹ்யம். அதாவது — ஆழ்வார் திருவடிகளில் ஸ்ரீமதுரகவிகளிருந்தாப்போலே ப்ராப்யப்ராபகங்களிரண்டு மெம்பெருமானார் திருவடிகளே யென்று ப்ரதிபத்திபண்ணி * தேவுமற்றறியேனென்றிருக்கும் வடுகநம்பி, எம்பெருமானார்க்கு நிழலுமடிதாறும்போலே அநிநாபூதராய்......உபாயோபேயங்கள் அவர் திருவடிகளும் அத்திருவடிகளில் பண்ணும் கைங்கர்யமுமென்றிருக்கும் கூரத்தாழ்வானையும் தாத்ருசரான முதலியாண்டானையும் ஸம்ஸாரத்திலிருப்பில் அடிக்கொதிப்பால் வந்த ஆர்த்தியின் மிகுதியாலே கலங்கி காதாசித்கமாகப் பெருமாள் பக்கலிலுஞ் சென்று பல்காட்டுவது, தத்வைலக்ஷண்யங் கண்டவாறே ப்ரவணராய்ப் போருவதாமிவ்வளவைக் கொண்டு "எம்பெருமானார் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமானால் * தேவுமற்றறியேனென்றிருக்க வேண்டாவோ ? அங்ஙனன்றிக்கே சரமாவதியிலும் ப்ரதமாவதியிலும் கைவைத்து நிற்கிறவிவர்கள் இருகரையர் — என்றருளிச் செய்வர்.

14. பிள்ளை திருநறையூரரையர்.

இவர் விஷயமான ஐதிஹ்யம் (ஸ்ரீவசந பூ.) 84, 385. சூர்ணைகளிற்காண்க.

15. வடுகநம்பி.

(ஸ்ரீவசந பூ.) 411. ஆழ்வார் திருவடிகளில் ஸ்ரீமதுரகவிகளிருந்தாப்போலே ப்ராப்ய ப்ராபகங்களிரண்டும்......இத்யாதியை முன்னே **"முதலியாண்டான்"** என்ற பகுதியிற்காண்க. (பக்கம் 107.)

16. எங்களாழ்வான்.

(தத்வத்ரய.) 103 "......பூர்வபூர்வதந்மாத்ரம் உத்தரோத்தரதந்மாத்ரம் தத் விசேஷஞ்ச ஆவ்ருணோதீதி தர்சிதம்" என்று பிள்ளை யெங்களாழ்வான் வ்யாக்க்யானம் பண்ணுகையாலும்.......

,, 106. இதுதன்னை ஸ்ரீவிஷ்ணுபுராண வ்யாக்க்யானத்திலே * **அயமத்ர இந்த்ரிய ஸ்ருஷ்டிக்ரம:......மநஸ: ஸ்ருஷ்டிரிதி** * என்று பிள்ளை யெங்களாழ்வானு மருளிச்செய்தார்.

,, 109. ***அஹங்காரஸ்ய இந்த்ரியாணி ப்ரதி நிமித்தத்வமேவ......ததா நிர்தேசோபபத்தே:*** என்று பிள்ளை யெங்களாழ்வா னெடுத்துக் கழித்தது.

17. நஞ்சீயர்.

(ஸ்ரீவசந பூ.) 69. நஞ்சீயர் தம்முடைய ஸ்ரீபாதத்திலே யுள்ளாரொரு ஸ்ரீவைஷ்ணவரை நோவறிகைக்காகச் சென்று எழுந்தருளியிருக்கிறவளவிலே அந்த ஸ்ரீவைஷ்ணவர் 'அடியேனுக்கு அந்திமகாலத்துக்குத் தஞ்சமாயிருப்பதொன்று அருளிச் செய்யவேணும்' என்ன, "அந்திமகாலத்துக்குத் தஞ்சம் நமக்கிப்போது தஞ்சமென்? என்கிற தன்னுடைய ஸ்வரக்ஷணை சிந்தை குலைகை காணும்" என்று **(நஞ்சீயர்)** அருளிச்செய்த வார்த்தை.

,, 192. "ஸங்கல்பமாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வசக்தியான ஸர்வேச்வரன் தன்னையழிய மாறி இதர ஸஜாதீயனாய் அவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்ய ராவணாதி நிரஸநரூப ஆத்யந்திமாநுஷ சேஷ்டிதங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் தொடக்கமான அவ்வோ பாகவத விஷயங்களில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே யென்று ஆப்ததமரான **நஞ்சீயர்** அருளிச் செய்வரென்கை.

(தத்வத்ரய.) 142......ஒரு யோஜனையுமுண்டிறே கத்யவ்யாக்யானங்களிலே நஞ்சீயர் ஆச்சான்பிள்ளை முதலான ஆசார்யர்கள் அருளிச்செய்தது.

18. நம்பிள்ளை.

(ஸ்ரீவசந பூ.) 31. வேல்வெட்டிப்பிள்ளை (யென்பவர்,) பெருமாள் கடலை சரணம் புகுகிறவிடத்தில் ப்ராங்முகத்வாதி நியமோபேதராய் சரணம் புகுருகையாலே இதரோபாயங்களோபாதி ப்ரபத்திக்கும் சில நியமங்கள் வேண்டியிருக்கிறதோ' வென்று நம்பிள்ளையைக் கேட்க, "பெருமாள் பக்கல் கண்ட நியமம் இவ்வுபாயத்துக்கு உடன் வந்தியாயிருப்பதொன்றன்று; உபாய பரிக்ரஹம் பண்ணினவனுடைய ஸ்வபாவத்தாலே வந்ததித்தனை. பெருமாள் தமக்கு * **ஸமுத்ரம் ராகவோ ராஜா சரணம் கந்துமர்ஹதி** * என்று உபதேசித்தான் ஸ்ரீவிபீஷணாழ்வானிறே; அவன் தான் பெருமாளை சரணம் புகுகிறவிடத்தில் கடலிலேயொரு முழுக்கிட்டு வந்தானென்றில்லையே; இத்தால் சொல்லிற்றாயிற்றது — பெருமாள் இக்ஷ்வாகு வம்சயராய் ஆசாரப்ரதாநராயிருக்கையாலே தம்முடைய நியமங்களோடே சரணம்புக்கார்; இவன் ராக்ஷஸஜாதீயனாகையாலே நின்ற நிலையிலே சரணம் புக்கான்; ஆகையால்

http://acharya.org

யோக்யனுக்கு அயோக்யதை ஸம்பாதிக்கவேண்டா; அயோக்யனுக்கு யோக்யதை ஸம்பாதிக்கவேண்டா; நின்ற நின்ற நிலைகளிலே அதிகாரிகளாமித்தனை'' என்று நம்பிள்ளை யருளிச்செய்த வார்த்தை.

(ஸ்ரீவசந பூ.) 347. * மண்ணும் விண்ணுமெல்லா முடனுண்ட * என்கிற விடத்தில் ''ரக்ஷணம் அவனுக்கு தாரகமாயிருக்கையாலே உண்ட என்கிறது; இல்லையாகில் காக்கும் என்ன வமையும்'' என்றிறே நம்பிள்ளையருளிச் செய்தது.

(ஆசார்யஹ்ரு.) 85. அநுயாகசப்த வாச்யமான ப்ரஸாதஸ்வீகாரத்தில் பிள்ளை யேறுதிருவுடையார் தாஸர் கரஸ்பர்சத்தாலே அந்நுக்ரஹித்தி பண்ணின நம்பிள்ளையும். ... ... *

19. ச்ருதப்ரகாசிகா பட்டர்.

(ஸ்ரீவசந பூ.) 331. ''த்ரிவி இதி அப்ராக்ருதம் ஸ்தாநமுச்யதே. த்ரிபாத் த்வஞ்ச......ஸம்பவதி'' என்று ச்ருதப்ரகாசிகையிலே பட்டரருளிச்செய்தபடியே.

(தத்வத்ரய.) 49. இதுதான் ச்ருதப்ரகாசிகையிலே ஆதிபரத சதுச்ச்லோகீ வ்யாக்யாநோப க்ரமத்திலே * ப்ரஹ்மாத்வைதம் ஜீவாத்வைதஞ்சேதி அத்வைதம் த்விவிதம் சாஸ்த்ரப்ரதிபாத்யம் * என்று தொடங்கி ஸ்ரீவேதவ்யாஸபட்டராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது.

'' 89. * குணத்ரய வைஷம்யஸ்ய அநந்தர பூர்வாவஸ்தா குணஸாம்யம்......அங்குராவஸ்தாநீயோ மஹாந் இதி விவேக: * என்று ஸுபாலோபநிஷத் வ்யாக்யானத்திலே ச்ருதப்ரகாசிகாகாரர் இதினுடைய அவஸ்தா விசேஷங்களை ஸுஸ்பஷ்டமாக வருளிச்செய்தார்.

'' 103. ......ஸங்கல்ப சப்தத்தாலே தத்காரணமான மநஸ்ஸு லக்ஷிக்கப்படுகிறதென்று ஸுபாலோபநிஷத் வ்யாக்யானத்திலே ச்ருதப்ரகாசிகாகாரராலே வ்யாக்யாதமாயிற்று.

'' 109. இதுதான் ஸுபாலோபநிஷத் வ்யாக்யானத்திலே * க்ராணுதீநாம் இந்த்ரியாணாம் ஹி இத்யாதிஷு * என்று ச்ருதப்ரகாசிகாகாரராலே அபிஹிதமாயிற்று.

'' 116. ச்ருதப்ரகாசிகாகாரர் சுகபக்ஷீயத்திலே * தேஜோவாரிம்ருதாம் யதாவிநிமய:* என்கிறவிதுக்கு [விநிமய: — பரஸ்பரஸம்மிச்ரீகரணம்] என்றுரிறே.

'' 148. ஸ்ரீபாஷ்யத்தில் * ஸ்வபாவதோநிரஸ்த......புருஷோத்தம: அபிதீயதே * என்கிறவிடத்துக்கு வ்யாக்யானம் பண்ணுகிற ச்ருதப்ரகாசிகாகாரர் அநவதிகாதிசயபதத்தாலே நித்யஸித்தரை வ்யாவர்த்திக்கிறதென்று முந்துறவொரு யோஜநைபண்ணி......இத்யாதி......க்ரியா — நியமநம் என்றிறே இதுக்கும் ச்ருதப்ரகாசிகாகாரர் வ்யாக்யானம் பண்ணிற்று. ... ... *

20. வடக்குத் திருவீதிப்பிள்ளை.

(ஸ்ரீவசந பூ.) 443. ''பரமதயாளுவான ஆசார்யன் இவன் நம்முடையவனென்று அபிமாநித்திருக்குமந்த அபிமாநமொழிய வேறு உஜ்ஜீவநோபாயமில்லையென்று ஸகல சாஸ்த்ரஸாரவித்தக்ரேஸரரான நம்பிள்ளை திருவடிகளிலே பழுக்க ஸேவித்து தத்தேகபரதந்த்ரராய் ஸகல சாஸ்த்ர தாத்பர்யங்களையும் அவரருளிச் செய்யக் கேட்டு தந்நிஷ்டராயிருக்கும் நம்முடைய ஆசார்யரான பிள்ளை தஞ்சமாகப் பலகாலுமருளிச் செய்யக் கேட்டிருக்கையாயிருக்குமென்றபடி.

http://acharya.org

(ஆசார்யஹ்ரு.) 238......ஈட்டிலும் ப்ரதாநயோஜனை நயாயிருக்குமது......
*வணக்குடைத்தவநெறி யென்கிறவிது ப்ரபத்திபரமாகவும் ஒருயோஜனை ஈட்டிலே தோன்றியிருக்கையாலே. ... ... *

21. பெரியவாச்சான் பிள்ளையும்,

ஸ்பஷ்டமாகத் திருநாமம் தெரிவியாத ஆசார்யர்களும்.

(ஸ்ரீவசந பூ.) 53. ராமவிஜயம் தமக்கு இஷ்டமாகையாலே அந்த விஜயத்துக்கு இலக்காய்த் தோற்ற ராக்ஷஸர்தசை பிறந்து, பிராட்டிமார்தசை பிறந்து பேசுமாபோலே தாமான தன்மை தோற்றதே, தோற்ற ராக்ஷஸர் பாசுரத்தாலே விஜயத்தைப் பேசியநுபவிக்கிறார்' என்றிறே அத்திருமொழிக்கு வியாக்யானம் பண்ணியருளுகிற ஆசார்யர்கள் அருளிச்செய்வது.

,, 321. **அஸூயாப்ரஸவபூ:** * என்கிறவிதுக்கு 'ஹிதம் சொன்னவனுடைய உத்கர்ஷமேயாயிற்றுப் பொறுதது' என்றிறே பூர்வர்கள் அருளிச் செய்தது.

,, 385. இக்கதைதான் * தருதுயரந்தடாயேல் * என்கிற பாட்டின் வியாக்யானத்திலே ஸங்க்ரஹேண பூர்வர்கள் அருளிச்செய்து வைத்தார்களிறே.

† (தத்வத்ரய.) 103. பெரியவாச்சான் பிள்ளையும் இப்படியிறே [ஸங்கோசோத்பத்தி க்ரம:] அருளிச் செய்தது.

(ஆசார்யஹ்ரு.) 1. பூர்வர்களிட்ட வ்யாக்யானத்துக்குச் சேரும்.

99. பூர்வர்கள் வ்யாக்யானம் பண்ணிவைத்தார்களாகிலும்

228. முன்புள்ளார், பின்புள்ளார், ஸகல வ்யாக்யானங்கள்......

(ஸ்ரீவசந பூ.) 307. "இரக்கமுபாயம், இனிமை உபேயம்" என்னக்கடவதிறே.

399. * எதிர்சூழல்புக்கு * என்கிறது அவதாரபரமாக மற்றுள்ளாராலே வ்யாக்யாதமாயிற்றாகிலும் இப்போதிவர் இவ்விடத்தில் வ்யாப்திபரமாக வருளிச் செய்கிறார். அநேக யோஜனைகளுமுண்டாயிறே யிருப்பது.

(தத்வத்ரய.) * **இச்சயா யதுபாதேயம் யஸ்யாதிசயஸித்தயே, உபாநுபயைகைக ஜ்ஞாநௌ சேஷசேஷிணௌ.** * என்று சேஷ, சேஷிலக்ஷணத்தை அபியுக்தரானவர்களும் சொல்லிவைத்தார்கள்.

(ஆசார்யஹ்ரு.) 21. "கட்டிப்பொன்போலே சேஷத்வம்; பணிப்பொன் போலே பாரதந்த்ர்யம்." என்னக் கடவதிறே.

,, 25. "ஆனந்தம் அவன் ப்ரீதியைத் துளிரெழுப்ப" என்கிறபடியே.

,, 50. வ்யாக்யானங்களில் 'பண்புடை வேதம்' என்றொழிய 'பண்புரை வேதம்' என்று பாடமும், **இசைகொள் வேதம்** என்கிறதுக்கு ஸாமவேத பரத்வமும் கண்டதில்லையேயாகிலும் ஆப்ததமரான இவர் இப்ப்ரபந்தத்திலே இப்படியருளிச் செய்கையாலே இப்படியும் கொள்ளவேணும்.

,, 104. "கர்ம ஸம்பந்தமறுகையாலே ஸூக்ஷ்ம சரீரமிருக்கைக்கு ஹேது வில்லாமையால் இங்கே கழித்துவிடலாயிருக்கச் செய்தே விரஜாபர்யந்தம் இவனுக்கு கமநஸாதநமாக ஈச்வரன் தன்னிச்சையாலே வைத்து விரஜையிலே உள்புக்கவாறே கழித்துவிடும்" என்றிறே நம் ஆசார்யர்கள் அருளிச்செய்வது.

† பெரியவாச்சான் பிள்ளை யென்கிற ஸ்பஷ்டநிர்தேசமுள்ளது இவ்விடமொன்றே.

http://acharya.org

22. நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டர்.

(ஸ்ரீவசந பூ.) 5. * இதுதன்னை நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் தத்வத்ரய ப்ரபந்தத்தில் ப்ரமாணாதிகாரத்திலே அருளிச் செய்தாரிறே. ("இதுதன்னை" என்றது — மற்ற இதிஹாஸங்களிற் காட்டில் ஸ்ரீராமாயணத்திற்குண்டான ப்ராபல்யத்தை என்றபடி.)

(அவ்விடத்திலேயே மேலே) (அநேக புராண ப்ரசஸ்தமாயிருந்துள்ள மஹாபாரதமும் ஸ்ரீராமாயணத்தோபாதி ப்ரபல ப்ரமாணம்.) இதுவும் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் தாமே யருளிச்செய்தார்.

(தத்வத்ரய.) அவதாரிகை — நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் ஆச்சான் பிள்ளை முதலான பூர்வாசார்யர்களுடைய ப்ரபந்த நிர்மாணத்துக்கும் கருத்து இதுவிறே.

,, 120. இதுதன்னை நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர் "நிமேஷம் பதினைந்து கொண்டது காஷ்டை.........ப்ரஹ்மாயுஸ்ஸுக்குப் பரமென்று பேராம்" என்று ஸுவ்யக்தமாக வருளிச்செய்தார்.

,, 151. ஸத்யகாமனாகையாவது—ஸாந்தீபநிபுத்ரனைக் கொண்டுவந்தாப்போலே ஸகலா பேக்ஷிதங்களும் முடிக்கவல்லனாகை. என்றிறே நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் தத்வத்ரயத்திலே அருளிச்செய்தது.

(அங்கேயே, மேலே) க்ருதியாகையாவது — ஆச்ரிதருடைய அபேக்ஷிதம் பூர்ணமானால் தான் க்ருதக்ருத்யனாகை. என்றிறே (நடுவில் திருவீதிப்பிள்ளை) பட்டருமருளிச்செய்தது.

(அங்கேயே, மேலே) க்ருதஜ்ஞனாகையாவது — ஆச்ரிதருடைய ஸுக்ருத லவ மொன்றையுமே நினைத்து தான் செய்த நன்மைகளொன்றும் பாராதே யிருக்கை என்று இதுவும் (நடுவில் திரு —.) பட்டர் அருளிச்செய்தார்.

" 160. "அவர்ஜநீயமான ராகமோ" என்று நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரருளிச் செய்ததாமித்தனை. "ரோகமோ" என்றும் பாடங் கூறுவர்.

(ஆசார்யஹ்ரு.) உத்தரவீதி குடிபுகுருகிறபோது பிள்ளை வானமாமலைதாஸர் ஸஞ்சரணத்தாலே ஸ்தலசுத்தி பண்ணின நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரும்.

23. ஆச்சான் பிள்ளை.

(ஸ்ரீவசந பூ.) 11. இவ்வுபதேசக்ரமம் இவர்தாமருளிச்செய்த பரந்தபடியிலும் ஆச்சான் பிள்ளையருளிச்செய்த பரந்தரஹஸ்யத்திலும் விஸ்தரேண காணலாம்.

" 49. ஜிதந்தாவ்யாக்யாநோபோத்காதத்திலே 'ப்ரபத்திக்கு அதிகாரிகள் அஜ்ஞரும் ஸர்வஜ்ஞரும் பக்திபரவசருமென்று த்ரிவிதராக பட்டருளிச்செய்தாரிறே' என்று தொடங்கி......என்று ஆச்சான் பிள்ளையருளிச்செய்தார்.

" 332. "ஆசார்யன் அர்த்தகாமங்களிலே நசையற்றவனாகையாலே அவை ஹேதுவாகப் பொறுக்கவும் வெறுக்கவும் ப்ராப்தியில்லை; இனி இவனுடைய ஹித ரூபமாக வெறுத்தானாகில் அதுவும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவது" என்று இது தன்னை மாணிக்கமாலையிலே ஆச்சான்பிள்ளை யருளிச்செய்தாரிறே.

http://acharya.org

(தத்வத்ரய.) அவதாரிகை — நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர் ஆச்சான் பிள்ளை முதலான பூர்வாசார்யர்களுடைய ப்ரபந்த நிர்மாணத்துக்கும் கருத்து இதுவிறே.

" 3. நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரும் ஆச்சான்பிள்ளையும் முதலான ஆசார்யர்கள் தத்வத்ரயமருளிச் செய்கிறவிடத்தில் அசித்துபக்ரமமாக அருளிச்செய்தார்கள்.

" 35. "இவனுடைய புத்திமூலமான ப்ரயத்நத்தையபேக்ஷித்து ஈச்வரன் அநுமதிதானம் பண்ணுகையாலே அந்த க்ரியாநிபந்தநமான புண்யபாபங்களும் சேதநனுக்கேயாகிறது" என்று விவரணத்தில் ஆச்சான்பிள்ளையும்......

" 103. "கார்யோத்பாதகங்களான தத்வங்கள் ஸ்வஸ்வகாரணங்களுமாய்க்கொண்டே உத்பாதிக்கிறதென்று கொள்ளவேணும்" என்று தத்வத்ரய விவரணத்திலே ஆச்சான்பிள்ளை......

(அங்கேயே, மேலே) "இது தத்வத்ரய விவரணத்தில் ஆச்சான் பிள்ளையருளிச்செய்த க்ரமம்.

(அங்கேயே, மேலே) தத்வத்ரய விவரணத்தில் தந்மாத்ரத்துக்கு ஆவரணம் சொன்னவோபாதி......

" 124. இதுவிறே தத்வத்ரய விவரணத்தில் ஆச்சான் பிள்ளை ப்ராதாந்யேந அருளிச்செய்தது.

" 142. ......ஒரு யோஜனையுமுண்டிறே கத்யவ்யாக்யானங்களிலே நஞ்சீயர் ஆச்சான் பிள்ளை முதலான ஆசார்யர்களருளிச்செய்தது.

" 149. "எம்பெருமானுடைய திவ்யாத்ம குணங்களாவன — ஜ்ஞாந சக்த்யாதி ஷட் குணங்களும் அதிலே பிறந்த ஸௌசீல்யாதிகளும்" என்கிற இவ்வாக்யத்துக்கு அர்த்தமெழுதுகிற வளவில் "அதிலே பிறக்கையாவது — வஸ்த்ராத்கர்ஷாபாதக ஷாட்குண்யாயத்த குணபாவமாகை" என்றிறே விவரணத்தில் ஆச்சான் பிள்ளை யருளிச்செய்தது.

" 181. ......இது கரசரணாத்யவயவயோகியாகாநிற்கச் செய்தேயும் நித்யமாயேயிருக்கும் என்றிப்படி விவரணத்திலே ஆச்சான்பிள்ளை யருளிச் செய்தாரிறே.

(முமுக்ஷுப்படி.) 12. "ஷடக்ஷரி வ்யாப்ய பதார்த்தங்களையும் வ்யாபநப்ரகாரத்தையும்......அவற்றிற்காட்டில் இதுக்கு அர்த்தபௌஷ்கல்ய நிபந்தநமான ஆதிக்யமுண்டு" என்று...ஸுஸ்பஷ்டமாக ஆச்சான் பிள்ளை யருளிச் செய்தாரிறே.

" 97. இதுதான் நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் ஆச்சான் பிள்ளை இவர்களருளிச்செய்த ப்ரபந்தங்களிலே ஸுஸ்பஷ்டம்.

(அங்கேயே, மேலே) "லக்ஷ்மீப்ரப்ருதி மஹிஷீவர்க்கங்களும்" என்றிறே ஆச்சான் பிள்ளை யருளிச்செய்தது.

(அங்கேயே, மேலே) "பஞ்சோபநிஷந் மயமாகையாலே பரமபதமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்" என்றிறே ஆச்சான் பிள்ளை யருளிச்செய்தது.

(அங்கேயே, மேலே) "குணத்ரயாத்மிகை யாகையாலே மூலப்ரக்ருதியும் ஸமூஹாத்மிகையாயிருக்கும்" என்றிறே இதுக்கும் ஆச்சான்பிள்ளையருளிச்செய்தது.

http://acharya.org

(அங்கேயே, மேலே) ''அஹோராத்ராதி விபாகங்கள் அநேகமாகையாலே காலமும் ஸமூஹாத்மகமாயிருக்கும்'' என்றிறே இதுக்கும் ஆச்சான் பிள்ளையருளிச்செய்தது.

,, 99. ''தன்குணங்களிலே ஈச்வரன் வ்யாபிக்கும்போது....வ்யாபிக்கவேணும்; ஆகையாலே அநவஸ்தாதுஸ்ஸ்தமாம்'' என்று இதுதன்னை ஸுஸ்பஷ்டமாக ஆச்சான் பிள்ளை அருளிச்செய்தாரிறே.

(த்வயப்ரகரணவ்யாக்யை.) ஆச்சான் பிள்ளை ஜீயர் முதலானோரும் இந்த ப்ரகாரமிறே அருளிச்செய்தது.

(ஆசார்யஹ்ரு.) 99. (விவேகவிவரணத்தில்) ஆகையிறே ''விவேகமாவது * ஆஹாரசுத்தௌ ஸத்வசுத்தி:* என்கிறபடியே அந்த:கரணசுத்திக்கடியான அந்ந சுத்தியென்று ஆச்சான்பிள்ளையருளிச்செய்தது.

24. அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

(ஸ்ரீவசந பூ.) 159. (''உத்தரவாக்யத்தாலே ப்ராப்யஞ் சொல்லுகிறது, ப்ராப்யாந்தரத்துக்கு அன்றென்கை'' இத்யாதியாலே முமுக்ஷுப்படியிலும் இவர் தாமேயருளிச் செய்தாரிறே.) '' * திருமாலைக் கைதொழுவர் * அடியாரைச்சேர்தல் தீர்க்குந் திருமாலை * என்கிறபடியே புருஷகாரம் முன்னாகப் பற்றி ப்ரயோஜனங்களைக் கொண்டகலாதே அவற்றையொழிந்து ஒண்டொடியாள் திருமகளுமவனுமான சேர்த்தியிலடிமையைப் பேறென்று கீழ்ச்சொன்ன உபாயபலத்தைக காட்டுகிறது பிற் கூறு'' என்றிறே இவர் திருத்தம்பியாரும் அருளிச்செயல் ரஹஸ்யத்திலருளிச் செய்தது.

(தத்வத்ரய.) 46. இவருடைய திருத்தம்பியாரும் ஆசார்ய ஹ்ருதயத்திலே அவித்யா காரணம் அநாத்யசித்ஸம்பந்தமென்று அருளிச் செய்தாரிறே.

(முமுக்ஷுப்படி.) 129. ''.....விளைவதறியாதே முறுவலுக்குத் தோற்றுச் சொல்வழிபோமவனைப் பொறுப்பிக்குமென்னுமிடம் சொல்லவேண்டா விறே'' என்று இதுதன்னை இவர் திருத்தம்பியாருமருளிச்செய்தாரிறே.

(ஆசார்யஹ்ரு.) 103. இந்த யோஜநையைப் பற்றவும் பூர்வயோஜனையே இதினுடைய பட்டோலையான பெரியபடிக்குச் சேருவது.

,, 113. இந்த யோஜநை இதன் பட்டோலையான க்ரந்தத்தில் இவரருளிச் செய்த மர்யாதைக்குச் சேரும்.

,, 127. விசிந்தன மென்கிறவிதுக்கு இப்படி வ்யாக்யானம் பண்ணாிற்று இதின்பட்டோலையான திலே ''உறுமோவென்று நிக்யசத்ருவை வென்று புலன் கொள்வடிவை விசிந்தயநாயிருக்கும்'' என்று விசிந்தயந் என்றொருவசன முண்டாகவுமெடுத்து இப்படி இவர்தாமே அருளிச் செய்துவைக்கையாலே.

25. வேதாந்ததேசிகர்.

(தத்வத்ரய.) 39. (இப்படி தார்ய வஸ்துக்களை ஸ்வரூபஸங்கல்பங்களிரண்டாலும் தரிக்குமென்னுமிடம் அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. எங்ஙனேயென்னில்;) ''ஈச்வரன் தன்ஸ்வரூப நிருபகதர்மங்களுக்கும் .....ஸங்கல்பாச்ரிதமென்னக் கடவது'' என்றிப்படி ரஹஸ்யத்ரயஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

,, 80. * இஹ ஜடாம் ஆநிமாய் கேசிதாஹு: * என்றிறே அபியுக்தரும் சொல்லிற்று.

http://acharya.org

,, 82. இதுதான் அபியுக்தராலே விஸ்தரேண ப்ரதிபாதிக்கப்பட்டது. எங்ஙனே யென்னில், த்ரிவிதாசேதநங்களென் றெடுத்து.........ப்ரமாண ப்ரதிபந்நார்த்தத்துக்கு யுக்தி விரோதம் சொல்லவழியில்லை'' என்றிப்படி ரஹஸ்யத்ரய ஸாரத்திலே ப்ரதிபாதிக்கையாலே.

26. வில்லிபுத்தூர்ப்பகவர்.

(ஆசார்யஹ்ரு.) 32. திருவயிந்திர புரத்திலே வில்லிபுத்தூர்ப்பகவரென்பாரொருவர் ... எல்லாருமொருதுறையிலே அநுஷ்டானம் பண்ண, தாம் தனியே ஒரு துறையிலே அநுஷ்டானம் பண்ணுவாராய், ஒருநாள் அநுஷ்டானம் பண்ணிமீளா நிற்கச்செய்தே இருந்த ப்ராஹ்மணர் 'ஜீயரே! எங்கள் துறையிலே அநுஷ்டானம் பண்ண வாராதொழிகிற தென்?' என்ன; * விஷ்ணுதாஸா வயம் யூயம் ப்ராஹ்மணா வர்ணதர்மிண:, அஸ்மாகம் தாஸவ்ருத்தீநாம் யுஷ்மாகம் நாஸ்தி ஸங்கந:* என்ற துறை வேறிட்டுப் போனாராயிற்று.

27. வேதாசார்யபட்டர்.

(ஆசார்யஹ்ரு.) 53. காண்க. [''வேதரூபதேசம்'' என்று மூலம்.]

28. வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர்.

(ஸ்ரீவசந பூ) 6. மற்றைப் பிராட்டிமார்க்கும் ஸூரிகள் முதலான ததீயர்க்கும் இவள் ஸம்பந்தமடியாக வருகிற புருஷகாரத்வமிறேயுள்ளது; இவளைப்போலே ஸ்வதஸ்ஸித்தமன்றே. ஆகையிறே * ஏதத்ஸாபேக்ஷஸம்பந்தாத் அந்யேஷாமமலாத்மநாம், தேவீ ஸூரிகுரூணாஞ்ச கடகத்வம் நது ஸ்வத:* என்று தீபஸங்க்ரஹத்திலே ஜீயரருளிச் செய்தது.

,, 381. ''இந்த விபூதித்வய விஷயமான பாத சப்தமும் த்ரிபாச்சப்தமும் அல்பத்வ மஹத்த்வங்களுக்கு உபலக்ஷண மித்தனையொழிய பரிச்சேதபரமன்று; லீலாவிபூதியிலண்டங்கள்தானே அஸங்க்யாதங்களாயிறே யிருப்பது'' என்று தீபப்ரகாசத்திலே ஜீயரருளிச் செய்கையாலே......

(தத்வத்ரய.) 35. ''இப்படி கர்த்ருத்வம் பரமாத்மாயத்தமானாலும்... ஸர்வப்ரவ்ருத்திகளிலும் சேதநனுடைய ப்ரதமப்ரயத்நத்தை அபேக்ஷித்துக் கொண்டு பரமாத்மா ப்ரவர்த்திப்பியா நிற்குமென்றதாய்த்து'' என்று தீபப்ரகாசத்திலே ஜீயருமருளிச் செய்த அர்த்தங்கள் இவ்விடத்திலே அநுஸந்தேயங்கள்.

,, 103. தத்வநிரூபணத்திலே ஜீயரருளிச் செய்ததுமொரு க்ரமமுண்டு; அதாவது — பூதாதியில் நின்றும் சப்ததந்மாத்ரை பிறக்கும்......

(அங்கேயே, மேலே) * பூர்வபூர்வதந்மாத்ரம் உத்தரோத்தர தந்மாத்ரத்தையும் தத் விசேஷத்தையும் ஆவரிக்கும்'' என்று ஜீயரருளிச் செய்கையாலும்....

(அங்கேயே, மேலே) தத்வநிரூபணத்தில் தந்மாத்ர தத்விசேஷங்களிரண்டுக்கும் ஆவரணம் சொல்லுகிறவளவில்......

(முமுக்ஷுப்படி) 75.......என்று தீபப்ரகாசத்திலும்......என்று ரஹஸ்யத்ரயார்த்த விவரணக்ரமமருளிச் செய்த ப்ரபந்தத்திலும் விவரண லக்ஷணத்தை ஜீயரருளிச் செய்தாரிறே.

(த்வயப்ரகரணவதாரிகை.) ஆச்சான் பிள்ளை ஜீயர் முதலானோரும் இந்த ப்ரகாரமிறே அருளிச்செய்தது.......மாமுனிவன் மேற்கோள்விளக்கு முற்றிற்று. *

http://acharya.org

இருபத்தைந்தாவது உபந்யாஸம்

இராமாநுசன் பெருமையநுபவம்.

சித்திரையில் செய்ய திருவாதிரையில் ஏழ்பாருமுய்ய உதித்தருளின எதிராசருடைய பெருமைக் கடலில் ஒரு சிறு திவலையளவு இப்போது அநுபவிப்போம். "ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களினும், வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர்! — ஏழ்பாருமுய்ய யெதிராச ருதித்தருளும், சித்திரையில் செய்ய திருவாதிரை" என்ற மணவாளமாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்தியை முந்துற அநுஸந்தித்து, சித்திரையில் திருவாதிரையைச் சிறிது சிந்தனை செய்வோம். இந்த நன்னாளின் சிறப்பை நம் மணவாளமாமுனிகள் தாமே ஒரு சீரிய செய்யுளினால் ஆர்த்திப் பிரபந்தத்தில் வெளியிட்டருளியுள்ளார். அது வருமாறு:—

> "சங்கரபாக்கரயாதவபாட்ட ப்ரபாகரர்தங்கள்மதம்
> சாய்வுற வாதியர் மாய்ந்தவரென்று சதுமறைவாழ்ந்திடுநாள்
> வெங்கலியிங்கினி வீறுநமக்கிலையென்று மிகுந்தளர் நாள்
> மேதினி நஞ்சுமையாறுமெனத் துயர்விட்டு விளங்கியநாள்
> மங்கையராளி பராங்குசமுன்னவர்வாழ்வு முளைத்திடுநாள்
> மன்னிய தென்னரங்காபுரி மாமலைமற்றுமுவந்திடுநாள்
> செங்கயல்வாவிகள்சூழ் வயல்நாளுஞ்சிறந்த பெரும்பூதூர்ச்
> சீமானிளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரை நாளே" என்பதாம்.

இப்பாசுரத்தின் தாற்பரியத்தைச் சுருங்க வுரைப்போமிங்கு. எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு முன்னே பலபல மாயா மதத்தவர்கள் இவ்வுலகில் மலிந்து வேதங்களுக்கு ஏலாத பொருள்களை ஏறிட்டுரைத்துத் தத்துவார்த்தங்களை க்ஷோபப்படுத்தியிருந்தார்கள்; அதனால் வேதங்களும் "நமது கதி இப்படியாயிற்றே!" என்று சாலவும் வருந்திக்கிடந்தன. எம்பெருமானார் திருவவதரித்தவன்றே அவற்றின் வருத்தம் தொலைந்து அவை வாழ்ச்சிபெறத் தொடங்கிவிட்டன. "நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது" என்றார் அமுதனார். அன்றியும், இந் நிலவுலகில் கலிபுருஷன் நெடுநாளாகச் செங்கோல் செலுத்திக்கொண்டு தனது பராக்ரமமே ஓங்கி வளருமாறு அரசாட்சி புரிந்துவந்தான்; அன்னவனும் எம்பெருமானார் திருவவதரித்தவன்றே "**கலியுங்கெடுங் கண்டுகொண்மின்!**" என்ற மூதுவர் மெய்ம்மொழி பலிக்குங்காலம் வாய்த்ததுபோலுமென்று துணிந்து இனி நாம் மாள்வதன்றி வாழ்வதற்கில்லையென்று தளர்ச்சியெய்தத் தொடங்கிவிட்டான். "இறந்தது வெங்கலி" என்றார் அமுதனாரும். அன்றியும், பூமிப்பிராட்டியானவள் 'ஸர்வம்ஸஹா' என்று பெயர்பெற்றிருந்தாலும், நல்லார்கள் பலபல கோடிக்கணக்காகத் தன்மீது வாழப்பெற்றாலும் அவர்களைப் பஞ்சுச்சுருள்போல் சிறிதும் ஆயாஸமின்றித் தாங்கி நின்று, தீயவர் ஒருவரிருவர் இருப்பினும் இரும்புகூட்டை தாங்குவதனால்போல் மிகமெலிந்து நிற்பள். உடையவர் திருவவதாரத்திற்கு முன்னே நல்லவர்கள் மிக மெலிந்து தீயவர்களே மிக மலிந்திருக்கப்பெற்றதனால் பூமிப்பிராட்டி பொறுக்கொணாச் சுமையினால் மிகவும் துயருற்றுக்கிடந்தாள்; அன்னவள் எம்பெருமானார் திருவவதரித்தவன்றே, 'இனி இந்நிலவுலகில் தீயார் ஒருவருமின்றிக்கே யனைவரும் நல்லாராகவே வாழ்ச்சி பெறுவர்கள்' என்று திட்டெனத் துணிந்து இனி நமக்குப் பொறுக்கவொண்ணாத பாரம் சிறிதுமிராதென்று தேறித் துயர்விடத் தொடங்கினள். "பல்கலையோர் தாம்மன்னவந்த விராமானுசன்" என்றார் அமுதனாரும். அன்றியும், பல ஆழ்வார்களும் ஆசாரியர்களும் திருவவதரித்து அருமருந்தன்ன ஸ்ரீஸூக்திகளை உதவியருளியிருந்தாலும், அவற்றுக்கு ஸர்வதோமுகமான ப்ரசாரம் ஏற்படாமலும்

http://acharya.org

அழகிய வியாக்கியானங்கள் அமையாமலுமிருந்ததனால் "நம்முடைய அரிய பெரிய காரியங்கள் உலகுக்குப் பெரிதும் பயன்படவில்லையே" என்று அவர்களெல்லாரும் களிப்பின்றியே குன்றியிருந்தனர்; எம்பெருமானார் திருவவதரித்தவன்றே "இனி ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயாதி க்ரந்தங்கள் ஓங்கி விளங்கப்பெறுமாதலால் நமக்கொரு குறையில்லை; நாம் செய்திருந்த காரியங்களெல்லாம் சதசாகமாகப் பணைக்கும்படியான பாக்கியம் வாய்க்க நற்சமயம் வந்திட்டது" என்று துணிந்து அன்னவர்கள் அளவிலாத ஆனந்த மெய்தத் தொடங்கினர். "தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்டமிழ்மறை வாழ்ந்தது" என்றார் அமுதனாரும். அன்றியும், எம்பெருமான் தான் பரமபதத்தில் பரவாஸுதேவனாகி வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செலுத்தியிருக்குமிருப்பிலும், திருப்பாற்கடலில் அடியார்கள் கூக்குரல் செவிப்படுமாறு *வெள்ளை வெள்ளத்தின்மேலொருபாம்பை மெத்தையாக விரித்திருந்து அதைவிட்டுப் புறப்பட்டு ராவண கும்பகர்ண கம்ஸ சிசுபாலாதிகளைத் தொலைத்திட்டு உலகை வாழ்விக்க ராமகிருஷ்ணாதி விபவாவதாரங்கள் செய்தவற்றிலும், கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையுமிருப்பிலும் த்ருப்தி பெறாதே கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் முதலான திருப்பதிகளிலே *பின்னானார் வணங்குஞ் சோதியாய் ஸந்நிதி பண்ணியிருந்தும், அந்தத் திருப்பதிகளைத் திருத்திப் பணிகொள்வாரில்லாமையாலே அர்ச்சாவதாரமும் பயனற்றதாக ஆய்விட்டதே! என்று வருந்தவேண்டியிருந்தது எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு முன்னே; இப்பெரியார் இவ்வுலகினிற் போந்தவன்றே—"ஸர்வதேச தசாகாலேஷு அவ்யாஹத பராக்ரமா, ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம். ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸர முஜ்ஜ்வலா, திகந்த வ்யாபிநீ பூயாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ" என்று நீடூழியூழி நாடெங்கும் போற்றும்படியாக ஸகல திவ்ய தேசங்களிலும் அற்புதமான சீர்திருத்தங்களும் கைங்கர்ய அபிவிருத்திகளும் இனி ஓளிமல்குமென்று துணிந்து அர்ச்சாவதார எம்பெருமான்கள் குறை தீர்ந்து மகிழத் தொடங்கினர். ஆக இங்ஙனம் வேதவேதாந்தங்கள் களிப்புறவும், கலிபுருஷன் தேய்வுறவும், மண்மாது மகிழ்வுறவும், பூருவர்கள் யாவரும் பொலிவுறவும், எம்பெருமான் தானும் இன்புறவும் அமைந்த நன்னாள் சித்திரையில் செய்ய திருவாதிரை யொன்றேயாம்.

இத்திரு நன்னாளிலே தோன்றிய பேராசிரியர் ஆதிசேஷனுடைய அவதாரமென்றும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவமென்றும் விஷ்வக்ஸேனருடைய அவதாரமென்றும் இங்ஙனம் பலவாறாகப் பெரியோர் பணிப்பர். நூற்றந்தாதியில் "அடையார் கமலத்தலர்மகள் கேள்வன் கையாழி யென்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்க வில்லும் புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலம் காப்பதற்கென்றிடையே இராமாநுசமுனியாயின விந்நிலத்தே." என்னும் பாசுரத்திலும், "ப்ரதயந் விமதேஷு தீக்ஷ்ண பாவம் ப்ரபுரஸ்மத் பரிரக்ஷணே யதீந்த்ர:, அப்ருதக் ப்ரதிபந்ந யந்மயத்வை: வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:" என்ற யதிராஜஸப்ததி ஸூக்தியிலும் "எம்பெருமானார் பஞ்சாயுதாழ்வார்களின் அவதாரம்" என்னும் விஷயம் காட்டப்பட்டுள்ளது. "விச்வம் த்ராதும் விஷயநியதம் வ்யஞ்ஜிதாநுக்ரஹஸ் ஸந் விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:" என்கிற யதிராஜ ஸப்ததி ஸூக்தி யொன்றில் விஷ்வக்ஸேநாவதாரமென்னும் விஷயம் கூறப்பட்டுள்ளது.

திருவனந்தாழ்வானுடைய திருவவதாரமென்னும் விஷயத்தைப் பற்பல ஆசிரியர்கள் பேசியுள்ளார்கள். அதனை சேஷாவதாரச் சிறப்புநூலில் விரியவுரைத்தோம். அங்கே கண்டு கொள்வது. எம்பெருமானாருடைய பூர்ண கடாக்ஷ

http://acharya.org

பாத்ரபூதராய் அவர் திறத்துத் தேவுமற்றறியாதே ஈடுபட்டிருந்த மஹாப்ராஜ்ஞரான கருட வாஹன பண்டிதர் பணித்த திவ்ய ஸூரி சரிதமென்னும் மஹா காவ்யத்தில் பதினேழாவது ஸர்க்கத்தில் ஸ்ரீ ராமாநுஜ வைபவம் சொல்லப்புகுந்தவிடத்து "பௌஜங்கம் வபுரபஹாய சேஷபோகீ யத்ரூபம் த்ரிபுவநவந்திதம் ஜகாம" என்று பணித்திருப்பதும், உடையவருடைய அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவரான வடுக நம்பி பணித்த யதிராஜ வைபவ க்ரந்தத்தில் "வேதாந்த ஸித்தாந்த ஸமர்த்தநாய பாஹ்யாந்தரப்ராந்த மதாபநுத்த்யை, சேஷாம்சக: கேசவயஜ்வ தேஹ்யாம் தேஜோ நிதி: ஸீத் கச்சிதிஹாவிராஸீத்" என்றுள்ளது முக்கியமாக இங்கு அநுஸந்தேயம்.

இராமாநுச நூற்றந்தாதியில் "நல்லார் பரவுமிராமாநுசன்" என்ற எண்பதாம் பாசுரத்தின் வியாக்கியானத்தில் — "அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத:பரம், பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ ராமாநுஜஸ் ஸ்ம்ருத:" என்கிற ஆர்ஷ வசநம் உதாஹ்ருதமாகக் காண்கிறது. இந்த ச்லோகத்தில் "கலௌ கச்சித் பவிஷ்யதி" என்கிற பாடமாகவும் கடையடி காண்கிறது. இப்பாடமே பொருத்தமானதென்பர்.

இப்பேராசிரியருடைய ப்ரபாவ விசேஷங்களைப் பார்க்குமிடத்து, நித்யமுக்தர்களனைவரும் திரண்டுவந்து திருவவதரித்தபடியோ! என்றும் சங்கிக்கலாயிருக்கும். அபரிச்சேத்ய ப்ரபாவங்கள் மிகுந்த இவ்வாசார்ய சிகாமணி தம்முடைய திருவடி ஸம்பந்தத்தினால் பின்புள்ளாரனைவர்க்கும் உஜ்ஜீவநம் தந்தருளியது போலவே தமது திருமுடி ஸம்பந்தத்தினால் முற்பட்ட ஆசார்யர்களுக்கும் உஜ்ஜீவநம் தந்தருளியதாக அக்காலத்திலிருந்த மஹான்கள் உபச்லோகித்துள்ளார்கள். இதைச் சிலர் அதிசயோக்தியென்றுகொண்டாலும் அங்ஙனம் சிறப்பித்துக் கூறுதற்கு ஏற்ற பெருமேன்மை இப்பெரியார் பக்கல் நிரம்பியிருந்ததென்று கொள்ளத் தட்டில்லை.

எம்பெருமானாருடைய திருமேனியின் தோற்றமே அநுபவ ரஸிகர்களுக்குத் தேனும் பாலுமமுதுமாக உள்ளுந்தோறு முள்ளம் தித்திக்கும். "காணிலுமுருப் பொலார்" என்னும்படி யிராநின்ற யதிகளின்படி யன்றியே எம்பெருமானாருடைய பரம விலக்ஷணமான திவ்ய மங்கள விக்ரஹ ஸந்நிவேச அமைதியை "காஷாய சோபி கமநீயசிகாநிவேசம் தண்டத்ரயோஜ்ஜ்வலகரம் விமலோபவீதம், உத்யத்திநேசநிப முல்லஸதூர்த்வ புண்ட்ரம் ரூபம் தவாஸ்து யதிராஜ! த்ருசோர் மமாக்ரே" என்றும், "உபவீதிநமூர்த்வ புண்ட்ரவந்தம் த்ரிஜகத் புண்யபலம் த்ரிதண்ட ஹஸ்தம், சரணாகதஸார்த்தவாஹமீடே சிகயா சேகரிணம் பதிம் யதீநாம்" என்றும் பூருவர்கள் பரமபோக்யமாகப் பேசி யநுபவித்துப் போந்தார்கள். இவ்வடிவழகு விஷயமாக இன்சுவையே வடிவெடுத்ததாம்படி எம்பார் அருளியுள்ள பாசுரம்,

"பற்பமெனத்திகழ் பைங்கழலுன்றன் பல்லவமேவிரலும்
பாவனமாகிய பைந்துவராடை பதிந்தமருங்கழகும்
முப்புரிநூலொடு முன்கையிலேந்திய முக்கோல்தன்னழகும்
முன்னவர்தந்திடு மொழிகள் நிறைந்திடு முறுவல்நிலாவழகும்
கற்பகமேவிழி கருணைபொழிந்திடு கமலக்கண்ணழகும்
காரிசுதன்கழல் சூடியமுடியும் கனநற்சிகைமுடியும்
எப்பொழுதும் எதிராசன்வடிவழ கென்னிதயத்துளதால்
இல்லையெனக்கெதி ரில்லையெனக்கெதி ரில்லையெனக்கெதிரே" என்பதாம்.

http://acharya.org

26. இராமாநுசன் திருநாமவைபவம்.

உலகுக்கு ஓருயிரான எம்பெருமானாருடைய திருக்குணங்களைப்பற்றியோ திவ்ய சரிதையைப்பற்றியோ, அவரது ஸ்ரீஸூக்திகளிலுள்ள விசேஷங்களைப் பற்றியோ ஏதேனுமொரு வகையில் அவருடைய ஸம்பந்தமான அநுபவம் நமக்குப் பரம பவித்திரமாதலால் இப்போது அவருடைய திருநாமத்தைப் பற்றின சிந்தனையிலே இழிகின்றோம்.

இவ்வாசிரியர்க்கு இத்திருநாமம் எதனால் இடப்பட்டதென்று ஆராயுமளவில், முன்னோர்களுடைய நூல்களிலிருந்து இங்ஙனே அறியலாகிறது ; — ஸ்ரீராமாநுஜனென்னுஞ்சொல் ஸ்ரீ ராமபிரானுடைய தம்பி யென்னும் பொருள்கொண்டது. தசரதாத்மஜனான இராமபிரானுக்கு இளையோனாக அவதரித்த லக்ஷ்மணன் என்றபடி. இவன் இடைவீடின்றிக் கைங்கரியமே பேறுபோக்காக இருந்தது போல ஸ்வாமி உடையவரும் கைங்கரியத்தையே பெருஞ் செல்வமாகக் கொண்டிருக்கப் போகிறாரென்பதை அவதார ஸமயத்திலேயே யோகத்ருஷ்டியினாலறிந்தவரும் இவர் தமக்கு மாதுலருமான திருமலைநம்பியென்னுமாசிரியர் இவர்க்கு ஸ்ரீராமாநுஜனென்று நாமகரணஞ் செய்தருளினர் — என்பதாக.

ஸ்ரீ ராமபிரான் கைகேயியின் வரப்ரார்த்தனையை நிறைவேற்றும் வியாஜமாகக் கானகஞ் செல்லப் புறப்படும்போது இளையோனான இலக்குமணன் தானும் நிர்ப்பந்தித்துத் தன்னையும் உடனழைத்துச் செல்லும்படி வேண்டினன். தானும் காட்டுக்கு வர விரும்பியது எதற்காகவென்னில்; *பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே, அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச் ச தே * என்பது அப்போது இவ்விளைய பெருமாளுடைய வார்த்தையாக ஸ்ரீராமாயணத்தில் உலகறிய நிற்கும் ச்லோகம். "தேவரீர் பிராட்டியோடுகூட சித்திரகூடத்தாழ்வரை முதலான இடங்களில் இன்புறும்போது அடியேன் *ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி வழுவிலா வடிமைகள் செய்யப்போகிறேன்" என்பது மேலே குறித்த ச்லோகத்தின் கருத்து. *அப்படியே அவ்விளையோன் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அடிமையெனும் அத்தாணிச் சேவகஞ் செய்தே கழித்தனன். அதுபோலவே ஸ்வாமி உடையவரும் தம் வாழ்நாள் முழுவதையும் தொண்டுபூண்டே கழித்தருளினரென்பது அவரது திவ்ய சரிதையினால் மிகப் பிரசித்திபெற்ற விஷயம். *தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்ததும் * மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்ததும் முதலானவை ஒப்புயர்வற்ற கைங்கரியங்களன்றோ. ஆக இக்காரணம்பற்றியே ஸ்வாமிக்கு ராமாநுஜனென்னுந் திருநாமமிடப்பட்டதென்பது மிகப் பொருத்தம். லக்ஷ்மண முநி யென்றும் இளையாழ்வாரென்றும் வழங்குகின்ற அவரது திருநாமங்களும் இதனை வற்புறுத்தி நிற்கும்.

இனி, ராமாநுஜனென்ற திருநாமம் லக்ஷ்மணனுக்குப்போலவே கண்ணபிரானுக்கும் பொருந்தியதே. 'பலராமனுடைய தம்பி' என்னுங் காரணத்தினால் கண்ணபிரானை ராமாநுஜனென்னக் குறையில்லையன்றோ. ஆனதுபற்றியே முகுந்தமாலை யென்னும் உலகமறிந்த ஸ்தோத்திரத்தில் "ஹே ராமாநுஜ ஹே ஜகத்த்ரய குரோ ! ஹே புண்டரீகாக்ஷ மாம் ஹே கோபீ ஜநநாத பாலய" என்று ராமாநுஜனென்ற திருநாமத்தினாலேயே கண்ணபிரான் அழைக்கப்பட்டுள்ளார். ஆகவே கண்ணபிரானுடையதான அந்தத் திருநாமமே ஸ்வாமி உடையவர்க்குச் சாத்தப்பட்டதென்று கொள்ளுகிற ஸம்பிரதாயமும் ஒன்றுண்டு. ஸ்ரீநிகமாந்த தேசிகன் பணித்த

http://acharya.org

யதிராஜ ஸப்ததியில் ‘‘**சமிதோதய சங்கராதிகர்வ: ஸ்வபலாத் உத்த்ருத யாதவப்ரகாச:, அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:**’’ என்ற ச்லோகம் இதற்கு ஆதாரமாக அவதரித்ததாகும்.

கண்ணபிரானுக்கும் உடையவர்க்கும் பல படிகளாலும் ஸாம்யமுண்டு. கண்ணபிரானைத் தோன்றின பகவான் செய்த செயல்களும் ஸ்ரீராமாநுஜர் செய்தருளின செயல்களும் ஒத்திருக்கையாகிற ஒற்றுமைநயம் ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. மேலே யெடுத்துக்காட்டிய ***சமிதோதய சங்கராதிகர்வ:*** இத்யாதியான யதிராஜ ஸப்ததிச்லோக ரத்னத்தில் கண்ணனுக்கும் உடையவர்க்கும் ஸாம்யம் சிலேடையினால் நிர்வஹிக்கப்பட்டுளது. அது வடமொழிக்கடலில் ஆழ்ந்தவர்கட்கே ரஸிக்கக் கூடியது. அதைப்பற்றிப் பிறகு விரியவுரைப்போம்; இப்போது இங்கு நாம் நிரூபிக்கும் ஒற்றுமை சரித்திரப்போக்கில் ஸம்பந்தப்பட்டதாகும். கேண்மின் :—

கண்ணனுக்கும் ஸ்ரீராமாநுஜர்க்கும் 16 வகையான ஒற்றுமைகள்.

1. கண்ணபிரான் திருவவதாரஞ் செய்த இடம் சிறைக்கூடம் என்பது உலகமறிந்தது. ஸ்ரீராமாநுஜர் அவதரித்த இடமும் சிறைக்கூடமே. எப்படியெனில்; *அமரரோடு உயர்விற் சென்று அறுவர்தம் பிறவி யஞ்சிறையே* [திருவாய்மொழி 1—3—11] என்ற நம்மாழ்வார் திருவாக்கின்படி இந்த ஸம்ஸார மண்டலமே ஒரு சிறைக்கூடமன்றோ. இஃது * இருள்தருமா ஞாலமாதலால் இருள் மலிந்தவிடத்தே வந்து பிறந்தார் ஆசாரியர். கண்ணனும் * இருள் நாள் பிறந்த வம்மான் * என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தின்படியும் * வேண்டித் தேவரிரக்க — வீங்கிருள் வாய் வந்து பிறந்ததும் * என்ற நம்மாழ்வார் பாசுரத்தின்படியும் இருள் மலிந்த போழ்தன்றோ வந்து பிறந்தது.

2. கண்ணபிரான் அவதரித்தபோது ***ஜாதோஸி தேவதேவேச! சங்கசக்ரகதாதர !*** என்கிறபடியே சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையனாகவே சுடர்விளக்கத்தோடு திருவவதரித்தான். ஆசாரியர் அவதரிக்கும்போதும் நம்போலியரைப்போலே அழுதல் அரற்றுதல் செய்யாதே மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்கத்தையே காட்டிக்கொண்டு அனைவரும் வியப்புறுமாறு அவதரித்தார். கண்ணபிரான் பிறந்தவிடம் ஒன்று; இளமையில் வளர்ந்தவிடம் வேறொன்று; பிறகு வளர்ந்தவிடம் மற்றொன்று. (அதாவது) வடமதுரையிலே பிறந்தது; திருவாய்ப்பாடியிலே இளமையில் வளர்ந்தது; பிறகு முதுமையில் த்வாரகை முதலானவிடங்களில் வளர்ந்தது. ஆசாரியரும் பிறந்தது ஸ்ரீ பெரும்பூதூரில்; இளமையில் வளர்ந்தது காஞ்சீபுரியில்; பிறகு வளர்ந்தது ஸ்ரீரங்கம், திருநாராயணபுரம் முதலானவிடங்களில். [மற்றொரு வகையுமுண்டு;] ‘‘திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து’’ என்கிற நம் முன்னோர்களின் முதுமொழியின்படியே திருவஷ்டாக்ஷர மஹா மந்திரத்தினால் ஸ்வரூபவுணர்ச்சி பெறுதலாகிற பிறவியைப்பெற்று, த்வயம் என்கிற மந்த்ரத்தின் அநுஸந்தானத்தையும் அதன்படி அனுட்டானத்தையும் செல்வவாழ்ச்சியாகக் கொண்டிருப்பவரென்க. பிறக்குமிடம் திருமந்த்ரம்; வளருமிடம் த்வயம் — ஆகையாலே இதனால் கண்ணனோடு ஒப்புமை.

3. கண்ணபிரான் பிறந்த வயிற்றில் இவனொருவனே பிறக்கவில்லை; * மக்களறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில், சிக்கன வந்து பிறந்து நின்றாய் * [பெரியாழ்வார் திருமொழி 5—3—1.] என்கிறபடியே மற்றும் பல மக்கள் பிறந்தாருண்டு; ஆனால் அந்தப் பிள்ளைகளினால் உலகுக்கு யாதொரு உதவியும் நேர்ந்ததில்லை; அவர்கள் பிறந்ததும் இறந்ததுமே தெரியவருகின்றது. இது

http://acharya.org

போல, ஆசாரியர் திருவவதரித்த இவ்வுலகத்தில் மற்றும் பலபேர்களும் ஒக்கப் பிறக்கின்றார்களெனினும் அவர்களால் உலகுக்கொரு நன்மையுமில்லையாயிற்று. அவர்களின் பிறப்பும் இறப்புமேதான் உலகுக்குத் தெரியும்.

4. கண்ணபிரான் வடமதுரையில் நின்றும் திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளும்போது "வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ" என்னும்படி பேராழமான பெருவெள்ளமும் முழந்தாளளவாக வற்றிப்போயிற்றென்று தெரிய வருகிறது. அதுபோல, ஆசாரியர் சிறிது ஸஞ்சரிக்கத் தொடங்கும்போதே "பிறவியென்னுங் கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால்" என்ற பெரியாழ்வார் திருவாக்கின்படியே ஸம்ஸாரமாகிற பெருங் கடலும் வற்றத் தொடங்கிற்றென்க.

5. பராத்பரனான பெருமான் தனது பெருமைகளை யெல்லாம் மறைத்து அடக்கிக்கொண்டு நீறு பூத்த நெருப்புப்போலேயாகி இடக்கை வலக்கை யறியாத ஆயர்களோடே கலந்து பழகினன்: அதுபோல ஆசாரியரும் மிதஞானச் சிறுதழவியாய்த் தமது ஞான சக்திப்பெருமைகளையெல்லாம் மறைத்துக்கொண்டு அறிவிலா மனிசரோடே கலந்து பழகியிருந்தனர். கண்ணன் இடையர்களோடு மாத்திரம் கலந்து பழகி யிருந்தானல்லன்; தன்னை வதைக்க வழிபார்த்திருந்த ஆஸுரப்ரக்ருதிகளோடும் கலந்திருந்து காலங் கழித்தனன். ஆசாரியரும் தம்மை மாய்க்க வெண்ணின யாதவப்ரகாசர்போல்வாரிடத்திலும் கலந்திருந்து காலங் கழித்ததுண்டே.

6. வளர்ந்தருளுமிடத்தில்* தீயபுந்திக் கஞ்சனால் ஏவப்பட்ட பூதனை தாய் வேஷம் பூண்டுவந்து நஞ்சு தீற்றிய முலையை உண்ணக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல முயன்று தானே முடிந்து போனாள். இந்தப் பூதனையின் வரலாற்றைப் பேசுகின்ற தேசிகர் யாதவாப்யுதயத்தில் *கம்ஸப்ரயுக்தா கில காபி மாயா * என்று மாயை யென்கிற சொல்லால் கூறினர். மாயை யென்று மூலப்ரக்ருதிக்குப்பெயர். அது உண்மையில் விஷம் போன்றதாயிருக்கச் செய்தேயும் தன்னிடத்தில் போக்யதா புத்தியை யுண்டு பண்ணிக்கொண்டு தன் பக்கலிலே யீடுபடுத்தி நம்போல்வாரை முடிக்கப் பார்க்கிறது இப்படியே ஆசாரியரையும் முடிக்கப் பார்க்கையில் அவரை முடிக்கமாட்டாமல் அவரது அளவற்ற பெருமையினால் தானே முடிந்து நின்றது.

7. *கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி * [திருப்பாவை — 6] என்றபடி அஸுராவேசம் பெற்றவொரு சகடத்தைக் கண்ணன் திருவடிஸ்பர்சத்தால் நொறுக்கி முறித்து முடித்தனன் என்பது ப்ரஸித்தம். ஆசாரியரும் தமது திருவடி ஸ்பர்சத்தினால் சகடபங்கம் செய்தவரே. (எப்படியென்னில்) ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகும் ஸாதனம் சகடமெனப்படுவது. இங்கிருந்து நாம் அப்பால் செல்லப் பல வழிகளுண்டு; நரகம் சுவர்க்கம் முதலானவற்றின் வழிகளிற் கொண்டு செல்லுவது கள்ளச் சகடமாகும்; ஆசாரியருடைய திருவடி ஸம்பந்தத்தினால் அது தொலைந் தொழிந்தேயாம். அர்ச்சிராதி மார்க்கமாகிய நல்வழியிற் செல்லும் ஸாதனமே மேம்பட்டுத் தீயவழிகளில் செல்லும் ஸாதனம் சிதைந் தொழியுமென்க.

8. கயிற்றினால் கட்டி ஒருரலிலே பிணித்துவிடப்பெற்ற கண்ணன் அவ்வுரலையுமிழுத்துக்கொண்டு தவழ்ந்து இரட்டை மருத மரங்களின் நடுவே யெழுந்தருளியபொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அந்த இரட்டை மரங்களிரண்டும் முறிந்து விழுந்தனவாக யமளார்ஜுன பங்க விருத்தாந்தமுள்ளது. இணைபிரியாதே நின்ற இரட்டை மருத மரங்கள்போல இணைபிரியாது

http://acharya.org

நின்று நம்மை நலியுமவை பலவுண்டு. பகவத்கீதையின் நான்காவது அத்யாயத்தில் * த்வந்த்வா தீதோ விமத்ஸர:* என்றும், ஏழாவது அத்தியாயத்தில் *த்வந்த்வமோஹேந பாரத!* என்றும் பதினைந்தாமத்யாயத்தில் * த்வந்த்வைர் விமுக்தாஸ்ஸுக துக்கஸம்ஜ்ஞை:* என்றும் இப்படிப் பலவிடங்களில் த்வந்த்வம் (இரட்டை) என்று பல சொல்லப்பட்டுள்ளன; இன்பு துன்பு, அஹங்கார மமகாரம், காமக்ரோதம், புண்ணிய பாபம்...என்னுமிவையெல்லாம் இரட்டைகளாம். இவையெல்லாம் ஆசாரியர் திருவடி ஸம்பந்தம் பெற்ற வளவிலே இற்றொழிந்தனவென்க.

9. * வையமேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே * என்றும் * வாயுள் வையகங்கண்ட மடநல்லார் * என்றும் சொல்லுகிறபடியே கண்ணபிரான் தனது திருவாயில் ஏழுலகங்களையும் அன்பர்களுக்குக் காட்டினன். அதுபோல ஆசாரியரும் 1. ச்ருதிகள், 2. ஸ்மிருதிகள், 3. இதிஹாஸங்கள், 4. புராணங்கள் 5. பாஞ்சராத்ரங்கள், 6. ஆழ்வாரருளிச் செயல்கள், 7. ஆசார்ய திவ்ய ஸூக்திகள் ஆகிய ஏழையும் தமது திருவாக்கில் அன்பர்கட்குக் காட்டுவர்.

10. யமுனையாற்றில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்நியினால் கொதிப்படைந்த நீருள்ளதாக்கிப் பெருங்கேடு விளைத்த காளியனென்னுங் கொடிய நாகத்தைக் கண்ணபிரான் கொழுப்படக்கினன். இவ்வரலாற்றை யாதவாப்யுதய காவியத்தில் தேசிகர் கூறுமிடத்து (4 - 125) ஸ்ரீராமாநுஜர் செய்தருளின செயலையே உவமையாகக் காட்டியருளினர். ஐந்தலைவாய் நாகமாகிய காளியன் யமுனையாற்றைக் கலக்கிக் கெடுத்தது — விஷவாக்குக்களான புறமதத்தவர்கள் மனம் போனபடியெல்லாம் கூறும் தவறான பொருள்களாலே வேதங்களைக் கெடுத்தபடியாம். அந்தக் கெடுதியைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை எல்லாரும் இனிமையாகப் பருகும்படி செய்தது — ஆசாரியர் தவறான பொருள்களை நீக்கி நல்ல பொருள்களை வெளியிட்டு வேதத்தை ஸத்துக்களுக்கு உபஜீவ்யமாக ஆக்கினபடியாம். யமுனையின் ஸ்தானத்தில் வேதம்; காளியன் ஸ்தானத்தில் குதர்க்கவாதிகள; கண்ணன் ஸ்தானத்தில் ஆசாரியர். * தூயபெருநீர் யமுனைத் துறைவனை * என்னும்படி யமுனையாறு இடையறாத பகவத் ஸம்பந்தத்தை யுடையதாயிருந்ததுபோல வேதமும் பகவத் ஸம்பந்தத்தை நியதமாகவுடைத்தாயிருக்கும்.

காளியன் ஐந்து தலைகளாலும் நஞ்சை யுமிழ்ந்து நாசம் விளைவித்ததுபோல, புறமதத்தவர்கள் ஐந்துவிதமான துர்வாதங்களாலே நாசத்தை விளைவிக்கின்றனர்; (எப்படியென்னில்) 1. ஈச்வரனே யில்லையென்னுதல், 2. ஈச்வரன் உண்டெனினும் அவன் அனுமானத்தால் ஸித்திப்பவனேயன்றி சாஸ்த்ரத்தால் ஸித்திப்பவனல்லன் என்னுதல்; 3. சாஸ்த்ரங்களைக்கொண்டே ஈச்வரனை யங்கீகரித்தும் அவனுக்குக் குணங்களும் விக்ரஹமும் இல்லை யென்னுதல், 4. ஈச்வரன் ஒருவனே யென்பதில்லை, பல ஈச்வரர்கள் உண்டென்னுதல், 5. பிரபஞ்சமேயில்லை — ஸர்வம் சூன்யம் என்னுதல் ஆக இப்படிப்பட்ட ஐவகையான அபார்த்தங்களினால் புறமதத்தவர்கள் வேதங்களைக் கெடுக்க, அந்தக் கெடுதல்களை ஆசாரியர் போக்கியருளினர். காளியன் தலையிலே கண்ணபிரான் அடியிட்டு நடனம் புரிந்தாப்போலவே * நாவலிட்டுழிதருகின்றோம் நமன் தமர் தலைகள்மீதே * (திருமாலை — 1) என்ற கணக்கிலே கூத்தாடப் பெறுதலுங்காண்க.

11. குதிரை வடிவங்கொண்டு மஹாபயங்கரனாகவந்த கேசி யென்னுமஸுரனைக் கண்ணபிரான் தொலைத்தருளினன்; அதுபோல நம்பேராசிரியர் * இந்த்ரியாணி ஹயாநாஹு:* என்ற உபநிஷத்தின்படியே குதிரைகளாகச் சொல்லப்

பட்ட இந்திரியங்களின் வலியை யடக்கி ஜிதேந்த்ரியராய் *காமாதிதோஷஹர மாத்மபதாச்ரிதாநாம்* என்றும் *மதநகதநைர் ந க்லிச்யந்தே யதீச்வரஸம்ச்ரயா:* என்றும் சொல்லும்படி வாழ்ந்தவர்.

12. கம்ஸனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஓரசுரன் விளாமரத்தின் வடிவமாய், தன் கீழே கண்ணன் வரும்போது மேல்விழுந்து கொல்வதாக எண்ணி வந்து நிற்கவும், மற்றோரசுரன் கண்ணனை முட்டிக் கொல்லும்பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு நிற்கவும் இவற்றையறிந்த கண்ணபிரான் ''விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே'' ''கன்று கொண்டு விளங்கனியெறிந்து'' என்கிறபடியே கன்றைச்சுழற்றி விளவின் மீதெறிந்து இரண்டையும் ஒருசேர முடித்தருளினன் என்ற வரலாறு முள்ளைக்கொண்டே முள்ளைக் களைகின்றபடியைக் காட்டுகின்றது. இதுபோலவே ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யகாரர் புறமதங்களைக் கண்டிக்குமிடத்து அவை பரஸ்பரவ்யாஹதங்களாயிருக்கும்படியை நன்கு நிரூபித்துக்காட்டி அவைகளைக் கொண்டே அவற்றை மறுத்தொழிப்பவர்.

13. இடையர்கள் வழக்கப்படி இந்திரனுக்குப் பூஜை செய்யப் பற்பல வண்டிகளால் சோறும், தயிரும், நெய்யும், காய்கறிகளும் சேகரிப்பதைக் கண்டு கண்ணன் அப்பூசனையனைத்தையும் கோவர்த்தனமலைக்கே இடும்படி கட்டளையிட்டுத் தானே ஒரு தேவதா ரூபங்கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்தருள, இந்திரன் பசிக்கோபத்தினால் மேகங்களை ஏவிக் கடூரமான கல்மழையை ஏழுநாள் பெய்விக்க, அதனால் யார்க்கும் யாதொரு தீங்கும் நேரிடாதபடி கண்ணன் அம்மலையையே குடையாக வெடுத்துப்பிடித்து நின்றனன் என்பது ப்ரஸித்தமான கதை. தேவதாந்தரத்திற்கு வழிபாடு செய்வதைப் பொறுத தன்மையும் அந்த வழிபாடுகளையெல்லாம் தானே ஏற்றுக்கொள்ளுந்தன்மையும், அதனால் எதிரி என்ன தீங்கு செய்ய நினைத்தாலும் அதற்குப் பிரதியாகத் தீங்கிழைக்க நினையாது பெருந்தகவும், தன்னையடுத்தவர்களைத் தான் ரக்ஷித்துக்கொண்டு நிற்றலுமாகிய விஷயங்கள் இவ்விதிஹாஸத்தில் கிடைக்கின்றன. *மறந்தும் புறந்தொழாமாந்தர்* என்றிருக்குமாசிரியர் தேவதாந்தர பஜனத்தைச் சிறிதும் ஸஹியார். ''திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு'' என்று துணிந்து உபதேசிப்பர். *ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா* என்றும் *பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து* என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமானே ஆசாரியனாக வந்து பிறந்ததனால் ஆராதனைகளெல்லாம் ஆசார்யனுக்கே சேரும். ''குற்றஞ்செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்'' [ஸ்ரீவசனபூஷணம் 305] என்றிருப்பவர் ஆசார்யராகையாலே தீங்கிழைப்பார் திறத்திலும் பிரதியாகத் தீங்கிழைக்க நினையார். பெருமழையில் நின்றும் கண்ணன் காத்தருளினதுபோல *அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்தத து:க்கவர்ஷிணி - பவதுர்த்திநே* [ஸ்தோத்ரரத்நம்-49] என்னப்பட்ட பெருமழையில் நின்றும் (அதாவது, ஸம்ஸாரத் துயர்ப் பெருமழையினின்றும்) காத்தருளினர். கண்ணன் ஏழுநாள் காத்தனன். ஆசிரியர் காப்பது ஏழேழ் பிறவிக்கும்.

14. கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக, அவளது தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி அஸுராவேசம்பெற்ற ஏழு எருதுகளை வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன். நம் பரமாசார்யர் ''எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம்போலே திருமந்த்ரம்'' [முமுக்ஷுப்படி 113] என்கிறபடியே திருமந்த்ரமாகிற திருமங்கலியத்தை சேதநர்

http://acharya.org

களுக்குக் கட்டி விவாஹம் நடத்துகைக்கு அங்கமாக, காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம், அஸூயை என்கிற ஏழு விரோதிகளையும் தொலைத்தருளினர்.

15. கண்ணன் இரண்டு மல்லர்களை மடித்ததுபோல ஆசிரியர் *நீர் நும தென்றிவை வேர்முதல் மாய்த்து* என்கிறபடியே அஹங்கார மமகாரங்களை அடியறுத்தவர். கண்ணன் குவலயாபீடமென்கிற மதயானையை முடித்தாப்போலே ''மதக்களிறைந்தினையும் சேரி திரியாமல் செந்நிறீஇ'' என்கிற பொய்கையார் பாசுரத்தின்படியே மதகளிருகிய இந்திரியத்தின் துஷ்டத்தன்மையைத் தொலைத்தவர். கண்ணன் மாலாகாரர் திருமாளிகைக் கெழுந்தருளி அவர் தந்த பூவைப் பெற்று உகந்ததுபோல நம் ஆசிரியர் ***அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ:, ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:, ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவ ச, ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்*** * என்னப்பட்ட எண்பகர் பூவையும் சிஷ்யர்கள் பக்கலிலே செழித்து வளரக் காணப்பெற்றுக் களித்தமையறிக.

16. கண்ணபிரான் கம்ஸ சிசுபால கௌரவ ப்ரப்ருதிகளை முடித்துப் பஞ்ச பாண்டவாதிகளை வாழ்வித்ததுபோல நம் பரமாசார்யர் * தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனரென்னும்படியாக * நாட்டிய நீசச் சமயங்களை மாள்வித்து அர்த்த பஞ்சகம் முதலிய விசேஷார்த்தங்களை எங்கும் விளங்கச் செய்தனர். இங்ஙனே மற்றும் பலவுங்காண்க.... ... ... *

27. இராமாநுசர் அன்னமும் வண்டுமாவர்

மணவாளமாமுனிகள் யதிராஜவிம்சதியில் இரண்டாவது ச்லோகத்தில் எம்பெருமானரை ஹம்ஸமாகவும் வண்டாகவும் அருளிச்செய்துள்ளார். * **ஸ்ரீரங்கராஜ சரணம்புஜராஜஹம்ஸம்** * என்றும் * **ஸ்ரீமத்பராங்குசபதாம்புஜப்ருங்ஃராஜம்** * என்றும். (அதாவது) ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாமரைகளிலே ராஜஹம்ஸமாயிருப்பவர்; நம்மாழ்வாருடைய திருவடித்தாமரைகளிலே சிறந்த வண்டாக இருப்பவர் என்று கூறியவாறு. எம்பெருமானர் *தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப் பூண்டவன்பாளன்* [இராமாநுச நூற்றந்தாதி — 31] என்கிறபடியே தேவப்பெருமாள் திருவடிவாரத்திலே பேரன்பு பூண்டவராயிருந்தும் ஸ்ரீரங்கநாதனல் விசேஷகடாக்ஷம் செய்தருளப்பெற்றுத் தென் திருவரங்கம் சென்று சேர்ந்து ***யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ**** [இவ்வுடல் விழுந்தணையும் இந்தத் திருவரங்கம் பெரிய கோயிலிலேயே இனிது வாழக்கடவீர் - சரணாகதிகத்யம் – 19.] என்று திருவரங்கச் செல்வனரால் அநுக்ரஹிக்கப்பட்டு அப்பெருமானுடைய திருவடிவாரத்தின் கீழேயே இனிது * வாழ்ந்தபடியினல் * **ஸ்ரீரங்கராஜ சரணம்புஜ ராஜஹம்ஸம்** * என்றருளிச் செய்யலாயிற்று. இனி * **ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜப்ருங்கராஜம்** * என்ற விசேஷணத்தினல் — ஸ்வாமி நம்மாழ்வாரது திருவடித்தாமரைகளிலே வண்டுபோல் படிந்திருப்பவரென்றது.

ஆகவிப்படி ஸ்வாமியை ஹம்ஸமாகவும் வண்டாகவும் கூறினதிலிருந்து தேறுகின்ற ஸ்வாமியினது சில பெருமைகளை ஸ்வாபதேசார்த்தாநுபவப்ரணாளியாலே வெளியிடுகிறேமிங்கு. ஆழ்வார்கள் தமது திவ்யப்ரபந்தங்களிலே அன்னங்களையும் வண்டுகளையும் தூதுவிடுவதாக அருளிச்செய்வதுண்டே; அங்கு எம்பெருமானர் போல்வாரான மஹாசார்யர்களையே தூதுவிடுவதாக உள்ளுறை பொரு

http://acharya.org

ளாகையாலே அதைத் திருவுள்ளம்பற்றி ஸ்வாமியையிங்கு அன்னமாகவும் வண்டாகவுமருளிச்செய்வது மிகப்பொருத்தம். அன்னத்தின் படிகளும் வண்டின் படிகளும் ஸ்வாமி பக்கலிலே நிரூபிக்கப்படுகிறபடியைக் காணீர்;—

ஹம்ஸத்திற்குள்ள தன்மைகள் ஸ்வாமி பக்கலிலே குறையற்றிருக்கின்றன. எங்ஙனேயென்னில்; (1.) நீரையும் பாலையும் கலந்துவைத்தால் அவற்றைப் பிரிக்கவல்லமை யுடையது ஹம்ஸம் என்று பிரமாணங்களிலறிகின்றோம்; ***ஹம்ஸோ யதா க்ஷீரமிவ அம்பு மிச்ரம்*** என்பது முதலான வசநங்கள் காண்க. இதனால் ஹம்ஸமானது ஸாராஸாரவிவேகத்தில் மிகுந்த வல்லமையுடையது என்பது தேறும். ஸ்வாமி தாமும் ***அஸாரமல்பஸாரஞ் ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே*** என்றபடி ஸாராஸாரமிச்ரமாயிருந்த சாஸ்த்ரங்களிலே அஸாரமாயும் அல்பஸாரமாயுமுள்ளவற்றை யெடுத்துத் தள்ளி மிகவும் ஸாரமானவற்றையே கைக்கொண்டவர். பாஹ்யமதங்களையும் குத்ருஷ்டி மதங்களையும் நிரஸித்து ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய உபயவேதாந்தப்ரவர்த்தந ப்ரவீணரா யெழுந்தருளியிருந்து ரஹஸ்யார்த்தங்களில் பஹிரங்கமான அர்த்தங்களைத்தள்ளி அந்தரங்கமான அர்த்தங்களைக் கொண்டருளினர் என்பது இங்கு விவக்ஷிதம்.

அப்படிப்பட்ட அர்த்தங்களில் ஒன்று இங்கு எடுத்துக்காட்டுவோம்; —

திருவாய்மொழி வியாக்கியானத்தில் பலவிடங்களில் எம்பெருமானாருடைய நிர்வாஹமென்று விலக்ஷணமான அர்த்தங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கேண்மின்; * உயர்வறவுயர்நலம்* என்கிற முதற்பாட்டினீற்றடியில் ***துயரறுசுடரடி*** என்றுள்ளவிடத்திற்கு – ''அடியார்களுடைய துக்கங்களையெல்லாம் அறுக்கிற [அதாவது போக்கடிக்கிற] திருவடி'' என்று எம்பெருமானார்க்கு முன்புள்ள ஆசாரியர்கள் அருளிச் செய்தார்களாகவும், எம்பெருமானார் அப்படியன்றிக்கே [அதாவது, துயரறுக்குஞ் சுடரடி யென்று கொள்ளாமல்] 'துயரறும் சுடரடி' யென்றுகொண்டு தனக்குண்டான துயரைத் தான் தவிர்த்துக்கொள்ளுந் திருவடி யென்று பொருளருளிச் செய்ததாகவும் வியாக்கியானமுள்ளது. பூருவர்கள் பணித்த அர்த்தத்திற்காட்டிலும் ஸ்வாமி பணித்த அர்த்தத்தில் என்ன சிறப்பு? என்பதை ஆராய்ந்து அறியவேணும். எம்பெருமான் அடியார்கள் படுந்துயரைத் தீர்க்கிறுனென்பது இதிஹாஸபுராணாதிகளில் தேறின அர்த்தமே; அது மறுக்கத்தக்கதன்று. எம்பெருமானார் அதைத்தள்ளி வேறு பொருள் பணித்ததானது அப்பொருள் அஸம்பத்தம் என்கிற திருவுள்ளத்தினாலன்று; அதிற்காட்டிலும் மிகுந்த ஸ்வாரஸ்யம் பெற்று நெஞ்சையுருக்கும்படியான அர்த்தம் இது என்பதே ஸ்வாமியின் திருவுள்ளம். அடியவர்கள் துயருறுங்காலத்தில் எம்பெருமான் தானும் துயருற்றிருப்பதாக இதிஹாஸங்களிலறிகின்றோம். துயருறுவது என்பது ஹேயகுணமாயிற்றே; ஸமஸ்த கல்யாண குணாத்மகனான எம்பெருமானிடத்தில் இந்த ஹேய குணமிருப்பதாக இசையலாமோ வென்று சங்கிப்பாருடைய சங்கையைப் போக்கிக் கொண்டே வால்மீகி பகவான் ஸ்ரீராமாயணத்தில் அயோத்யா காண்டத்தில் நகரத்து ஜனங்கள் இராமபிரானுடைய திருக்குணங்களைப் புகழ்ந்து கூறுவதாக இட்ட ஸந்தர்ப்பத்தில் ***பஹலோ ந்ருப ! கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே*** என்று திருக்கல்யாண குணங்களையே தாங்கள் தசரத சக்கரவர்த்தியிடம் எடுத்துக் கூறப் போவதாக ப்ரதிஜ்ஞை செய்வதை முன்னம் காட்டிவிட்டு, மேலே ***வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:க்கித:*** என்று [மனிதர்கள் துயருறுமிடத்து இராமபிரான் தான் மிக மிகத் துயருறுவதாகச்] சொல்லி இதையொரு கல்யாண குணமாக நாட்டி வைத்தார். அடியார்கள் படுந்துயரை அறுக்கின்றான் பகவான் என்பது இருக்கட்டும்; அவ்வடியார்கள் துயர் தீரும்வரையில் தானும் துயருற்றவனாகவேயிருந்து

http://acharya.org

அவர்கள் துயரற்ற பிறகே தானும் துயரற்றவனாகுகை என்னுமிப்பொருள் பகவத்குணாநுபவரஸிகர்களுடைய நெஞ்சையுருக்குமாதலால் இச்சிறந்த பொருளை எம்பெருமானார் திருவுள்ளம்பற்றினரென்க. இத்திருக்குணத்தை வால்மீகிபகவான் ஸ்ரீராமாயணத்தில் ஓரிடத்திலன்று, பலவிடங்களிலும் மூதலிக்கிறபடி காணீர்: ***அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம், க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ*** (ஸம்க்ஷேபரா - 185.) என்ற ச்லோகத்தில் **விஜ்வர:** என்கிறபதம் உயிரானது; விபீஷணாழ்வான் துயர்தீர்ந்து முடிசூடும்வரையில் பெருமாள் தாம் துயருற்றிருந்ததாகவும் அவனை முடிசூட்டியே தாம் துயர்தீரப்பெற்றதாகவும் நன்கு விளக்குகின்றதன்றோ **விஜ்வர:** என்னுமிப்பதம். இப்படிப்பட்ட ஸாரப்பொருள்களை விவேகித்து வெளியிடுவதனால் ஸ்வாமி ஹம்ஸமென்னத்தகுந்தவர்.

2. இன்னமும், ச்சாந்தோக்ய உபநிஷத்தில் ஜாநச்ருதியின் உபாக்கியானமொன்று ஓதப்பட்டிராநின்றது. ஜாநச்ருதியென்கிற க்ஷத்ரியன் மிக்க பெருஞ்செல்வம் படைத்தவனாகையாலே அன்னதானம்முதலியவற்றை விசேஷமாகச் செய்து கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு ப்ரஹ்மஜ்ஞானமென்பது சிறிதுமில்லாமலிருந்து **பல்ல பல்லாக்ஷ** ரென்கிற இரண்டு மஹரிஷிகள் அவனிடத்திலே இரக்கங்கொண்டு இவனுக்கு ப்ரஹ்மஜ்ஞானத்தை யுண்டாக்கவேணுமென்றெண்ணி இரண்டு ஹம்ஸரூபிகளாய் அவன்மேலே பறந்துகொண்டு போகையில் **பல்ல** னென்கிற ஹம்ஸம் **பல்லாக்ஷ** னென்கிற ஹம்ஸத்தைப்பார்த்து 'ஜாநச்ருதிமஹாப்ரபுவின் மேலே நிழல் படாதபடி கவனித்துப்போ' என்று சொல்லிற்று. அதுகேட்ட அந்த ஹம்ஸம், "இவன்மேல் நிழல் பட்டாலென்ன? அதனாலென்ன கெடுதல்? இவன் ரைக்வரைப்போல் ப்ரஹ்மஜ்ஞாநியா என்ன? ஞானஹீநனானவிவனை நாம் கௌரவிக்கவேணுமோ?" என்று அவஹேளனமாகச் சொல்லிற்று. அதைக்கேட்ட ஜாநச்ருதி துக்கங்கொண்டவனாய் அந்த ரைக்வரைத் தேடிச்சென்று அநுவர்த்தித்து ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கவேணுமென்று பிரார்த்தித்து அவரிடத்தில் உபதேசம் பெற்றானென்பது அவ்வுபாக்கியானத்தின் ஸாரம். இக்கதையின்படி ப்ரஹ்மஜ்ஞான ப்ராப்திக்கு ஹம்ஸம் ப்ரேரகமானதுபோல எம்பெருமானார் தாமும் சிஷ்யர்களிடத்தில் தத்ப்ரேரகர் என்பது அறியத்தக்கது. "பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று பேசி வரம்பறுத்தார் பின்" என்று உபதேச ரத்தினமாலையிலருளிச் செய்தபடி ஸ்வாமி நியமனம் தந்தருளாவிடின் இவ்வுலகில் ப்ரஹ்மஜ்ஞானப்ரசாரத்திற்கு வழியேயில்லையாமன்றோ.

3. எம்பெருமான் வேதசாஸ்திரங்களை வெளியிடத் திருவுள்ளம்பற்றிய போது ஹம்ஸரூபத்தைப் பரிக்ரஹித்தருளினதாக சாஸ்த்ரங்களினாலறிகிறோம்; * அன்னமாய் நூல் பயந்தான் * என்றும் * அன்னமதாயிருந்து அங்கு அறநூலுரைத்த * என்றும் ஆழ்வார்களுமருளிச் செய்கிறார்கள். சாஸ்த்ரோபதேசத்திற்கு ஹம்ஸமாயிருத்தல் அவசியமானபடியாலே சாஸ்த்ரங்களை யுபதேசித்தவர்களில் தலைவரான எம்பெருமானாரை ஹம்ஸமென்றது பொருத்தமே.

4. ஹம்ஸத்தினுடைய இயல்வைச் சொல்லுமவர்கள் *** ந பந்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்தமாம்பஸி *** என்கிறார்கள்; அதாவது ஹம்ஸம் ஒருகாலும் சேற்று நீரில் கால் பொருந்ாதென்றபடி. அப்படியேயன்றோ எம்பெருமானார்படியும். திருவிருத்தத்தின் முடிவு பாசுரத்தில் "அழுந்தார் பிறப்பாம் பொல்லாவருவினை மாய வன்சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே" என்று இந்த ஸம்ஸாரநிலமே சேற்றுநிலமாகச் சொல்லப்பட்டுள்ளது; இதில் கால்பொருந்ாதவர்களில் தலைவராயிற்று ஸ்வாமி எம்பெருமானார்.

http://acharya.org

5. திவ்ய தேசங்களை வருணிக்கும்போது ஆழ்வார்கள் அன்னம் மாதர்களின் நடையைப் பின்சென்று நடப்பதாகக் கூறுகிருர்கள்; *பெடையோடன்னம் பெய்வளையார்தம் பின்சென்று நடைபோடியலி* என்று திருமங்கையாழ்வார் திருநறையூர்ப்பதிகமொன்றில் கூறியுள்ளது காண்க. ஸ்வாமிதாமும் * அன்ன நடையவணங்கான பிராட்டியினுடைய நடையைப் பின் செல்பவர். (அதாவது –) பிராட்டியின் நடையாவது நடத்தை; சேதநர்களைக்குறித்து எம்பெருமானிடத்தில் மன்ருடிப் பேறு பெறுவிப்பதே பிராட்டியினுடைய முக்கியமான நடத்தையாகும். அதை ஸ்வாமிதாமும் அநுசரிக்கையாவது – தாமும் அப்படியே எம்பெருமானிடத்தில் மன்ருடி இன்றிருக்கும் நம்போல்வார்க்கும் பேறு பெறுவித்ததேயாம். இவ்விஷயத்தை ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ந்யாஸதிலகத்தில் *உக்த்யா தநஞ்ஜய விபீஷண லக்ஷயயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநேர் பவதா விதீர்ணம், ச்ருத்வா வரம்* என்ற ச்லோகத்திலும், மணவாளமாமுனிகள் யதிராஜ விம்சதியில் * காலத்ரயேபி...... க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர! பவச்ச்ரிதாநாம் * என்ற ச்லோகத்திலும் வெளியிட்டருளினுர்கள். அவற்றின் வியாக்கியானங்களிலே விரியவுரைத்தோம், கண்டுகொள்வது, பொதுவாகவே ஆசார்யர்களின் புருஷகாரமில்லாமல் எம்பெருமான் பேறுதரமாட்டானென்பதை * நத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேச காங்க்ஷீ * (ந்யாஸதிலகே) என்ற ஸ்ரீஸூக்தியினுல் தேசிகன் கல்வெட்டாக வருளிச்செய்தார். எம்பெருமானுர்க்கு இது விசேஷ நிரூபகமென்றுணர்க. இங்ஙனே மற்றும் பலவகையான பொருத்தங்களும் உய்த்துணர்க.

இனி "ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜ ப்ருங்கராஜம்" என்று வண்டாக அருளிச் செய்ததின் பொருத்தங்களை நிரூபிப்போம்.

1. **வண்டு மதுவ்ரத** மென்று பேர்பெற்றிருக்கும். தேன்தவிர வேருென்றைக் கொள்ளாது என்றபடி. அதுபோல, * உளங்கனிந்திருக்குமடியவர் தங்களுள்ளத்துளூறிய தேன் * என்றும் * தேனை நன்பாலைக் கன்னலையமுதை * என்றும் * எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே * என்றும் பலவிடங்களிலும் தேஞகச் சொல்லப்பட்ட எம்பெருமானையே விரும்பி மற்ருென்றைக் கண்ணெடுத்தும் பாராமல் பகவதநுபவத்தையே விரதமாகக் கொண்டிருந்தவர் எம்பெருமானுர்.

2. * வண்டினங்கள் காமரங்களிசைபாடும் * என்று குலசேகராழ்வாரும், * யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும் * என்று பெரியாழ்வாரும், * வரிவண்டு தேதென வென்றிசைபாடும் * என்று திருமங்கையாழ்வாரும் இப்படி மற்றும் பலரும் பணித்தபடியே யாழினிசை போன்ற இசைகளைப் பாடுவதையே இயல்வாகவுடையதாயிருக்கும் வண்டு; ஸ்வாமிதாமும் * யாழினிசை வேதத்தியல் * பண்ணுர் பாடலாயிரம் * என்னப்பட்ட திருவாய்மொழி முதலிய திவ்ய ப்ரபந்தங்களின் கானத்தையே போதுபோக்காகவுடையராயிருந்தவர். "தமிழ் மறைகளாயிரமும் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்" என்கிற திருவாய்மொழித் தனியனும், "பண்டருமாறன் பசுந்தமிழானந்தம் பாய்மதமாய் விண்டிட வெங்களிராமாநுசமுனிவேழம்" என்ற நூற்றந்தாதிப்பாசுரமுங் காண்க.

3. வண்டு வடமொழியில் **சஞ்சரீக** மென்று பேர்பெற்றிருக்கும்; ஓரிடத்தில் தங்கியிராது; மதுவுள்ளவிடமெங்கும் பறந்து திரியுமது. அதுபோல் ஸ்வாமிதாமும் * **ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ் ச பதரீநாராயணம் நைமிசம், ஸ்ரீமத்த்வாரவதீ ப்ரயாக மதுராயோத்யா கயா: புஷ்கரம் ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி:** * என்கிறபடியே * பதியேபரவித்தொழுந்தொண்டர்களில் தலைவராயிருந்தார்.

http://acharya.org

4. வண்டு எந்த ஸமயத்தில் எங்குச் செல்லவேணுமென்று நினைத்தாலும் தட்டுத் தடங்கலின்றியே புகுந்து ரமிக்கும்; ஸன்னிதியில், கர்ப்பக்ருஹங்களினுள்ளும் எம்பெருமான் திருமுடிமீதும் தாராளமாகப் புகக் காணுநின்றோம். அதுபோல, *பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய* என்னும்படி திருவாசல்களிலே ஸேவாபரரானவர்கள் நிறைந்து தலை நுழைக்கவொண்ணாதபடி நெருக்க, *மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள்* என்னும்படி யவதரித்தருளின எம்பெருமானார் கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான எந்த திவ்யதேசங்களிலும் தடையும் சங்கையுமொன்று மின்றிக்கே அதிகாரச் செல்வத்துடனே உள்ளே புகுந்து *ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்து வாழ்ந்தவர் காண்மின்.

5. வண்டு சோலைகளிலேயே சுழலமிடும்; எம்பெருமானார்தாமும் *ஆராமஞ்சூழ்ந்தவரங்கம்* *சிந்து பூ மகிழுந்திருவேங்கடம்* *விரையார்பொழில் வேங்கடம்* என்னும்படியாகச் சோலைகள்மிக்க தலங்களிலேயே சுழலமிட்டவர். இப்படி மற்றும்பல பொருத்தங்களும் காண்க.... ... ...*

28. இராமாநுசரும் ஆண்டாளும்

நாடு நகரமும் நன்கறிய எங்கும் அநுஸந்திக்கப்பட்டு வருகின்ற ஆண்டாள் வாழித்திருநாமத்தில் ''பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே'' என்றுள்ளது. இதனால், பெரியாழ்வார் திருமகளாரான சூடிக்கொடுத்த நாச்சியார் எம்பெருமானார்க்குத் திருத்தங்கையாரென்று தெரியவருகின்றது. பெரியாழ்வாருடைய காலத்திற்கும் எம்பெருமானார் காலத்திற்கும் இடையே எவ்வளவோ காலவ்யவதாநமுள்ளதென்பதை உலகமறியும். ஆண்டாளுக்குப்பின் ஆயிரக்கணக்கான வருஷங்கள் கடந்தபிறகு அவதரித்தவரான எம்பெருமானார் அவ்வாண்டாளுக்குத் திருத்தமையனாராக எப்படியிருக்க முடியும்? என்கிற சங்கை ஸம்ப்ரதாய இதிஹாஸ விசேஷமறியாதவர்களுக்குத் தோன்றக்கூடியது. அவ்விதிஹாஸமறிந்தவர்களுக்கு இந்த சங்கை தோன்ற நியாயமில்லை. அவ்விதிஹாஸத்தை இங்குச் சுருக்கமாக வுரைகின்றோம்; — எம்பெருமானார் திருவரங்கம் பெரிய கோயிலில் உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபம் நிர்வஹித்தருளுகிற நாளிலே நாச்சியார் திருமொழி காலக்ஷேபம் நடவாநிற்க, அதில் *நாறு நறும் பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்கு நான், நூறுதடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவிவைத்தேன், நூறுதடா நிறைந்த அக்கார வடிசில் சொன்னேன், ஏறுதிருவுடையான் இன்று வந்திவை கொள்ளுங் கொலோ* [9 — 6] என்கிற பாசுரத்தின் பொருளை விவரித்தருளுகையில் ''திருமாலிருஞ் சோலையழகர்க்கு நூறு தடாநிறைந்த வெண்ணெயும் அக்காரவடிசிலும் ஸமர்ப்பிக்க ஆண்டாள் மநோரதித்துப் பாசுரம் பாடினாள்; அதை நாம் அநுஷ்டாநபர்யவஸாயியாக நிறைவேற்றி வைப்போம்'' என்று கோஷ்டியிலே யருளிச்செய்து உடனே ஸகல சிஷ்யர்களையும் கூட்டிக்கொண்டு மதுரைக் கெழுந்தருளி அங்கே ஸம்பாரங்களைச் சேகரித்துக்கொண்டு திருமாலிருஞ் சோலைக்கெழுந்தருளிப் பாசுரப்படியே நிறைவேற்றி வைத்து அழகருடைய பேரருளைப் பெற்று மகிழ்ந்து, அங்குநின்றும் ஸ்ரீ வில்லிபுத்தூரிலே ஆண்டாளையும் மங்களாசாஸனஞ் செய்துவருவதாகத் திருவுள்ளம்பற்றி அங்கேற வெழுந்தருளி ஸன்னிதிக்குள் செல்லுகையில் ஆண்டாள் ஆனந்தம் பூரித்து அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து எதிர்கொண்டு வந்து **''எம் அண்ணரோ நீர்''** என்று சோதிவாய் திறந்தருளிச் செய்து ஆரத் தழுவியருளினாள். தான் மநோரதித்து வாசிகமாகச்

http://acharya.org

சொல்லி வைத்ததை ஸ்வாமி ஸாக்ஷாத்தாக நிறைவேற்றிவைத்தபடியினால், தங்கை மநோரதித்ததைத் தமையனார் நிறைவேற்றிவைக்கிற கணக்கிலே யான தாகக்கொண்டு ஆண்டாள் இங்ஙனம் கூறியது மிகவும் பொருத்தமானது. அன்று முதலாக எம்பெருமானார்க்கு அண்ணரென்கிற ப்ரஸித்தியும் ஆண்டாளுக்குப் *பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாளென்கிற ப்ரஸித்தியுமுண்டாயிற்று.

இவ்விஷயம் ஆண்டாளுடைய அருளிச்செயலாலும் நன்கு நாட்டப்படுகின்றது. திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் பல பாசுரங்களில் ஆண்டாள் எம்பெருமானாருடைய பெருமைகளை உள்ளுறைபொருள்வகையில் ஆச்சரியமாக வெளியிட்டருளியிருக்கின்றமையை க்ரமேண நிரூபிப்போம். மேலே விவரித்த இதிஹாஸ விசேஷத்தினால் ஆண்டாள் எம்பெருமானார்க்குப் பின்னானாளாக ஆய்விட்டாலும் உண்மையில் நெடுநாளைக்கு முன்னே அவதரித்திருந்து, எம்பெருமானாருடைய விஷயமொன்றையும் அறியாதிருந்தவளான அந்த ஆண்டாளுடைய திருவாக்கில் மிகவும் பிற்பட்டவரான ஸ்வாமியினுடைய விஷயங்கள் எப்படி வரமுடியும்? இது ஸம்பாவிதமாக இல்லையே; ஏதோ அபிநிவேசத்தினால் ஏறிட்டுச் சொல்லுகிறதாக இருக்குமேயல்லது உண்மையாய் ஆண்டாள் திருவுள்ளம்பற்றிப் பேசினதாக விருக்குமோ? என்று சிலர் சங்கிக்கக்கூடும். இதற்கு இங்கு யுக்தமான பரிஹாரமளிக்கின்றோம். அறிவிலிகளான நமக்கும் அறிவிற் சிறந்த பெரியார்க்குமுள்ள நெடுவாசியை மறக்கலாகாது; இன்று நேற்று நடந்த விஷயங்களைக்கூட நாம் உள்ளபடியறிந்து உரைக்க சக்தியற்றவர்களாயிருக்கின்றோம். அஜ்ஞாநமும் அந்யதாஜ்ஞானமும் ஸம்சயமும் மறப்புமே வடிவெடுத்திருக்கிற நமக்கு இது ஸஹஜமே, அறிவிற்சிறந்த முன்னோர்களையும் நம்மைப்போலவே நினைத்துவிடலாமா? அதீந்த்ரியங்களான விஷயங்களையும் பல்லாயிரமாண்டுகளுக்குப் பிறகு நிகழப்போகும் விஷயங்களையும் கையிலங்கு நெல்லிக் கனியாகக் கண்டறிந்து கூறுமாற்றல் நிரம்பியவர்களன்றோ ஆண்டாள் போல்வார். இதனை பவபூதிமஹாகவி உத்தரராம சரித நாடகத்தில் *லௌகிகாநாம் ஹி ஸாதூநாம் அர்த்தம் வாகநுவர்த்ததே, ரிஷீணாம் புநராத்யாநாம் வாசம் அர்த்தோநுதாவதி* என்கிற ச்லோகத்தினால் தெளியவுரைத்தார். [இதன் கருத்தாவது — ஏதாவதொரு விஷயம் நடந்துவிட்டதேயானால் அப்படி நடந்ததைச் சொல்லவல்லவர்கள் லௌகிக ஸாதுக்கள்; மஹர்ஷிகல்பர்களான முன்னோர்கள் தங்கள் வாக்கினால் எது சொல்லி வைத்தாலும் அது பிற்காலத்தில் அப்படியே நடந்து தீருமென்பதாம்.] முராரி மஹாகவியும் அநர்க்கராகவ நாடகத்தில் *ஜ்ஞாநமய த்ருஷ்டிபாத ப்ரமுஷித காலத்வ விப்ரகர்ஷேஷு, விஷயேஷு நைஷ்டிகாநாம் ஸர்வபதீநா மதி: க்ரமதே* என்று சொல்லி வைத்தார். ஜ்ஞாநத்ருஷ்டிப்ரபாவ முள்ளவர்களின் புத்தியானது எந்த தேசத்திலும் எந்த காலத்திலும் நடக்கக்கூடிய எப்படிப்பட்ட விஷயங்களையும் க்ரஹிக்க வல்லது — என்பது இத்த ச்லோகத்தின் தாற்பரியம். இவற்றுக்கெல்லாம் சிகரமாக ஆளவந்தாரருளிச் செய்த ஸ்ரீ ஸூக்தி ரத்நம் — *விநயச்ச வைதிகாஸ் த்வதீய கம்பீர மநோநுஸாரிண:* என்பது இந்த ஸ்ரீஸூக்தியின் அரிய பெரிய பொருளை வியாக்கியானங்களிற் கண்டு கொள்க. ஆகவே பிற்காலத்தவையான விஷயங்கள் முன்னமே ஆண்டாளுக்கு எப்படித் தெரியும்? என்கிற சங்கைக்கு அவகாச லேசமுமில்லை யென்க.

இனி ப்ரக்ருத விஷயத்தில் செல்லுவோம்: ஆண்டாள் திருப்பாவையில் பாசுரந்தோறும் தம் அண்ணரான எம்பெருமானாருடைய பெருமைகளைப் பொழிந்திருக்கின்றமையை நாம் விரிவுக்கு அஞ்சாமல் வெளியிட்டிருக்கிறோம். இப்போது அதில் நான்காவது பாசுரமான *ஆழிமழைக்கண்ணா* என்கிற பாசுரத்தை யெடுத்துக் கொண்டு நிரூபணம் செய்கிறோம்.

http://acharya.org

இப்பாசுரம் மார்கழி நீராட்ட நோன்பு நோற்கப் புகுந்த ஆய்ச்சிகள் மழைத் தெய்வத்தை நோக்கி மழை பெய்யக் கட்டளையிடுவதாக அமைக்கப்பட்டது. இது மேலெழுந்த பொருள். ஏனென்னில்; முதற்பாட்டில் "நீராடப் போதுவீர்! போது மினோ நேரிழையீர்!" என்று அழைத்தவர்களுக்கு மெய்யாக நீராடப் போவதே உத்தேச்யமானால் இவர்களெல்லாருங்கூடி ஒரு பொய்கைக் கரைக்குச் சென்றிருக்க வேண்டுமல்லவா? அப்படி ஒரு நீர் நிலைக்குச் சென்றதாகக் காணவில்லையே; எல்லாருந் திரண்டு கண்ணபிரானுடைய ஸன்னிதானத்திற்குச் சென்று நித்ய கைங்கர்யத்தை வேண்டி அவ்வளவோடு தங்கள் நோன்பு தலைக்கட்டினதாகக் கூறி முடித்திருப்பதால் * நீராடப் போதுவீர் * என்றதும் * நாங்களும் மார்கழி நீராட உலகினில் பெய்திடாய் * என்றதும் அந்யாபதேசமாகவே சொல்லப்பட்டதாம். இவற்றின் தாற்பரியம் அதுவன்று, உள்ளுறை பொருள் வேறுதான் என்று எளிதில் நிர்ணயிக்கத்தட்டில்லை. பெரியவாச்சான்பிள்ளை முதலான பூருவாசாரியர்கள் உள்ளுறை பொருளைக் குருகுல வாஸம்பண்ணியே கேட்டுணர வேணுமென்கிற திருவுள்ளத்தினால் பெரும்பாலும் அதைத் தொடாமலே மேலெழுந்த பொருளையே இனிமைப்படுத்தி வியாக்கியானித் தருளியுள்ளார்கள். நாமும் அப்படி மறைத்து வைக்க முடியாமல், ருசியுள்ள ஆஸ்திகர்களுக்கு ருசியோடு வெளியிட ப்ராப்த மாகிறது. ஸ்ரீராமாயணம் கதைப்போக்கில் ஒருவிதமான பொருளைக் கொண்டதாயிருக்கச் செய்தேயும் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் தேசிகன் *** தர்ப்போதக்ர தசேந்த்ரியாநந......*** இத்யாதி ச்லோகத்தினால் சிறந்ததொரு தத்வார்த்தத்தை உள்ளுறை பொருளாகக் கூறியிருக்கிறாரன்றோ. அதுகொண்டு நாம் கதைப் போக்கான பொருளைத் தள்ளிவிடுவதில்லையே. கதைப்பொருளையே ப்ரகாசமாக அநுபவித்து தத்துவப்பொருளை ரஹஸ்யமாக அநுபவிக்கிறோம். அதுபோலவே இத்திருப்பாவையிலும் இரண்டுவகையான அநுபவமும் ந்யாய்யமாகும். * ஆழி மழைக்கண்ணா * என்கிற இப்பாசுரத்தினால் எம்பெருமானாரை விளித்து, தேவரீர் உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்ய ரென்கிற விருது பொலிய உபய வேதாந்தப் பொருள்களையும் ஸர்வலோகோஜ்ஜீவனமாம்படி வர்ஷிக்க வேணுமென்று பிரார்த் திப்பதோ நியமிப்பதோ செய்யப்படுகிறதென்று உணர்க. இதற்குச் சார்பான விவரணம் காணீர்; —

[**ஆழிமழைக் கண்ணா! =**] ஆழிமழைக்கு அண்ணா! என்று பிரித்துக்கொள்க. பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானவளான ஆண்டாள் தனது திருத்தமையனாரை அண்ணாவென்று விளிக்கப்ராப்தமே யன்றோ. **ஆழிமழைக்கு அண்ணா! நீ ஒன்றும் கைகர வேல்** = உலகில் மழையானது அநுகூலமாகவும் காணப்படுகிறது, பிரதிகூலமாக வும் காணப்படுகிறது. அதுபோல இரண்டுவகையான மழை வேதாந்த நூல்களி லும் சொல்லப்பட்டிருக்கின்றது. பிரதிகூலமான மழையை ஆளவந்தார் அருளிச் செய்துள்ளார்; அநுகூலமான மழையைத் திருக்கச்சிநம்பிகளும் கூரத்தாழ்வானும் கூறியுள்ளார்கள். எங்ஙனேயென்னில்; ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (49) *** அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்தததுக்கவர்ஷிணி, பகவந் பவதுர்திநே *** என்று அருளிச் செய்தது பிரதிகூலமான மழையைப்பற்றி. [அவிவேகமாகிற மப்பு மூடி இருண்டுகிடக்கிற திசைகளையுடையதும், பலவிதமாக இடைவிடாமல் பெருகு கின்ற துக்கங்களை வர்ஷித்துக் கொண்டிருப்பதுமான ஸம்ஸாரமாகிற வர்ஷா காலத்தில் தாம் சருக்கி விழுவதாகக் கூறியுள்ளார்.] இனி அநுகூலமான மழையைப் பற்றித் திருக்கச்சிநம்பிகள் தேவராஜாஷ்டகத்தில் *** தேவராஜ தயாஸிந்தோ! தேவ தேவ! ஜகத்பதே!, த்வதீக்ஷணஸுதாஸிந்து வீசி விக்ஷேபசீகரை:, காருண்ய மாருதாநீதை: சீதளைரபிஷிஞ்ச மாம் *** என்று கூறினார். இதனால் பகவத் கடாக்ஷாம்ருத வர்ஷதாரைகளைச் சொன்ன

http://acharya.org

படி. கூரத்தாழ்வானும் வரதராஜஸ்தவத்தில் * **தாபத்ரயீமயதவாநல தஹ்யமாநம்...... ஹஸ்தீச ! த்ருஷ்ட்யம்ருத வ்ருஷ்டிபிராபஜேதா:** * என்ற ச்லோகத்தினல் அந்த அனுகூல வ்ருஷ்டியையே அருளிச் செய்துள்ளார். ஆக இங்ஙனம் நிரூபிக்கப்பட்டவற்றில் பிரதிகூலமான ஸம்ஸாரதுக்க வ்ருஷ்டியைப் போக்கி அநுகூலமான பகவத்கடாக்ஷாம்ருத வ்ருஷ்டியைப் பெறுவிக்கும் விஷயத்தில் எம் அண்ணரான உடையவரே! நீர் நன்ருகக் கைகொடுக்கவேணும் என்றபடி.

ஒன்றும் கைகரவேல்=ஸம்ஸாரிகளுக்கும் கை கொடுக்கவேணும், ஸர்வேச்வரனுக்கும் கை கொடுக்கவேணும் என்றதாக ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. * **ஞானக்கைதா** * என்று ஆழ்வாரருளிச்செய்த கணக்கிலேயும் * **மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ர பாணிநா** * என்று மஹர்ஷிகள் கூறின கணக்கிலேயும் ஸம்ஸாரிகளுக்குக் கை கொடுப்பது ஸஹஜம்; ஸர்வேச்வரனுக்கு இவர் கை கொடுக்கையாவது என் ? என்னில்; இதை தேசிகன் யதிராஜஸப்ததியில் வெகு அழகாக அருளிச் செய்கிருர் காண்மின்;—(ச்லோ 38) * **குத்ருஷ்டி குஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண: கரக்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம் முநி:** * என்ருர். குத்ருஷ்டிகள் மாயக்கோலாஹலங்கள் பண்ணினவாறே அவற்றைப் பரிஹரிக்க வல்லார் ஆருமில்லாமையாலே எம்பெருமான் அத: பாதாளத்திலே விழுந்திட்டானும்; அப்படிப்பட்டவனைக் கை தூக்கிப் பிடித்தெடுத்தவராம் எம்பெருமானுர். ஆகவே, ஸம்ஸாரிகளுக்குப்போலே ஸர்வேச்வரனுக்கும் கை கொடுத்தவர் ஸ்வாமி-என்னத்தட்டில்லை.

ஆழிமழைக்கண்ணு! என்றது—மழையைக் கண்ணிலேயுடையவரே! என்றபடியுமாம். ***ஆஹ்லாத சீத நேத்ராம்பு:** *என்றும், *வண்பொன்னிப் பேராறு போல்வருங் கண்ணநீர் கொண்டு அரங்கன்கோயில் திருமுற்றம் சேறுசெய் தொண்டர்*என்றுஞ் சொல்லுகிறபடியே பகவத்குண சேஷ்டிதங்களை நினைந்து கண்ணுங் கண்ணீருமாயிருப்பவரே! என்றபடி. அன்றிக்கே, **ஆழிமழைக்கண்ணு!** என்றது மழைத்தெய்வமே! [அதாவது மேகமே!] என்றதேயாய் *குணந்திகழ் கொண்டல் இராமாநுசன்*என்ற நூற்றந்தாதிப் பாசுரப்படியே உலகமறிந்த மேகமான எம்பெருமானுரைச் சொன்னதாகவுமாம். இவ்வாண்டாளே நாச்சியார் திருமொழியில் மேகவிடுதூதாக அமைத்தருளின *விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்* என்ற பதிகத்திலே எம்பெருமானுரையே மேகமாக விளித்ததாய் மிகவும் பொருத்தமாக அடுத்தபடி நிரூபிக்கப் போகிருேமாதலால் இங்கு **மேகமே!** என்றழைப்பதாக வைத்து உரை செய்வதிலும் குறையில்லை. எனினும் "ஆழிமழைக்கு அண்ணு!" என்று பிரித்து அண்ணராக உரைப்பதே இந்த வியாஸத்திற்கு உயிர்நிலையாகும்.

அண்ணு! நீ ஒன்றும் கைகரவேல்=உமக்கு முற்பட்ட ஆளவந்தார் முதலான ஆசாரியர்கள் பலரும் * ஓராண்வழியாய் உபதேசித்தார் முன்னேர் * என்கிறபடியே தங்களுடைய ஔதார்யத்தை மறைத்துப்போந்தார்கள்; நீர் அப்படி மறைத்திடாமல் * ஏராரெதிராசரின்னருளால் பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் ! கூறு மென்று பேசி வரம்பறுத்தார் பின் *என்னும்படியாக உம்முடைய ஔதார்யத்தை நாடுநகரமும் நன்கறிய விளங்கச்செய்யக்கடவீர்.

ஆழியுள் புக்கு முகந்து கொடு=ஆழியாவது ஸமுத்ரம். * **நிர்மத்ய ச்ருதிஸாகராத்** * என்னப்பட்ட வடமொழி வேதக்கடலென்ன, * **நமாம்யஹம் த்ராவிட வேத ஸாகரம்** * என்னப்பட்ட தமிழ்வேதக்கடலென்ன-ஆகிய உபய வேதக் கடலினுள்ளும் அவகாஹித்து அவற்றிலுள்ள அர்த்த விசேஷங்களைக் கொள்ளைகொண்டு என்றபடி. "ஆழியில் புக்கு" என்னுமல் "ஆழி உள் புக்கு" என்கையாலே ஸ்வாமி யெம்பெருமானுர் சாஸ்த்ரக் கடல்களில் மேலெழுந்த நோக்கின்றிக்கே மிகவும் ஆழ்ந்த

http://acharya.org

நோக்குடையவராய், கடலினுள்ளே புகுந்து மணி மா ணிக் க ங் க ளை க் கொண்டு வருவாரைப் போலே சீரிய பொருள்களைக் கொணர்ந்து வர்ஷித்தவரென்பது விளங்கும். ஸ்ரீ பாஷ்யத்தின் முகப்பில் ''பாராசர்ய வசஸ்ஸுதாம் **உபநிஷத் துக்தாப்தி மத்யோத்த்ருதாம்–ஸம்ஸார பிபந்து அந்வஹம்**'' என்று ஸ்வாமி தாமே யருளிச் செய்திருக்கையாலே ''ஆழியுள்புக்கு'' என்பதற்கு இங்கு விவரிக்கப்பட்ட பொருள் அவர் தம்முடைய திருவுள்ளத்திலு முறைந்ததே யென்று கொள்ளத்தகும்.

ஆர்த்து — கர்ஜித்து என்றபடி. ஸிம்ஹம் கர்ஜிக்குமாபோலே கர்ஜித்துக் கொண்டன்றோ ஸ்வாமி தாம் அர்த்தங்களை வர்ஷித்தது. **ஏறி** = * பஜதி யதிபதௌ பத்ரவேதீம் த்ரிவேதீம் * என்று யதிராஜஸப்ததியில் பணித்தபடியே சீரிய சிங்காசனத்தின்மீதேறி என்றபடி. அன்றியே, திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே நிதியாகப்பெற்ற அர்த்த விசேஷங்களை அவ்வூரிலே கோவிலில் மேல்தளத்திலே **ஏறி** வர்ஷித்தாரே; அதுதன்னை ஸூசிப்பிக்கின்றது என்னலாம்.

ஊழி முதல்வனுருவம்போல் மெய் கறுத்து = இதனால் ஸ்வாமியினுடைய அவதார ரஹஸ்யம் ஸூசிப்பிக்கப்படுகிறது. ஸ்வாமி தாம் திருவனந்தாழ்வானுடைய திருவவதாரமாகையாலே * துக்தோதந்வத் தவளமதுரம் சுத்த ஸத்வைகரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம் * என்கிறபடியே பாலன்ன திருமேனியையுடையராயிருப்பர். அப்படியிருக்கச்செய்தேயும் * தேவபிரானுடைக் கரிய கோலத் தி ரு வு ரு வை த் தம்முள்ளேயடக்கியிருக்கையாலே அந்த நீல மேனியின் நிழலீட்டாலே ஸ்வாமி திருமேனியும் * முடிவில்லதோரெழில் நீலமேனியாகவே அடியார்களுக்கு ஸேவைஸாதிக்கவேணுமென்று சொல்லுகிறது. பட்டர் ஸ்ரீரங்க விமானத்தை வருணிக்கும்போது ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (45) அபி பணிபதி பாவாத் சுப்ரம் அந்தச் சயாலோர் மரதக ஸுகுமாரை: ரங்கபர்த்துர் மயூகை:, ஸகலஜலதி பாநச்யாம ஜீமூதஜைத்ரம் புலகயதி விமாநம் பாவநம் லோசநே ந:* என்றருளிச் செய்தார். இந்த ச்லோகத்தின் கருத்தாவது — திருவனந்தாழ்வானே ஸ்ரீரங்க விமானமாக வடிவெடுத்திருப்பதனால் அத்திருவனந்தாழ்வானுடைய நிறம் வெளுத்ததாகையினாலே இவ்விமானம் வெண்ணிறமுடையதேயாயினும் உள்ளே திருக்கண் வளர்ந்தருளா நின்ற காளமேகத்திருவுருவரான பெரிய பெருமாளுடைய திருமேனியின் நிழலீட்டாலே கறுத்துத் தோன்றுகின்றது என்கை. போஜசம்பூ என்கிற சம்பூ ராமாயணத்தில் (பாலகாண்டம் — 23) * க்ஷீராம்போதேர் ஜடரமபிதோ தேஹபாஸாம் ப்ரரோஹை: காலோந் மீலத் குவலயதளாத்வைத மாபாதயந்தம் * என்று கூறியுள்ளதும் இவ்விடத்திற்கு மிகப்பொருத்தமாக நினைக்கத் தக்கது. ஆக, எம் அண்ணரே! நீர் பால்போன்ற திருமேனியோடு பிறந்திருந்தாலும் * முந்நீர் ஞாலம் படைத்த எம்முகில்வண்ணனை ஊழிமுதல்வனது திருவுருவை உள்ளேயடக்கிக்கொண்டு தத்ஸாதர்மியத்தைப் பெற்றிருப்பீர் என்றதாயிற்று.

பாழியந்தோளுடைப் பற்பநாபன் கையிலாழிபோல்மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து= இதனாலும் அவதாரரஹஸ்யமே ஸூசிதமாகிறது. இராமாநுச நூற்றந்தாதியில் (33) * அடையார்கமலத்தலர்மகள் கேழ்வன் கையாழி யென்னும் படையோடு * என்கிற பாசுரத்தினாலும், யதிராஜஸப்ததியில் * ப்ரதயந் விமதேஷு தீக்ஷ்ண பாவம் * என்ற ச்லோகத்தில் * வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே: * என்றதனாலும் ஸ்வாமி பஞ்சாயுதாழ்வார்களின் திருவவதாரபூதர் என்பதும் பேசப்பட்டிருக்கையாலே அவ்விஷயமும் இங்குத் தெரிவிக்கப்பட்டதாகிறது, மேலே காட்டிய நூற்றந்தாதிப் பாசுரத்தில் ''கையாழி யென்னும் படையோடு'' என்று திரு

http://acharya.org

வொழியை முன்னே சொல்லி "புடையார்புரிசங்கமும்" என்று திருச்சங்கை முடிவிலே சொல்லியிருக்கிறபடிக்குச் சேர இங்கும் ப்ரத்யாஹாரந்யாயத்தாலே "கையிலாழிபோல் — வலம்புரிபோல்" என்று அருளிச் செய்யப்பட்டதென்று கொள்க.

இதற்கு மற்றொருபடியாகவும் கருத்துரைக்கலாம்; திருவாழியாழ்வான் விரோதிகளுள்ளவிடமெங்குஞ் சென்று வியாபரித்து * **காசீவிப்லோஷ** * (ஸுதர்சநசதகம்) என்பது முதலான ச்லோகங்களிலும், * கீழுலகிலசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே ஆழிவிடுத்து அவருடைய கருவழித்தவழிப்பன் * என்பது முதலான பாசுரங்களிலும் சொல்லுகிறபடியே விரோதி நிரஸநங்களைப் பண்ணிவருவதுபோல ஸ்வாமிதாமும் பாஷண்டசார்வாக ஜைந பௌத்தமாயாவாதி ப்ரப்ருதிகளான பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளுமுள்ள விடங்களிலெங்கு மெழுந்தருளிக் கொடிய தர்க்கசரம்விட்டு வென்று வந்தபடியைச் சொல்லுகின்றதாக. * அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும் இருளார்வினை கெடச் செங்கோல் நடாவுதிர் * (திருவிருத்தம்) என்கிறபடியே திருவாழியாழ்வான் உபய விபூதி நிர்வாஹகனாயிருப்பதுபோல ஸ்வாமிதாமும் "உபய விபூதியையும் தம் கையிலேயுடையவர்" என்பதே பொருளாக '**உடையவர்**' என்று திருநாமம் பெற்றிருக்கும் பரிசும் இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

வலம்புரிபோல் நின்று அதிர்ந்து = பாரதப் போர்த் தொடக்கத்தில் * படை போர் புக்கு முழங்குமப் பாஞ்சசன்னியம் * என்றபடியே சங்கு முழங்க, அவ்வொலி கேட்ட எதிரிகள் யாவரும் * **ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்** * என்கிறபடியே குடல் குழுறிச் செத்ததுபோல ஸ்வாமியின் திருமிடற்றோசை கேட்டவாறே * தற்கச்சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன் சொல்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனராதலால் இப்பெருமையைத் தெரிவிக்கின்றதென்க அன்றியும் * உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம், கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத்தலத்தே * என்று இவ்வாண்டாள் தாமே அருளிச்செய்தபடியே எம்பெருமானுடைய திருக்கைத்தலத்தை ஒரு நொடிப்பொழுதும் விட்டு அகலாதேயிருந்து அமுத முண்டுகளிக்கும் சங்குபோலே * த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா யாவச் சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ * என்று திருவரங்கர் செல்வனாருடைய திருவருள் பெற்று அப்பெருமான் பரிஸரத்திலேயே இணைபிரியாதிருந்து தூயவமுதைப் பருகிப் பருகி மகிழ்ந்தவர் நம் ஸ்வாமி - என்பதுமிங்குத் தெரிவிக்கப்பட்டதாகும்.

தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல் பெய்திடாய், வாழப் பெய்திடாய் = என்று இரண்டு வாக்யார்த்தமாகக் கொள்ளவேணும். பெய்யும் மழையினாலே நன்மையும் விளைவதுண்டு. தீமையும் விளைவதுண்டு. சிலர்க்கு நன்மையாகும், சிலர்க்குத் தீமையாகும். * **த்வயி வர்ஷதி பர்ஜந்ய ஸர்வே பல்லவிதா த்ருமா:, அஸ்மாகமர்க்க வ்ருக்ஷாணாம் பூர்வ பத்ரேஷு ஸம்சய:** * என்பது ப்ரஸித்தமான ஸுபாஷிதம். * நீர்காலத்து எருக்கிலம்பழவிலை போல் வீழ்வேனை * என்று ஆண்டாள் தானுமருளிச் செய்தாள். அதுபோல ஸ்வாமியின் திவ்ய ஸ்ரீஸூக்தி வர்ஷங்களாலே வாழ்ந்துபோவாருமுண்டு. மாய்ந்து போவாருமுண்டு. * நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது, தென் குருகைவள்ளல் வாட்டமிலாவண்டமிழ் மறைவாழ்ந்தது * என்று அமுதனார் பணித்தபடியே உபயவேதங்களும் தத்ப்ரவீணர்களும் வாழ்ந்து போக, * நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன * என்கிறபடியே புலையறமாகிநின்ற புத்தொடு

சமணமெல்லாம் பாறியொழிந்தனவன்றே. சார்ங்கமுதைத்தசரமழையானது அஸுர ராக்ஷஸர்களை அடியறுத்தொழித்ததுபோல * அரக்கரசுரர் போல்வாரான பாஹ்ய குத்ருஷ்டிகளை ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்திவர்ஷம் மாய்த்தொழித்தது. * **நம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம்*** என்றவுடனே * **மஹர்ஷீணும் ஸுகாவஹம்** * என்றாற்போல விரோதிகள் ஒழிந்தால் நல்லார்கள் வாழப்ராப்தமாகையாலே இங்கும் அவ்விரண்டும் தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீபாஷ்ய ப்ரவசநமுகத்தாலே விரோதி நிரஸனமும் பகவத் விஷய ப்ரவசநமுகத்தாலே ஆச்ரித ஸமுஜ்ஜீவநமும் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தமை தெரிவிக்கப்பட்டதாயிற்று.

[**சார்ங்கமுதைத்த சரமழை**] சரமழையானது சார்ங்கவில்லில் நின்றும் தோன்றுவது இயல்பு. ப்ரக்ருதத்தில் முன்னே யெடுத்துக் காட்டிய * அடையார் கமலப் பாசுரப்படியே ஸ்வாமிதாமே சார்ங்க வில்லாகக் கூறப்பட்டாரென்றுணர்க. அந்த நூற்றந்தாதிப் பாசுரத்தில் * **ஒண்சார்ங்கவில்லும்** * என்கிற சொல்லால் ஸ்வாமியே சார்ங்க வில்லாகச் சொல்லப்பட்டிருக்கின்றமை யறியத்தக்கது. அன்றிக்கே, * தன் கைச் சார்ங்கமதுவேபோல் புருவவட்டமழகிய * என்று ஆண்டாள்தாமே அருளிச் செய்திருக்கையாலே சார்ங்கமென்றது புருவமென்றபடி. புருவமுதைத்த சரமழையாவது — ஸ்வாமிதாம் ஆழ்வானுண்டான் போல்வாரை நோக்கிப் புருவம் நெறித்துவிட்டால் உடனே அவர்கள் சரமழைபோன்ற வாதங்களைச் செய்து நிற்பர்களே, அதைச் சொன்னபடியாகவுமாம்.

உலகினில் வாழப் பெய்திடாய் = * உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே * என்பது தமிழர்வழக்காதலால், உயர்ந்த அதிகாரிகளை வாழச் செய்தருள வேணுமென்றபடி. [**தாழாதே பெய்திடாய்**] ஏககாலத்திலே ஆயிரக்கணக்கான துர்வாதிகள் மிடைந்தாலும் பின் வாங்குகிறவரல்லரே ஸ்வாமிதாம். * கொண்டலனையவண்மை யேராரி குணத் தெம்மிராமானுசன் அவ்வெழில்மறையில் சேராதவரைச் சிதைப்பது அப்போதொரு சிந்தை செய்தே * என்கிற நூற்றந்தாதிப் பாசுரமும் இங்கே அநுஸந்திக்கத்தகும்.

நாங்களும் மகிழ்ந்து மார்கழிநீராட = திருப்பாவையில் மார்கழி நீராட்டமென்று கூறுவதற்கு உள்ளுறை பொருள் இது கேளீர்; வடமொழியிலுள்ள **மார்க்கசீர்ஷம்** என்கிற சொல்லே தமிழில் **மார்கழி**யென விகாரப்பட்டது. ம்ருகசீர்ஷ நக்ஷத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிவரும் மாஸம் மார்க்கசீர்ஷமெனப்படும். இது உலகமறிந்த வெளிப்படையான அர்த்தம். அந்தரங்கமான அர்த்தம் எதுவென்னில்; **மார்க்க — சீர்ஷம்** என்று பிரிப்பதிலே நோக்கு. மார்க்கம் — வழி; அதாவது உபாயமென்றபடி. சீர்ஷமாவது தலை. உபாயங்களில் தலையானது எதுவோ அதுவே மார்க்க சீர்ஷமென்றதாயிற்று. ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்தில் * **ஆசார்யாபிமாநமே உபாயங்களில் தலையாகச்** சொல்லப்பட்டிருத்தலால் அதுவே மார்க்கசீர்ஷமாகி, அச்சொல்லின் சிதைவாய் மார்கழியெனப்பட்டது. **மார்க்கசீர்ஷாவகாஹநமே மார்கழிநீராட்டம்.** ஆசார்யாபிமாநமென்கிற சிறந்த உபாயத்தை நாங்கள் கடைப்பிடித்து மகிழ்ந்து வாழும்படியாக எம் அண்ணரே! அருள்செய்யவேணும் என்றதாயிற்று.

ஆண்டாள் அடுத்த பிரபந்தமாகிய நாச்சியார் திருமொழியில் * கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய்யன்றே * என்ற பாசுரத்திலும், * நல்லவென் தோழி! நாகணைமிசை நம்பரர், செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென்? வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை, வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே * என்ற பாசுரத்திலும் உபாயங்களில் தலையான வுபாயமாகிய ஆசார்யாபிமானத்

திலேயே தனக்கு நிஷ்டையுள்ளதென்பதை ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கையாலே * **நாங்களும் மார்கழிநீராட** * என்றதற்கும் * மார்கழித் திங்கள் நீராடப் போதுவீர் ! * என்றதற்கும் இதுவே உள்ளுறை பொருளாகும். மேலே யெடுத்துக் காட்டிய ஆண்டாள் பாசுரங்களில் முந்திய பாசுரத்தில் * நானும் பிறந்தமை பொய்யன்றே * என்றதன் உட்கருத்தைப் பெரியார் பக்கல் பணிந்து கேட்டறிவது.... ஆண்டாள் தனக்குண்டான ஆசார்ய ஸம்பந்தம் பழுதுபடாதென்பது பரமார்த்தம்.*

29. இராமாநுசரும் யதிராஜ ஸப்ததியும்

ஸ்ரீமந்நிகமாந்த மஹாகுரு பணித்த யதிராஜ ஸப்ததியில் முதல் ஒன்பது ச்லோகங்கள் குருபரம்பராநுபவத்தில் சென்றன. 1. பெரிய பெருமாள் 2. பெரிய பிராட்டியார், 3. ஸேனை முதலியார், 4. நம்மாழ்வார், 5. ஸ்ரீமந்நாதமுனிகள், 6. உய்யக்கொண்டார், 7. மணக்கால் நம்பி, 8. ஆளவந்தார், 9. பெரியநம்பி—ஆக, இப்படி குருபரம்பராநுபவம் செய்து தலைக்கட்டிய பின் * **ப்ரணமம் லக்ஷ்மணமுநி:** * என்கிற ச்லோகம் முதலாக எம்பெருமானாருடைய குணாநுபவத்திலே இறங்கியுள்ளார். மேற்குறித்த ஆரம்ப ச்லோகத்தில் **லக்ஷ்மணமுநி:** என்று ஸ்வாமியின் திருநாமத்தை வ்யபதேசித்தபடியினால், ஸ்வாமிக்கு அமைந்த **ராமாநுசர்** என்னும் திருநாமம், தசரதாத்மஜனான ஸ்ரீராமனுடைய தம்பியாகிய இளையபெருமாளைக் குறிக்கொண்டதாமென்று விளக்கப்பட்டதாயிற்று. ராமாநுஜனென்கிற திருநாமம். ‘செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா !’ என்னப்பட்ட நம்பிமூத்தபிரானென்னும் பலராமனுடைய தம்பியான கண்ணனையும் சொல்லக்கடவதென்பது முகுந்தமாலையில் * **ஹேராமாநுஜ ஹே ஜகத்த்ரயகுரோ ஹேபுண்டரீகாக்ஷ** * என்கிற ஸுப்ரஸித்தமான ச்லோகத்தினால் அனைவருமறிந்ததேயாம். ஆகவே ஸ்வாமிக்கு அமைந்த ராமாநுஜரென்னுந் திருநாமம் கண்ணபிரானைக் குறிக்கொண்டதாகவும் கொள்வதற்கு இடமிருப்பதால், கண்ணபிரானுக்கும் ஸ்ரீ ராமாநுஜர்க்குமுள்ள ஒற்றுமையை முன்னம் ஒரு வ்யாஸத்தில் நாம் பதினாறு வகையாக விவரித்து நிரூபித்திருக்கின்றோம். அது, சரித்ரப்போக்கில் உள்ளுறை பொருள்வகை யென்கிற ஸ்வாபதேசார்த்த முறையில் நிரூபிக்கப்பட்ட ஸாம்யம். வேதாந்த தேசிகன் யதிராஜ ஸப்ததியில் சப்த ச்லேஷ வகையினால் நிரூபித்தருளின ஸாம்யம் ஈண்டு விவரிக்கப்படுகிறது. அந்த ச்லோகம் வருமாறு : —

“சமிதோதய சங்கராதி கர்வ: ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச:,
அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:”

இந்த ச்லோகத்தில் மூன்று வகைகளினால் கண்ணபிரானுக்கும் எம்பெருமானார்க்கும் ஸாம்யம், வடமொழி வல்லுநர்க்கு மிகவும் ரஸிக்கக்கூடிய ச்லேஷாலங்கார மர்யாதையினால் [சிலேடை யணியில்] அருளிச்செய்யப்பட்டுள்ளது. பல பொருள்படச் சொல்லுவது **ச்லேஷம்** [சிலேடை] எனப்படும். அது அபங்க ச்லேஷமென்றும் ஸபங்க ச்லேஷமென்றும் இருவகைப்படும். பதங்களை யொடித்துப் பொருள்கொள்ள வேண்டாமல் நாநார்த்த பதங்களையிட்டுப் பல பொருள்களைப் பெறுவிப்பதானது அபங்க ச்லேஷமெனப்படும். அப்படியல்லாமல், பதங்களை யொடித்துப் பல பொருள்கொள்ளுமாறு ப்ரயோகம் செய்வதானது ஸபங்க ச்லேஷமெனப்படும். இப்போது நாமெடுத்துக்கொண்ட * **சமிதோதய** * என்னும் யதிராஜ ஸப்ததி ச்லோக ரத்நத்தில் முதலிரண்டு பாதங்களில் அபங்க ச்லேஷம்; மூன்றுவது பாதத்தில் மாத்ரம் ஸபங்க ச்லேஷம்.

http://acharya.org

இனி, ச்லோகத்தின் கருத்து விவரிக்கப்படுகிறது. [1. **சமிதோதய சங்கராதி கர்வ:**] இது கண்ணனுக்கும் உடையவர்க்கும் பொதுவான விசேஷணம். ‘சங்கரன் முதலானோருடைய செருக்கை யடக்கினவர்’ என்பது இதன் பொருள். கண்ணபிரான்பரமாகப் பொருள்கொள்ளும்போது சங்கரன் என்பதற்குச் சிவபிரானென்று அர்த்தம். ஆதிபதத்தினால் அப்பிரானைச் சேர்ந்த கார்த்திகையான் கரிமுகத்தான் முதலானோரை [ஸுப்ரஹ்மண்ய விநாயகாதிகளைக்] கொள்வது. கண்ணபிரான் பாணாஸுர யுத்தத்தில் சங்கரன் முதலானோருடைய செருக்கை யடக்கினது இதிஹாஸ புராண ப்ரஸித்தம். உடையவர் * சங்கர பாக்கர யாதவபாட்ட ப்ரபாகரர் தங்கள் மதஞ் சாய்வுற * என்றும் * **கா சங்கா சங்கராதே:** * என்றும் சொல்லுகிறபடியே, ஆதிசங்கரகுரு ப்ரப்ருதிகளான புறமதத்தவர்களின் செருக்கைப் போக்கினவர் என்பது சரித்ர ப்ரஸித்தம். ஆகவே இந்த விசேஷணம் கண்ணனுக்கும் உடையவர்க்கும் ஸாம்யத்தை நிரூபித்ததாயிற்று.

கண்ணபிரான் சங்கராதிகளின் செருக்கையடக்கின வரலாறு இங்குச் சுருங்க எழுதப்படுகின்றது. பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்த பாணாஸுரனென்பான் ஒருகால் நடராஜனான சிவபெருமானுடைய நடனத்திற்குப் பொருத்தமாகத் தாளம் போட்டனன்; அதனால் மிக்க மகிழ்ச்சிகொண்ட சிவபெருமான் அந்த ஸந்தோஷாதிசயத்தினால் அந்தப் பாணாஸுரனுக்கு ஆயிரங் கைகளை வரப்ரஸாதமாகத் தந்து, தானும் தன் பரிவாரங்களும் அவனது பட்டணத்தைக் காவல் செய்துகொண்டிருக்கும்படியான அநுக்ரஹமும் செய்தருளினன். அந்தப் பாணாஸுரனுக்கு உஷையென்று ஒரு மகள் இருந்தாள். அவள் ஒரு நாள் ஒரு பரமஸுந்தரனான புருஷனோடு தான் கூடியிருந்ததாகக் கனாக்கண்டு, தன் உயிர்த் தோழியான சித்ரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்தாள். அவள் உலகிலுள்ள பல ஸுந்தர புருஷர்களின் வடிவங்களைச் சித்ரத்தில் எழுதிக்காட்ட, க்ருஷ்ணனுடைய பௌத்ரனும் ப்ரத்யும்நனது புத்ரனுமாகிய அநிருத்தனே தன்னோடு கூடியிருந்தனனாக உஷை சுட்டிக்காட்டி, அவனைப் பெறுவதற்கு உபாயஞ் செய்ய வேண்டுமென்று அத்தோழியை வேண்டினாள். அவள் தன் யோகவித்யை மஹிமையினால் த்வாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டு வந்து அந்தப் புரத்திலேவிட, உஷை அவனோடு போகங்களை யநுபவித்து வந்தாள். இச்செய்தியைக் காவலாளராலறிந்த அந்தப் பாணன் தன் சேனையுடன் அநிருத்தனையெதிர்த்து மாயையினால் பொருது நாகாஸ்த்ரத்தினால் கட்டிப் போட்டிருந்தான். த்வாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்தபோது, நாரத முனிவனால் செய்தியுணரப்பெற்ற ஸ்ரீ க்ருஷ்ண பகவான், கருடாரூடனாய்ப் பலராமன் முதலானோரோடுங்கூட பாணபுரமாகிய சோணிதபுரத்திற் கெழுந்தருளும்போதே, அங்கு அருகில் காவல் காத்துக்கொண்டிருந்த சிவபிரானது ப்ரமத கணங்கள் எதிர்த்துவர, அவர்களை யெல்லாமழித்து, பின்பு சிவபெருமானா லேவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும் பொருட்டுப் போர்புரிய, அதனையும் துரத்தி பாணாஸுரனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்த சிவபிரானது அநுசரர்களான அக்நிதேவர்கள் ஐவரையும் நாசஞ் செய்து, பாணாஸுரனோடு போர் செய்யத் தொடங்குகையில், அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரஹ்மண்யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போராட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்த்ரத்தை ப்ரயோகித்துச் சிவன் ஒன்றுஞ் செய்ய மாட்டாமல் கொட்டாவி விட்டுக்கொண்டு சோர்வடைந்து போம்படி செய்து, ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் ஹுங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர்

http://acharya.org

சக்ராயுதத்தை யெடுத்து ப்ரயோகித்து அப்பாணனது ஆயிரந் தோள்களையும் தாரைதாரையாய் உதிர மொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாக விருக்கையில், பரமசிவன் அருகில் வந்து வணங்கி பலவாறு ப்ரார்த்தித்ததனால் சிவ பஜனஞ் செய்தார்க்குப் பலன் கைமேல் கண்டதாக இருக்கட்டு மென்றெண்ணிய கண்ணபிரான் நான்கு கைகளோடும் உயிரோடும் அவனை விட்டருளினன் என்பதாம். எம்பெருமானார் சங்கராதி கர்வசமநம் பண்ணினது, ஸ்ரீபாஷ்யாதி க்ரந்த ரசனையினாலும், அத்வைதி ப்ரப்ருதிகளை வாதப்போரில் வென்று ஆட்படுத்திக் கொண்டதனாலும் என்றுணர்க. இவ்விஷயம் மேலே மூன்றாவது பாதத்தின் விவரணத்தினாலும் விளங்கும். **[2. ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச:]** கண்ணபிரான் பரமான அர்த்தத்தில், யாதவர்களின் ப்ரகாசம் யயாதி சாபத்தினால் மங்கிக் கிடக்கையில், **''கோபாலோ யாதவம் வம்சம் மக்நமப்யுத்தரிஷ்யதி''** என்கிறபடியே அந்த ப்ரகாசத்தைத் தனது வலிமையினால் புநருத்தாரம செய்தவன் என்று கொள்ளக்கடவது. யதுகுலத்திலே பிறந்து யாதவர்களை விளக்கமுறச் செய்தருளினவன் கண்ணபிரான் என்க. உடையவர்பரமான அர்த்தத்தில், 'யாதவப்ரகாச' என்று முழுச்சொல்லாகக்கொண்டு, அப்பெயர்பூண்ட மாயாவாதி குருவைத் தம்முடைய க்ருபாபலத்தினால் உத்தரிப்பித்தவர் என்று கொள்க. முதலில் தமக்கு உபாத்யாயராயிருந்த யாதவப்ரகாசரையும் தமக்கு அடிமைப்படுத்திக்கொள்ளும் படியான ப்ரபாவமுடையவர் எம்பெருமானார் என்க இவ்வரலாறு உடையவர் சரிதையில் விரிவாகக் காணத்தக்கது. **[3. அவரோபிதவாந் ச்ருதே: அபார்த்தாந்]** 'அபார்த்தாந் ச்ருதே: அவரோபிதவாந்' என்று அந்வயம். இதில் ஸபங்க ச்லேஷமுள்ளது. **அபார்த்தாந்** என்னும் பதம், (அ + பார்த்தாந்) என்றும் (அப + அர்த்தாந்) என்றும் பிரியும், பார்த்த னென்று அர்ஜுநனைச் சொல்லி, பார்த்த னல்லாத [அர்ஜுந விரோதிகளான] துர்யோதநாதிகளை அபார்த்தர்களென்று சொல்லுவதாகக் கண்ணன்பரமான அர்த்தத்தில் கொள்ளவேண்டும். **ச்ருதி** யென்று கீர்த்திக்கும் பெயர்; வேதத்திற்கும் பெயர். கண்ணபிரான் அபார்த்தர்களான துர்யோதநாதிகளைக் கீர்த்தியிலிருந்து கீழேயிறக்கிவிட்டான்; பாண்டவ பக்ஷபாதியாயிருந்து * மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியச்செய்து அவர்களைக் கீர்த்தியிழந்தவர்களாகச் செய்தானென்றபடி. ஸ்வாமி ராமாநுஜரோ வென்னில்; **[ச்ருதே: அபார்த்தாந் அவரோபிதவாந்]** இதர மதஸ்தர்கள் வேதங்களுக்குச் செய்த அபார்த்தங்களை ஸமீசீநார்த்த ப்ரதர்சநத்தினால் நிரஸித்தருளினவர். ஆனதுபற்றியே * **சமிதோதய சங்கராதி கர்வ**ராக முதல் பாதத்தில் கூறப்பட்டாரென்று உணர்க.

இனி, ச்ருதியின் அபார்த்தங்களை எம்பெருமானார் நிரஸித்தருளின விதம் விவரிக்கப்படுகிறது :— **''அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்''** என்கிற மூன்றாவது பாதத்தினால் ஸ்ரீராமாநுஜர் வேதத்திற்குப் பிறர் கூறின அபார்த்தங்களைத் தள்ளி உண்மைப் பொருள்களை யுரைத்தருளினதாகத் தெரிவிக்கப்படுகிறது. 'எந்த ச்ருதி வாக்யத்திற்கு எவ்விதமாகப் பிறர் ஏலாத பொருளைக் கூறினர்? அங்கு எம்பெருமானார் எவ்விதமான அர்த்தங் கூறி யருளினர்?' என்பதைத் தெரிவிக்க, ஈண்டு ஒரு விஷயத்தை யெடுத்துக்கொண்டு விவரிக்கின்றோம் :—

உபநிஷத்துக்களில் சில வாக்யங்களில் ஒரு தத்வமே உள்ளதாகவும் பல தத்வங்கள் இல்லை யென்பதாகவும் பேசப்பட்டுள்ளது. * **நேஹ நாநாஸ்தி கிஞ்சந** * என்பது ஒரு ச்ருதி வாக்யம். **'ந இஹ நாநா அஸ்தி கிஞ்சந'** என்று பதம் பிரியும். **இஹ நாநா கிஞ்சந நாஸ்தி** — இவ்வுலகில் பலவென்று சொல்லக்கூடியது எதுவுமில்லை என்பது இந்த ச்ருதி வாக்யத்தின் பொருள். **''ஏகமேவ அத்விதீயம்''** என்கிற மற்றொரு

http://acharya.org

ச்ருதி வாக்யமும் மேற்கூறிய பொருளை (அதாவது: பல தத்வங்கள் கிடையா; ஒரே தத்வந்தானுள்ளது என்னும் பொருளை)த் திடப்படுத்தியுள்ளது. இப்படிப் பல வாக்யங்கள் உபநிஷத்துக்களில் உள்ளனவென்று வைத்துக்கொள்வோம்.

அந்த உபநிஷத்துக்களிலேயே மற்றுஞ் சிலவிடங்களில் பல **தத்வங்கள் உள்ளன** வென்று காட்டுகின்ற வாக்யங்களையும் காணுநின்றோம்; அப்படிப்பட்ட வாக்யங்களில் சிலவற்றை ஈண்டெடுத்துக் காட்டுவோம்: —

(1) * **க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநௌ ஈசதே தேவ ஏக:** * இது ஒரு ச்ருதி வாக்யம். இதனால் அசேதநப் பொருளும் சேதநப் பொருளும் இவ்விரண்டுக்கும் இறைவனை ஒரு பகவானும் ஆக மூன்று தத்வங்களுள்ளனவாகச் சொல்லப்படுகிறது. (2) * **ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜா வீச நீசௌ** * – இதுவும் ஒரு ச்ருதி வாக்யம். இதனாலும் ஒரே தத்வமல்ல, வெவ்வேறுபட்ட தத்வங்களுண்டென்பது காட்டப்படுகிறது. (3) * **த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே, தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது அத்தி அநச்நந்நந்யோ அபிசாகசீதி.** * - இதுவும் அப்படிப்பட்ட மற்றொரு ச்ருதி வாக்யம். இரண்டு பக்ஷிகள் ஒன்றோடொன்று இணங்கிக்கொண்டு ஒரு வ்ருக்ஷத்தில் (அசேதநமான சரீரத்தில்) அணைந்துகிடக்கின்றன வென்றும், அவ்விரண்டு பறவைகளுள் ஒரு பறவையானது (ஜீவாத்மா) புண்ய பாபரூப கர்ம பலன்களை இனிதாக உண்டு களிக்கின்றதென்றும், மற்றொரு பறவையானது (பரமாத்மா) ஒன்றும் உண்ணுமல் மிக விளங்குகின்றதென்றும் இந்த ச்ருதி வாக்யத்தினால் கூறப்படுகின்றது. இதனால் சேதந – அசேதந ஈச்வரர்களாகிற மூன்று தத்வங்களுள்ளனவென்பது தெளிவாக விளங்கிற்று. இப்படிப்பட்ட ச்ருதி வாக்யங்களும் உபநிஷத்துக்களில் பலவுள்ளனவென்று வைத்துக்கொள்வோம்.

பல தத்வங்கள் கிடையா; ஒரே தத்வந்தானுள்ளதென்று கூறுவதாக முதலில் எடுத்துக் காட்டப்பட்ட ச்ருதி வாக்யங்களானவை **அபேத ச்ருதி** என வழங்கப்பெறும்; அத்வைத ச்ருதியென்பதும் மறு பெயர். பிறகு, பல தத்வங்களுள்ளன வென்று கூறுவதாக எடுத்துக் காட்டப்பட்ட ச்ருதி வாக்யங்களானவை **பேத ச்ருதி** அல்லது த்வைத ச்ருதியென்று வழங்கப்பெறும். இவை ஒன்றோடொன்று முரண்படுகிற வார்த்தைகளாக இருக்கின்றன. 'பல தத்வங்கள் கிடையா; ஒன்றேதான்' என்று ஓரிடத்திற் சொல்லுவதும், பல தத்வங்களுண்டென்று பிறிதோரிடத்தில் விரித்துக் காட்டிக் கூறுவதும் பரஸ்பரம் முரண்பட்டதே யன்றோ? ஒன்றுதான் தத்வம் என்று சொல்லிவிட்டால், பல தத்வங்களுள்ளனவாகச் சொல்வது கூடாது; பல தத்வங்கள் உண்டென்றால் ஒன்றே தத்வமென்பது பொருந்தாது; ஆகவே முரண்பாடு மூதலிக்கப்பட்டதாயிற்று.

''வேதநூல் ஓதுகின்றதுண்மையல்லதில்லை மற்றுரைக்கிலே'' என்ற திருமழிசையாழ்வார் திருவாக்கின்படி யதார்த்தமே யுரைக்கவல்ல உபநிஷத்துக்கள் பரஸ்பர விருத்தமாகவோ அஸங்கதமாகவோ சொல்லமாட்டாவாதலால், மேலே யெடுத்துக்காட்டின ச்ருதி வாக்யங்களை முரண்பாடு சிறிதுமின்றியே ஸங்கதமாகப் பொருந்த விடுகிற வழி என்ன? என்பது ஆராயப்படவேண்டும். ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள், ஒரு தத்வமே யுள்ளதென்று ஓதுகின்ற (அத்வைத ச்ருதிகளாக நாம் மேலே எடுத்துக்காட்டிய) அபேத ச்ருதிகளை முக்யமாகக் கொண்டு ஒன்றேதான் தத்வமென்று நிர்வஹித்தார்கள். பல தத்வங்களுண்டென்றோதுகின்ற (த்வைத ச்ருதிகளாக நாம் மேலே யெடுத்துக்காட்டிய) பேத ச்ருதிகளை ஒருவாறு ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்றும் அவர்கள் கருதினார்கள். சேதநப் பொருள்களும் அசேதநப் பொருள்களுமுள்ளனவாகத் தோன்றுவது மாயையின் தோற்றமே

http://acharya.org

யாதலால், அப்படிப்பட்ட தோற்றத்தை நோக்காகக்கொண்டு பேத ச்ருதிகள் அவதரித்ததாக நிர்வஹித்துவிடலாமென்பது இவ்வத்வைதிகளின் கருத்து. ஆகவே த்வைத ச்ருதிகளைத் தள்ளி அத்வைத ச்ருதிகளையே முக்யமாகக் கொண்டபடியால், இவர்கள் அத்வைதிகளென்று வழங்கப்படுகிறார்கள். பேதம் மாயைத்தோற்றம் என்கிறார்களாதலால் அவர்கள் மாயாவாதிகளென்றும் வழங்கப்படுகிறார்கள்.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த ஸ்வாமிகள் த்வைத ச்ருதிகளான பேத ச்ருதிகளை முக்யமாகக்கொண்டு அத்வைத ச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்று கருதுகின்றார்களாதலால், அவர்கள் (மத்வாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள்) **த்வைதிகள்** என வழங்கப்படுகிறார்கள்.

ஆக, மேற்கூறிய (அத்வைதம் த்வைதம் என்கிற) இரண்டு ஸம்ப்ரதாயங்களிலும் ஒருவகையான உபநிஷத் வாக்யங்கள் ஒதுக்கப்பட்டு, ஒருவகையான உபநிஷத் வாக்யங்களே முக்யமாகக் கொள்ளப்படுகின்றன வென்பது தேறுகின்றது. சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்வங்கள் ஸத்யமாக வுள்ளன வென்கிற அர்த்தம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகட்கும் அவரைச் சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று. ஒரே தத்வந்தா னுள்ளது என்கிற அர்த்தம் ஸ்ரீ மத்வாசார்ய ஸ்வாமிகட்கும் அவரைச் சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று.

அத்வைதிகள் சில ச்ருதி வாக்யங்களைத் தள்ளவும், த்வைதிகள் சில ச்ருதி வாக்யங்களைத் தள்ளவும் நேர்ந்திருக்கின்றதென்பதை இதுவரையில் விவரித்தோமானோம். இனி, ஒரு ச்ருதிவாக்யத்தையும் தள்ளாமல் உபநிஷத் வாக்யங்களெல்லாவற்றையுமே ஸமரஸப்படுத்தி ஒன்றையுமொதுக்காமல் மிகவும் பொருத்தமாகவே நிர்வஹித்தருளினவர்கள் நம் பூருவாசாரியர்கள். அவர்களில் தலைவர் பகவத் ராமாநுஜர். ஒரே தத்வந்தா னுள்ளது என்று தெரிவிக்கிற ச்ருதிவாக்யங்களையும், பல தத்வங்களுண்டென்று தெரிவிக்கிற ச்ருதிவாக்யங்களையும் எப்படிப் பொருந்தவிட முடியுமென்னில்: நம் பேராசிரியர் எப்படிப் பொருந்த விட்டிருக்கிறாரென்பது இனி உபபாதிக்கப்படுகிறது.

உலகத்தில் ஒரு வஸ்துவைப் பல வென்றும் ஒன்றே என்றும் சொல்வதற்குப் பொருத்தமுண்டு. உதாஹரணமாக, ஒரு கடிகாரத்தை யெடுத்துக்கொள்வோம்; அஃது ஒன்றா பலவா? என்று கேட்டால், கையில் ஒரு கடிகாரமே உள்ளதாகையால் ஒன்றே என்று சொல்வோம். ஆனால் அதை நாம் ஊன்றிப் பார்க்குங்கால், அதில் பலபல வஸ்துக்கள் அவயவங்களாக (உறுப்புகளாகச்) சேர்ந்திருப்பது புலப்படாமற் போகாது. பல அவயவங்களோடுங்கூடிய அவயவியான வஸ்து ஒன்றே என்று ஏற்படுமேயல்லது, ஒரு வஸ்துவுக்கு மேல் வேறொரு வஸ்துவே இதில் கிடையாதென்று சொல்வதாக ஒருகாலும் ஏற்படாது. இப்படி கடிகாரமென்கிற ஒரு வஸ்துவே யல்ல; உலகிற் காணும் எந்த வஸ்துவை யெடுத்துக்கொண்டு பார்த்தாலும், இப்படி ஒரு விதத்தில் ஐக்யமும் மற்றொரு விதத்தில் அநேகத்வமும் தோன்றியே தீரும். படுக்கை, தலையணை, வண்டி, வீடு முதலிய ஒவ்வொரு வஸ்துவும் ஸ்தூல த்ருஷ்டியில் ஒரே வஸ்துவாகவும், உறுப்புக்களை உற்றுக் காணுமிடத்துப் பல வஸ்துக்களாகவும் கொள்ளப்படுவது அநுபவஸித்தம்.

நம்மையே யெடுத்துக்கொள்வோம். 'ராமாநுஜனென்பவன் ஒருவன்' என்று சொல்கிறோம். 'செவி வாய் கண் மூக்கு முதலான பல உறுப்புகளோடு கூடின ஆத்மாவாகிய அந்த வ்யக்தி ஒருவன்' என்று சொன்னதாகத் தேறுமேயல்லது, அவனிடத்தில் பல வஸ்துக்கள் இல்லை என்று சொன்னதாகத் தேறமாட்டாதன்றோ? இன்னமுமொன்று பாருங்கள். ராமாநுஜன் சிவப்பாயிருக்கிறான்' என்றும்,

http://acharya.org

'ராமாநுஜன் மேதாவியாயிருக்கிறான்' என்றும் வழங்கி வருகிறோம். இவ்விரண்டு வார்த்தைகளிலும் 'ராமாநுஜன்' என்கிற சொல் உள்ளது. சிவப்பாயிருக்கிறானென்னும்போது ராமாநுஜனென்ற சொல்லானது சரீரத்தை நோக்கியது; மேதாவியாயிருக்கிறானென்னும்போது அந்தச் சொல் ஆத்மாவை நோக்கியது. ஏன்? சிவப்பு நிறம் சரீரத்திற்கு ஏற்குமேயல்லது ஆத்மாவுக்கு ஏலாது. மேதாவித்வம் (அதாவது: அறிவுடைமை) ஆத்மாவுக்கு ஏற்குமேயல்லது, சரீரத்திற்கு ஏலாது. ஆகவே, ஒரே பதம் சில ஸமயங்களில் ஆத்மாவைக் குறிப்பதாயும் சில ஸமயங்களில் உடம்பைக் குறிப்பதாயும் தேறுகின்றதென்பது தெற்றென விளங்கிற்று.

இனி, நாம் முன்னே காட்டிய பேத ச்ருதிகளையும் அபேத ச்ருதிகளையு மெடுத்துக் கொள்வோம். சித்து அசித்து ஈச்வரனென மூன்று தத்வங்களுள்ளனவாகச் சொல்லுகிற ச்ருதி வாக்யங்கள் (பேத ச்ருதிகளானவை), உண்மையாக அப்படிப்பட்ட மூன்று பொருள்களிருப்பனவாகச் சொல்லுகின்றனவாதலால் பொருந்தும். ஒன்றேயுள்ளது என்று சொல்லுகிற ச்ருதி வாக்யங்கள் (அபேத ச்ருதிகளானவை), சேதந அசேதநப் பொருள்களை சரீரமாகக் கொண்ட பரம்பொருள் ஒன்றே என்ற உண்மையைக் காட்டுகின்றனவாதலால் இவையும் பொருந்தும். இப்படி ஸமந்வயப்படுத்திக் காட்டுவதற்குத் துணைபுரியும் ச்ருதி வாக்யங்கள், **'யஸ்ய ப்ருதிவீ சரீரம்......யஸ்ய ஆத்மா சரீரம்''** இத்யாதியாக உள்ளவைகளாம். இவை சரீர சரீரிபாவத்தை விளக்கவல்ல வாக்யங்களாகும். பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகிற வாக்யங்களாதலால் **கடக ச்ருதி** யென்றும் வழங்கப்பெறுமிவை. இப்படிப்பட்ட ச்ருதி வாக்யங்களில் த்வைதிகளும் அத்வைதிகளும் கண் செலுத்தாமையினாலேயே, அவர்கள் ஸகல ச்ருதி வாக்யங்களையும் ஸமரஸப்படுத்த அவகாசமில்லையாயிற்று. நம்முடைய ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாதியில் ப்ரதம ப்ரவர்த்தகரான நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் '**உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும்**' என்கிற அருமருந்தன்ன ஸ்ரீ ஸூக்தியினால் சரீராத்மபாவத்தை நிதியாகக் காட்டியருளினபடியால், ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் முதலான நம் ஆசார்ய சிகாமணிகள் அந்தத் திவ்ய ஸ்ரீஸூக்தியையே பின்பற்றி ஸகல ச்ருதி வாக்யங்களையும் ஸமரஸமாக நிர்வஹிக்க வல்லவர்களாயினர். அப்படிப்பட்ட ஆசார்யர்களில் தலைவரான ஸ்வாமி ஸ்ரீ ராமாநுஜரைப் பற்றி '**அவரோபிதவாந் ச்ருதே: அபார்த்தாந்**' என்று கூறியது மிகப் பொருத்தமானதென்று உணரத்தக்கது. ஆக, இந்த வ்யாஸத்தினால் விசிஷ்டாத்வைதக் கொள்கையை விளக்கமாக விவரித்தோமாறோம். இவ்வர்த்தங்களையெல்லாம் ஸாரமாகவும் சுருக்கமாகவும் நெஞ்சிற் பதியவைத்துக்கொள்ள தேசிகன் தாமே ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் பணித்த ச்லோகம்.

> **''மிதோ பேதம் தத்வேஷ்வபிலபதி பேதச்ருதிரதோ**
> **விசிஷ்டைக்யாத் ஐக்யச்ருதிரபி ச ஸார்த்தா பகவதி,**
> **இமாவர்த்தௌ கோப்தும் நிகிலஜகதந்தர் யமயிதா**
> **நிரீசோ லக்ஷ்மீச: ச்ருதிபிரபராபி: ப்ரணிததே''** என்பதாம்.

நம்முடைய ஸித்தாந்தத்திற்கு சரீராத்மபாவமே உயிரானதென்றும், அதைத் திடமாகத் தெரிந்துகொள்ளப்பெறில் எந்த மதாந்தரஸ்தர்களையும் எளிதில் வென்று விடலாமென்றும் அவர் தாமே ரஹஸ்யத்ரய ஸாரத்தில்

> **'' யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம் வித்யாத் அவித்யாதம:**
> **ப்ரத்யூஷம் ப்ரதிதந்த்ரமந்திமயுகே கச்சித் விபச்சித்தம:,**
> **தத்ரைகத்ர ஜடித்யுபைதி விலயம் தத்தந்மதஸ்தாபநா**
> **ஹேவாகப்ரதமாந ஹைதுககதாகல்லோல கோலாஹல: ''** என்பதாம்.

http://acharya.org

அண்ணஸ்வாமி யுபந்யாஸமாலையில்

நான்காமிதழ்

— முப்பதாவது உபந்யாஸம் —

இரண்டவதாரங்களின் ஒற்றுமையநுபவம்.

(இராமபிரானுக்கும் கண்ணபிரானுக்கும் ஒற்றுமையை ஒரு சுலோகத்திலுல் கூறி வியாக்கியானமும் செய்யப்படுகிறது.)

நத்யா: கூலேவதீர்ணௌ பித்ருவசநபரித்ராயகௌ ப்ரேமவச்யௌ
ஆபால்யாத் வைரிப்ருந்தக்ஷபணபடுதரௌ ப்ராப்த காந்தாரயாத்ரௌ,
மோக்ஷைச்வர்யப்ரதௌ சாபி அவரகுலஜ ஸௌஹார்த்ததந்யௌ ஸுரம்யௌ
பாரம்யே நிர்வ்யபேக்ஷௌ அதிமநுஜக்ருதீ ராமக்ருஷ்ணௌ நமாமி. 133.

(இந்த ச்லோகத்திலுள்ள பத்து விசேஷணங்களும் விவரிக்கப்படுகின்றன.)

1. **நத்யா: கூலே அவதீர்ணௌ** — இராமபிரான் ஸரயூநதிக்கரையிலும் கண்ணபிரான் யமுனையாற்றங்கரையிலும் அவதரித்தவர்கள்.

இராமபிரானுக்கும் கண்ணபிரானுக்கும் நதீதீரத்தில் அவதரிப்பதிலுள்ள குதூஹலத்தைப்பற்றின உபந்யாஸமிது. இதில் கண்ணபிரானுக்குள்ள ஏற்றமும் உபந்யஸிக்கப்படும். உலகத்தில் நதீதீரவாஸம் ஸமுத்ரதீரவாஸம் பர்வதாதி உத்துங்கஸ்தலவாஸம் இத்யாதிகள் பரமபாக்ய விசேஷங்களாகச் சொல்லப்படுகின்றன. ஸமுத்ரதீரவாஸத்திற் காட்டிலும் நதீதீரவாஸம் மிகச் சிறந்தது. ஏனென்றால், கடல் கண்ணுரக் காண்பதற்கு மட்டும் அழகியதாயிருக்குமேயல்லது கடல்நீரை ஒருவிதமாகவும் உபயோகங்கொள்ள ப்ராப்தியில்லையன்றே. நதீதீர்த்தம் அப்படிப்பட்டதன்றே. ஸகலவிதமான உபயோகங்களுக்கும் ப்ராப்தியுண்டே. நதீதீரவாஸம் பண்ணப்பெற்றவர்கள் பயணமெடுத்துப் போமிடங்களிலும் நதீதீரவாஸத்தையே கணிசிப்பர்களாயிற்று. ஸ்ரீமந்நாராயணன் விரஜாதீரவாஸம்பண்ணிக் களித்தவனுகையாலே இந்நிலவுலகத்தில் திருவவதரிக்கத் திருவுள்ளம்பற்றும்போதும் நதீதீரத்தைத் தேடுகிருனுயிற்று. ஆகவேதான் ராமனுக அவதரித்தது ஸரயூதீரத்திலும், கண்ணனுக அவதரித்தது யமுநாதீரத்திலுமாயிற்று. ஆக நதீதீராவதார குதூஹலம் இருவர்க்கு மொக்குமென்று இவ்வகையாலே ஸாதர்மியம் கொள்ளக்கடவது. இனி இதில் கண்ணனுக்குண்டான ஏற்றம் கேண்மின். இராமபிரான் ஸரயூதீரத்தில் அவதரித்தானேலும் அவனுடைய சரித்திரத்தில் ஸரயூஸம்பந்தலேசமும் காணப்படவில்லை. கடைசியாகத் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளும்போது ஸரயுவில் இறங்கினுரென்பது தவிர வேறுவிதமாக ஸரயூப்ரஸ்தாவம் நிகழவில்லை. சக்ரவர்த்தி திருமகனுகத் திருவவதரித்தபடியாலே ராஜகுமாரர்களுக்குப் போல உஷ்ணோதகஸ்நானந்தான் இராமனுக்குக் கிடைத்திருக்கும். பரதாழ்வானைப்பற்றி இளையபெருமாள் நிர்வேதத்தோடு சொல்லும்போது * அத்யந்த ஸுகஸம்வ்ருத்தஸ் ஸுகுமாரஸ் ஸுகோசித:, கதம் நு அபரராத்ரேஷு ஸரயூமவகாஹதே.* [ஆரண். 16-30] என்றதை ஆழ்ந்து நோக்குங்கால் 'குளிர்நீரைத் தொடாமல் வெந்நீரிலேயே ஸுகமாக வளர்ந்த பரதன் இப்போது உஷ்ணோதகம் பெறுவதற்கு ப்ரஸக்தியில்லாமையாலே எப்படித்தான் ஸரயுவில் குடைந்து நீராடுகிருனே!' என்கிற அவஸாதமும் தோன்ற நிற்கும். பரதாழ்வானுடைய ஸௌகுமார்யத்திற்குக் குறைந்ததன்றே இராமனுடைய ஸௌகுமார்யம். யசோதைப்பிராட்டி கண்ணனை நோக்கி "நீ பிறந்த திருவோணமின்று" என்று நிமித்த விசேஷத்தைச் சொல்லி *காய்ச்சின நீரொடு நெல்லி கடாரத்தில் பூரித்து வைத்

http://acharya.org

தேன் * என்று வெந்நீர் காய்ச்சி வைத்திருப்பதாகவுஞ் சொல்லி நீராடவழைக்கிறாள். இது நைமித்திக ஸ்நானமத்தனை. சக்ரவர்த்தி திருமகனுக்கு இதுதானே நித்ய ஸ்நானமாகவிருக்கும். ஆக, இராமன் ஸரயூதீரத்தில் அவதரித்தானென்பது மட்டுமே யுள்ளதென்று விளக்கப்பட்டது. கண்ணனுக்கும் யமுனைக்குமுண்டான தொடர்பைப் பற்றிப் பேசப் புகுந்தாலோ வர்ஷசதம் பேசினாலும் போதாது.

கண்ணன் திருநாமமே *தூயபெருநீர் யமுனைத் துறைவனென்பதாம். யமுனையின் தீர்த்தத்திற்குத் தூய்மையை ஆசாரியர்கள் அற்புதமாகவருளிச்செய்கிறார்கள். அதைச் சிறிது விவரித்தாக வேண்டுமிங்கு; விவரிக்கிறேன். இராவணன் பஞ்சவடியினின்று பிராட்டியை அபஹரிக்கும்போது "ஹம்ஸ காரண்டவா கீர்ணாம் வந்தே கோதாவரீம் நதீம், க்ஷிப்ரம் ராமாய சம்ஸ த்வம் ஸீதாம் ஹரதி ராவண:" என்று கோதாவரியை நோக்கிக் கைகூப்பி 'தாயே! இப்படி ராவணன் என்னைக் கவர்ந்து போனானென்று பெருமானுக்குச் சடக்கெனச் சொல்லுவாயாக' என்று வேண்டிக்கொண்ட விடத்தும் ராவணபயத்தாலே சொல்லிற்றில்லை; ராவணனுடைய இருப்பிடத்திற்கும் கோதாவரிக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லாமையாலே அஸ்தானே அஞ்சிற்றத்தனை. யமுனையோ வென்னில், கம்ஸன் மாளிகையின் கீழே பெருகாநின்றதாகையாலே அவனிடத்து மிகவும் அஞ்சவேண்டியதுண்டு; அப்படியிருந்தும் அஞ்சாதே பகவத் விஷயத்தில் கிஞ்சித்கரித்து ஸத்தை பெற்று ஸ்வரூபம் நிறம் பெறவேணுமென்று கருதி, *யமுநாஞ்ச அதிகம்பீராம் நாநாவர்த்த ஜஷாகுலாம், வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ * என்னும்படி, பிறந்தவன்றே கண்ணனை வஸுதேவர் திருவாய்ப்பாடியிலே கொண்டுபோய் விடுவதற்கு அவனையெடுத்துக்கொண்டு புறப்படுகையில் அப்போது வர்ஷாகாலமாகையாலே வானத்தையளாவிப் பெருகாநின்ற யமுனை தன்னை முழங்காலளவாக வற்றுவித்து வழிதந்தது. இந்தத் தூய்மை வேறு எந்த நதிக்கும் கிடையாது. * **வல்லவீவதநோச்சிஷ்டபவித்ராதர வித்ரும:** * என்கிறபடியே க்ருஷ்ணனும் பெண்களுமாக ஜலக்ரீடைபண்ண ஒருவர்க்கொருவர் கொப்பளித்த தீர்த்தத்தை யுடைமையினால் வந்த பரிசுத்தியையும் கொள்ளலாம். (தூய) என்றதற்கு மேலே (பெரு) என்று சொல்லப்படுகிற பெருமையாவது — பஞ்சலக்ஷங்குடிப் பெண்களும் கண்ணனுங்கூடி ஜலக்ரீடை பண்ணுவதற்கும் பெண்கள் விரஹதாபம் தீரக் குளிக்கைக்கும் போதும்படி மிக விசாலமாயிருக்கை. ஆக இத்தகைய புகழ் பெற்றதாயிற்று யமுனையாறு. மேலுங்கேளீர்;—கீதகோவிந்தாநுபவம்;—

ஜயதேவர் கீதகோவிந்தத்திற்கு மங்களாசரணம் செய்பவர் "மேகைர் மேதுரமம்பரம் வநபுவ: ச்யாமாஸ் தமாலத்ருமை: நக்தம் பீருரயம் த்வமேவ ததிமம் ராதே! க்ருஹம் ப்ராபய, இத்தம் நந்தநிதேசதச் சலிதயோ: ப்ரத்யத்வகுஞ்ஜத்ருமம் ராதாமாதவயோர் ஜயந்தி **யமுநாகூலே ரஹ:கேலய:**" என்று பரமாத்புதமான சுலோகமொன்று பணித்தார். கூரத்தாழ்வான் போல்வார் "தத்கீர்த்தநம் பரமபாவநம் ஆமநந்தி" என்னும்படியான கண்ணனுடைய தூர்த்தாயிதம் வஸ்துஸ்திதியில் பரமபவித்ரமாகையாலும், கண்ணனும் * ஜந்ம கர்ம ச மே **திவ்யம்** * என்னும்படியிருக்கையாலும் மேலெடுத்த ஜயதேவ ச்லோகத்தைச் சிறிது விவரித்து அநுபவிக்கிறேன். ஒரு நாள் திருவாய்ப்பாடியிலெல்லாரும் ஒரு விசேஷத்திற்காக கண்ணனையுங் கூட்டிக்கொண்டு நெடுந்தூரம் சென்றிருந்தார்கள். ஸூர்யாஸ்தமன ஸமயமாயிற்று. எல்லாரும் புறப்பட்டுத் திரும்புவதற்குச் சிறிது தாமதிக்க வேண்டியிருந்தபடியால் சிறுவனான கண்ணனைத் துணைகூட்டி இல்லத்திற்கு அனுப்பிவிட வேணுமென்று கருதிய நந்தகோபர் ராதையை நோக்கிச் சொல்லுகிறார் [**மேகைர் மேதுரம் அம்பரம்**] ஆகாசப்பரப்படைய மேகங்கள் மூடிக்கிடக்கின்றன. இதனாலுண்டான இருட்சிக்கு

http://acharya.org

மேலே **[வநபுவ: ச்யாமா: தமாலத்ருமை:]** காடெங்கும் பச்சிலை மரங்கள் அடர்ந்து இருள் மூடிக்கிடந்தது. **[நக்தம் பீரு: அயம்]** கண்ணனே அஸ்தமித்தவாறே அச்சம் குடிபுகுந்திருப்பவன். [இடையில் அடியேனுடைய சிறுபேச்சு; *தொத்தார் பூங்குழல் கன்னியொருத்தியைச் சோலைத் தடங்கொண்டு புக்கு, முத்தார் கொங்கை புணர்ந்து இராநாழிகை மூவேழு சென்றபின் வந்தாய்* என்று யசோதை சொன்னதாகப் பெரியாழ்வார் ஸாதிக்கிறார்; **'நக்தம்பீருரயம்'** என்று நந்தகோபர் சொன்னதாக ஜயதேவர் சொல்லுகிறார். இவற்றில் எது உண்மையோ அறியேன்.] **ஹே ராதே! தத் இமம் த்வமேவ க்ருஹம் ப்ராபய!** = அம்மா ராதாதேவீ! ஆகையினால் இவனை நீயே மனையிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிடு. **[இத்தம் நந்தநிதேசதச் சலிதயோ: ராதாமாதவயோ:]** இப்படி நந்தகோபர் தாமே கட்டளையிட, ராதையும் கண்ணனுமாய்ப் புறப்பட்டார்கள். எப்போது மனை சேர்ந்தார்களென்னில், அது தெரியாது; **[யமுநாகூலே ப்ரத்யத்வகுஞ்ஜத்ருமம் (தயோ:) ரஹ:கேலய: ஜயந்தி]** ப்ருந்தாவனத்தில் ஸேவாகுஞ்ஜமென்று ஓரிடமுண்டு; அஃது இற்றைக்கும் ஸுரக்ஷிதமாகவுள்ளது. யமுனைக்கரை வழியிலுள்ள குஞ்ஜங்கள்தோறும் ரஹ:கேலிகள் நடந்ததாக ஜயதேவர் அநுபவிக்கிறார். பரமபக்தமணியான இவர் இதை உட்கண்ணால் காணாமல் எழுதியிருக்க முடியாது. யமுநா கூலத்திற்கு வாய்த்த பரமபாக்யமன்றோவிது. ஸரயூதீரத்திற்கு இங்ஙனே ஒரு விசேஷம் ஏதேனுங் கேட்டதுண்டோ? *கூர்மழைபோல் பனிக்கூதலெய்திக் கூசிநடுங்கி யமுனையாற்றில், வார்மணல் குன்றில் புலரநின்றேன் வாசுதேவா வுன்வரவு பார்த்தே* (பெருமாள் திருமொழி 6-1) என்னும்படி ஏமாற்றமடைகின்ற பாக்கியந்தான் ஸரயுவுக்கு உண்டோ? *இங்குத்தை வாழ்வையொழியவே போய் எமுனைக் கரைக்கென்னை யுய்த்திடுமின்* என்றும், *காளியனுச்சியில் நட்டம்பாய்ந்து போர்க்களமாக நிருத்தம்செய்த பொய்கைக்கரைக்கென்னை யுய்த்திடுமின்* என்றும் ஆண்டாள் சொன்னதுபோல *சரயுக்கரைக்கென்னை யுய்த்திடுமின்* என்று சொன்னாருண்டோ? ***காளிந்தீரஸிகாய*** என்பது தசாவதார ஸ்தோத்ர ஸ்ரீஸூக்தி. ***யமுநாஸாக்ஷிக யௌவநம் யுவாநம்*** என்பது கோபாலவிம்சதி ஸ்ரீஸூக்தி. கண்ணன் திருவாய்ப்பாடியில் யமுனைக் கரையில் வளர்ந்த காலத்தில் யௌவனம் குடிபுகாமலிருக்க, இவனுடைய யௌவனத்திற்கு யமுனை எப்படி ஸாக்ஷியாகுமென்று சிலர் சங்கிப்பர்கள்; கண்ணனுடைய சைசவ பால்ய கௌமார யௌவனங்கள் ஏககாலத்திலே திருமேனியில் கலந்து பரிமாறுநிற்கும். இல்லையாகில் *பொன்போல் மஞ்சனமாட்டி யமுதூட்டிப் போனேன் வருமளவிப்பால், வன்பாரச் சகடமிறச்சாடி வடக்கிலகம் புக்கிருந்து, மின்போல் நுண்ணிடையாளொரு கன்னியை வேற்றுருவம் செய்துவைத்த, அன்பா வுன்னை யறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவன் அம்மந்தரவே* என்று யசோதையின் பாசுரமாகப் பெரியாழ்வார் அருளிச்செய்தது பொருந்தாதே. சகடமிறச் சாடியது ஒரு பிராயத்திற்குள்ளே; கண்ணா! உனக்கு நான் ஸ்தந்யம் கொடுக்க அஞ்சாநின்றேனென்று சொல்லுகிற பதிகமாகையாலே முலைப்பாலுண்பதுமாறாத பருவமென்பதில் ஸந்தேஹமில்லை. அப்போதே *வடக்கிலகம் புக்கிருந்து மின்போல் நுண்ணிடையாளொரு கன்னியை வேற்றுருவம் செய்துவைத்தா*னென்றால் சைசவ பால்ய யௌவனங்கள் முப்புரியூட்டின திருமேனியென்னலாவது தவிர வேறுண்டோ? ஆக, இராமனவதரித்தவிடமான ஸரயூதீரத்திற்காட்டிலும் கண்ணனவதரித்தவிடமான யமுநாதீரம் பலவகையாலும் மேம்பட்டதென்று ஸமர்த்திக்கப்பட்டதாயிற்று. ... ... *

2. **பித்ரு வசந பரித்யாகௌ** — *பிதுர் வசநநிர்தேசாத்* இத்யாதிப்படியே இராமபிரான் பித்ருவாக்யபரிபாலகனென்பது ப்ரஸித்தம்; கண்ணனும் *உபஸம்ஹர

விச்வாத்மந்! ரூபமேதத் சதுர்ப்புஜம் * என்கிற பித்ருவாக்யத்தை உடனே பரிபாலித்தவன்.

எம்பெருமான் திருவவதாரங்கள் செய்தருளும்போது தன்னுடைய ஸ்வாதந்திரியம் முதலான பரத்வைகாந்திக குணங்களை அறவே விட்டிட்டு ஸர்வாத்மநா பாரதந்திரியத்தை ஏறிட்டுக்கொண்டு வந்து பிறக்கிறானாகையாலே ''மாத்ருதேவோ பவ. பித்ருதேவோ பவ.'' இத்யாதிகளான உபநிஷதுபதேசங்களுக்குக் கட்டுப்பட்டுப் பித்ருவாக்யபரிபாலனத்தில் குதூஹலங் கொண்டிருக்குந்தன்மை ஸ்ரீராம க்ருஷ்ணர்களிருவர்க்கு மொக்கும். ராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்கள் நால்வரின் அவதாரத்திற்கு ப்ரயோஜனத்தை நிரூபிக்கப் புகுந்த நம் ஆசார்யர்கள், நால்வரும் நான்குவிதமான தருமங்களை யனுட்டித்துக் காட்ட அவதரித்தார்களென்று உண்மைகண்டு வெளியிடுகிறார்கள். * கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியான ப்ரவேசத்தில் இது காணத்தக்கது இளையபெருமாள் முதலான மூவருடைய தருமங்கள் கிடக்க; இராமபிரான் கைக்கொண்ட தருமம் எதுவென்றால் 'பெரியார் சொல்லிற்றைச் சிறியார் செய்யக்கடவர்கள்' என்றொரு ஸாமான்ய தருமமுண்டே அதுதான். இராமன் செய்த காரியங்களுக்கு ஹேது சொல்லுகின்ற வான்மீகி முனிவர் ''விச்வாமித்ரஸ்ய சாஸநாத்'' ''பரத்வாஜஸ்ய சாஸநாத்'' ''அகஸ்த்யவசநாத்'' ''பிதுர் வசநநிர்தேசாத்'' என்றிப்படி சொல்லியிருக்கக் காண்கிறோம். மஹான்களுடைய வாக்யபரிபாலனம் ஒரு தட்டும் பித்ருவாக்ய பரிபாலனம் ஒரு தட்டுமாயிருக்கும் இராமபிரானுடைய செய்கைகளில். இனி கண்ணபிரானுடைய செய்கைகளை யெடுத்துக் கொள்வோம்; இராமன் பிதா முதலியவர்களின் வசனத்தைப் பரிபாலனம் பண்ணினது பக்வனான பிறகு; (அதாவது) பன்னிரண்டாண்டுகளுக்குமேல். கண்ணனோவென்னில் அவதரித்த க்ஷணம் தொடங்கியே. இதனைச் சிறிது விவரிக்கிறேன். கண்ணன் அவதரித்தபோது சங்க சக்ர கதாதரனாய் அவதரித்தானென்பது ப்ரஸித்தம். உடனே தந்தையும் தாயுமான வஸுதேவ தேவகிகள் அந்த திவ்யாயுதங்களை மறைத்துக்கொள்ளுமாறு வேண்டினார்கள். * ஜாதோஸி தேவதேவேச! சங்கசக்ரகதாதர!, திவ்யரூபமிதம் தேவ! ப்ரஸாதேந உபஸம்ஹர * என்பது வஸுதேவர் வசனம். * உபஸம்ஹர ஸர்வாத்மந்! ரூபமேதச் சதுர்ப்புஜம் * என்பது தேவகியின் வசனம். இருவருடைய சொல்லையும் கர்ப்ப க்ருஹத்திலேயே பேணினவன் கண்ணபிரான். திவ்யாயுதங்களை மறைத்துக் கொள்ளும்படி வேண்டினதற்கு இருவரும் ஒரேவிதமான காரணமே கூறினர் நீர் அவதரித்ததை ஆஸுர ப்ரக்ருதியான கம்ஸன் தெரிந்துகொள்ள வேண்டாமென்று; இதைக் கண்ணன் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை; நான் அவதரித்தேனென்பதைக் கம்ஸன் தாராளமாகத் தெரிந்து கொள்ளட்டுமே; அதனால் நமக்கு என்ன ஹானிவிளைந்திடும்? வீணாக நீங்கள் அஞ்சுவது அநுசிதம்'' என்று சொல்லி, அவர்களது வசனத்தை மறுத்துவிடலாம். ஆனாலும் 'பிறக்கும்போதே தந்தைதாயர் சொல்லைப் பேணின பெருமை நமக்கு இருக்கவேணும்' என்றெண்ணியே சொன்னபடி கேட்டனன். அன்றே திருவாய்ப்பாடி சென்று சேர்ந்த கண்ணபிரான் மறுபடியும் அக்ரூரரால் மதுரைக்கு அழைத்துவரப்பட்டுக் கம்ஸவதம் பண்ணியான பிறகு, மாதா பிதாக்களைத் தெண்டனிட்டு நிற்க, அப்போது தேவகியானவள் கண்ணனை நோக்கி.

குன்றினால் குடைகவித்ததுங் கோலக்குரவை கோத்ததுங் குடமாட்டும் *
கன்றினால் விளவெறிந்ததும் காலால் காளியன் தலை மிதித்ததும் முதலா *
வென்றிசேர் பிள்ளை நல்விளையாட்டம் அனைத்திலும் அங்கென்னுள்ளமுள்குளிர *
ஒன்றுங்கண்டிடப் பெற்றிலேனடியேன் காணுமாறினியுண்டெனில் அருளே.

என்றாள். (அதாவது) கோவர்த்தநோத்தரணம், ராஸக்ரீடை, குடக்கூத்தாடல், வத்ஸ கபித்தக்ஷேபம், காளியமர்த்தனம் முதலாகத் திருவாய்ப்பாடியில் நடந்த லீலைகளைத் தான் கேள்விப்பட்டிருந்தவளாகையாலே அவற்றில் ஒன்றும் தான் காணப்பெறாத வருத்தத்தைத் தெரிவித்து, அவற்றையெல்லாம் இப்போது இங்கு நான் காணும்படி செய்தருள வல்லையேல் செய்தருளப்பா' என்று வேண்டினாள். எப்படி மறுப்பன்; அம்மா! இது அஸாத்யமன்றோ என்று எப்படிச் சொல்லுவன் ? 'பூதநா சகட யமலார்ஜுந காளிய கோவர்த்தநாதிகள் இங்கில்லையே! எப்படிச் செய்து காட்டுவேன்!' என்றுதான் சொல்லுவனோ! ஸத்யஸங்கல்பனாகையாலே அவள் குறைதீர எல்லாம் செய்து காட்டியருளினன். இஃது இருக்கட்டும். திருவாய்ப்பாடியில் வாழ்ந்த காலத்தில் தாய்தந்தையர்க்கு அடங்காதவனாயிருந் தானென்று சில சரித்திரங்களினால் தோன்ற நிற்கும். *தாயர்வாய்ச்சொல் கருமங் கண்டாய்* என்றும் *தாய்சொல்லுக்கொள்வது தன்மங்கண்டாய்* என்றுமுள்ள யசோதையின் வார்த்தைகளினால் கண்ணன் தாய்சொல்லைக் கேளாதவனாயிருந்தா னென்று நினைக்கும்படியாயிருந்தாலும் அதுவொரு பால்யசௌல்யமாக நினைக்கத் தக்கதேயொழிய, உண்மையில் தன்னுடைய விதேயத்வத்தை எவ்வளவோ அழகாகக் காட்டியிருக்கிறானே. உரலினிடை யாப்புண்டிருந்ததொன்று போதுமே; தாய் தாம்பினால் கட்டவொண்ணாதபடி தப்பித்துக்கொள்ள வல்லமையில்லாதவனா? கட்டினகட்டை அறுத்தெறிந்து ஓடவல்லமையில்லாதவனா? இந்தச் சரிதையிலே ஈடுபட்ட ஆழ்வான் **"யம் துர்க்ரஹம் ஸுமநஸோ மநஸாபி நித்யம் பந்தச்சிதம் பரமமீச முதா ஹரந்தி"** என்று முன்னமருளிச்செய்து, பின்னை **"தாம்நா நிபத்த இதி சுச்ரும தம் பவந்தம்"** என்றருளிச் செய்கிறார். தாய்க்கு அடங்கி நிற்பவனென்பதைக் காட்டவே யன்றோ தாமபந்தன சரித்திரமமைந்தது. ... ... *

3. **ப்ரேமவச்யௌ** — இராமபிரான் *மநஸ்வீ தத்கதஸ் தஸ்யா நித்யம் ஹ்ருதி ஸமர்ப்பித:* என்னும்படி பிராட்டி பக்கலிலே ப்ரேமவசம்வதர். கண்ண பிரான் * அணியாய்ச்சியர் சிந்தையுள் குழகனார்.

ப்ரேமவச்யத்வமாகிற குணம் இராமபிரானிடத்தில் விளங்கும்படியை முன்னம் நிரூபிக்கிறேன். **'ப்ரியஸ்ய பாவ: - ப்ரேமா'** என்று வ்யுத்பத்தியாதலால் ப்ரியனாயிருக்குத்தன்மை ப்ரேமமெனப்படும். ப்ரீதிபாத்ரபூதனையும் ப்ரீதிகர்த்தாவையும் ப்ரியனென்று வழங்குவதுண்டு. அதாவது, ப்ரீதிசெய்பவனும் ப்ரியன், ப்ரீதியைப் பெறுபவனும் ப்ரியன் என்றபடி. ஆகவே சக்கரவர்த்தி திருமகன் பலருடைய ப்ரீதிக்குக் கொள்கலமாயிருந்ததும் பலரிடத்தில் ப்ரீதி வைத்திருந்ததும் இங்கு நிரூபிக்கத் தக்கதாகிறது. [**ரமயதீதி ராம:**] ஆகையாலே தன்னுடைய திருக்குணங்களால், இஷ்டர்கள் அநிஷ்டர்கள் உதாஸீநர்கள் என்கிற வாசியின்றிக்கே எல்லாரையும் ஆகர்ஷித்து அவரவர்களுடைய ப்ரீதிக்குக் கொள்கலமாயிருந்தான் இராமன். அவரவர்களிடத்திலே தான் வைத்திருந்த ப்ரீதியும் உள்ளும் புறமுமொத்து அளவுகடந்திருந்தது. சிலரை யெடுத்துக் காட்டுகிறேன். **"நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி சபரீ"** (தயாசதகே) என்னப்பட்ட மூவரை மட்டும் எடுத்துக் கொள்ளுகிறேன். குஹப்பெருமாள் முதல்வர். இவர் இராமபிரானிடத்தில் வைத்திருந்த ப்ரீதி அதிகமா? இவரிடத்தில் இராமபிரான் வைத்திருந்த ப்ரீதி அதிகமா? என்று பார்க்குமளவில் ஒன்றுக்கொன்று தோற்றிராதென்றே சொல்லவேணும். இனி ஸுக்ரீவ மஹாராஜரையும் திருவடியையுமெடுத்துக்கொண்டால் இவர்கள் விஷயமும் அப்படியேதான். ஸுக்ரீவமஹாராஜருடைய ப்ரீதியைக் கண்டறிவதற்கு நல்ல இடமொன்று கேளீர். பரமபக்தர்களில் தலைவனென்று ப்ரஸித்தனாயிருந்த

http://acharya.org

விபீஷணாழ்வான் ஆர்த்திமிகுந்து பெருமாளைத் தஞ்சமாகப் பற்றவருகிறான். அப்போது ஸுக்ரீவன் செய்யவேண்டிய காரியம் ஒன்றே; அதாவது, இராமபிரானிடத்தே வந்து 'ஸ்வாமிந்! இராவணனுடைய தம்பியாம்; விபீஷணனாம், நால்வருடனே வந்திருக்கிறான். அவன் இவ்விடத்து க்ருபைக்குப் பாத்ரமாகவேண்டி வந்திருக்கிறானென்று தெரிகிறது; திருவுள்ளமானபடி நியமிப்பது' என்று இவ்வளவே சொல்லியிருக்கவேண்டும். இதைவிட்டு அதிகப்ரஸங்கம் செய்திருக்கிறானென்பது அனைவருமறிந்தது. விபீஷணனை சித்ரவதம் பண்ணவேணுமென்று பதைத்தான். இந்த ஸம்ப்ரமம் எதனாலென்று ஆலோசிக்கவேண்டும். பெருமானுடைய ஆற்றலை அறியாதவனன்றே ஸுக்ரீவன். நன்றாக அறிந்து வைத்தும் **"அதிஸ்நேஹ: பாபசங்கீ"** என்கிற நியாயத்தாலே தான் பெருமாளிடத்தில் வைத்திருந்த அபரிமிதமான ப்ரேமமடியாகக் கலங்கியன்றோ இங்ஙனே ஸம்ப்ரமித்தான். அவனிடத்தில் பெருமாள் வைத்திருந்த ப்ரேமமும் அபரிமிதம். அவன் வாலியினுடைய பராக்ரமாதிசயங்களையும் பெருமானுடைய திருமேனியின் ஸௌகுமார்யத்தையுங் கண்டு இவர் வாலியை வதைக்கமாட்டாரென்று மாறாக நினைத்தபோது அரிய பெரிய காரியங்களைச் செய்து அவனுக்கு நம்பிக்கையையுண்டாக்கினது அவனை விடாமல் கைக்கொள்ள வேணுமென்கிற ப்ரேமாதிசயத்தினாலன்றோ. இனி சபரியினிடத்தில் பெருமாளுக்கும் பெருமாளிடத்தில் சபரிக்குமிருந்த ப்ரேமம் விவரிக்கப்பட வேண்டுமோ? ஆக இராமபிரானுடைய ப்ரேமவச்யத்வம் நிரூபிக்கப்பட்டது. இனி இதிற்காட்டிலும் விஞ்சியதான ப்ரேமவச்யத்வம் கண்ணபிரானிடத்தில் நிரூபிக்கப்படுகிறது. அன்பர்கள் பக்கலில் கண்ணனுடைய ப்ரேமப்ரவாஹங்களைப் பார்க்குமிடத்து இராமனுடைய ப்ரேமம் ஸாமாந்யமாகவன்றோ தோன்றும். தன்னுடைய ப்ரேமத்தைக் கல்வெட்டும் செப்பேடும்போலே கீதாசாஸ்த்ரத்தில் நீடூழிகாலம் விளங்கும்படியாகவன்றோ பொறித்துவைத்தான். ***ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:*** என்று கீதையிலே சொன்ன பதினெழுத்து போதுமே. இங்கு **ஜ்ஞாநிந:** என்று விசேஷித்துச் சொல்லியிருக்கையாலே அஜ்ஞாநிகளுக்கு ப்ரியனல்லன்போலும்' என்று சங்கிக்கவொண்ணாதபடி பிறந்தவன்றே தொடங்கி இடக்கை வலக்கையறியாதாரிடத்து ப்ரேமத்தையேயன்றோ நிரூபகமாகக் கொண்டு அனுட்டானத்தில் காட்டிப்போந்தான் தாம்பினால் உரலோடு கட்டுண்டு கிடந்தானென்கிற ஒரு சிறு சரிதையில் தத்துவமறிந்த கூரத்தாழ்வான் **"ப்ரேம்ணா அத தாமபரிணமஜ்ஜுஷா பபந்த [அதிமாநுஷஸ்தவே]** என்றருளிச்செய்ததை நோக்கவேணும். *ஆநிரை மேய்க்க நீபோதி அருமருந்தாவதறியாய்* என்று தானே சொல்லும்படி அருமருந்தான கண்ணனை ஆய்ச்சி தாம்பினால் கட்டியடித்தாளென்றால் இதை யாராவது நம்ப முடியுமாவென்று நினைத்த ஆழ்வான் **[தாமபரிணமஜுஷா ப்ரேம்ணா பபந்த]** ப்ரேமந்தான் தாமமாக வடிவெடுத்ததென்கிறார். "உன்னை இளங்கன்று மேய்க்கச் சிறுகாலே யூட்டியொருப்படுத்தேன். என்னில் மனம் வலியாளொரு பெண்ணில்லை என் குட்டனே! முத்தந்தா" என்கிற யசோதைப்பிராட்டி கண்ணனைக் கன்றுகளின்பின்னே போகவிட்டதற்கே வயிறு பிடிக்குமவளாயிருந்து உரலிலே கட்டியுமடிப்பாளா? இது ஸம்பாவிதமா? என்று சங்கிக்கவே நேரும். ப்ரேமமே தாமமாயிற்றென்றால் என்ன அர்த்தம்? 'முத்தம்தா' என்பது ப்ரேமகார்யமேயொழிய அடிப்பதா ப்ரேமகார்யம்? என்று கேட்டால் என்ன சொல்லுவது? எங்கள் கூரத்தாழ்வான் ஸாதித்திருக்கிறாரென்றால் இதில் எல்லாரும் ஸமாஹிதர்களாவர்களோ? இங்கு விஜ்ஞாபிக்கிறேன் கேண்மின். கண்ணபிரான் தானே யசோதையை நோக்கிச் சொல்லுகிறான் "என்னை நான் மண்ணுண்டேனாகை அன்புற்று நோக்கி யடித்தும் பிடித்தும் அனைவர்க்கும் காட்டிற்றிலையே" என்கிறான். இது பெரியாழ்வார் திருவாக்காயிருந்தாலும், கண்ணபிரான் தானே சோதிவாய்

http://acharya.org

திறந்து பேசின பாசுரமாகவே அடியேன் திண்ணமாக வெண்ணுகின்றேன். **அன்புற்று** என்றது உயிரான வார்த்தை. 'தாயே நான் மண்ணுண்டதே கிடையாது; மண்ணுண்டதாக நீ ஆரோபித்துப்பிடித்ததும் அடித்ததும் **அன்புற்று**; அனைவர்க்கும் காட்டினதும் **அன்புற்று**. நமது பிள்ளையின் வயிற்றிலே வையமேழுமிருப்பதை எல்லாரும் காணவேணுமென்று அன்பு கொண்டு ஒவ்வொருவரையும் கூப்பிட்டு என் வாயைப் பார்க்கச்செய்தாய்; அதனால் இவன் * அண்டரண்ட பகிரண்டத்தொருமாநிலமெழுமால்வரை முற்றுமுண்டகண்டன் என்று அவரவர்கள் தெரிந்துகொள்ளும்படி செய்தாய்; 'இப்படிப்பட்ட பராத்பரன் இவளொருத்திக்குக் கைவழி மண்ணுயிருக்கிறானே ! இது என்ன ஆச்சரியம் !' என்று அவரவர்கள் உன்னைக் கொண்டாடுவதற்காகக் கட்டியடித்தாயத்தனை; அம்மா ! நீ செய்ததெல்லாம் ப்ரேம கார்யந்தான் — என்றானாயிற்று கண்ணன். ''கையைப் பிடித்துக் கறையுரலோடென்னைக் காணவே கட்டிற்றிலையே'' என்பதும் கண்ணனுடைய வார்த்தையே. இதில் (காண) என்றது — என்னுடைய ஸௌலப்யத்தை யெல்லாரும் காண என்றபடி. இதுவும் ப்ரேமத்தால் கட்டினதையே காட்டவற்று. ... *

4. **ஆபால்யாத் வைரிப்ருந்தக்ஷபணபடுதரௌ** – இராமபிரான் * நாவிஜித்ய நிவர்த்ததே * என்னும்படி இளமையிலேயே வைரிகளை வென்று வெற்றிபெற்றவன். கண்ணபிரான் தொட்டில்பருவமே பிடித்துத் தீம்புப்பூடுகளடங்க வுழக்கினவன்.

இளமை தொடங்கியே விரோதிவர்க்கங்களைக் கிழங்கெடுக்குந்தன்மையில் ஸ்ரீராமக்ருஷ்ணர்களிருவர்க்கும் ஸாம்யம். இராமபிரான் விச்வாமித்ரமுனிவரால் தமது வேள்வியைக் காக்கும் பொருட்டு அழைத்துச் செல்லப்பட்டபோது இராமனுக்குப் பிராயம் பன்னிரண்டென்று நிஷ்கர்ஷிக்கப்பட்டுள்ளது. தசரத சக்ரவர்த்தி விச்வாமித்ர முனிவரை நோக்கிச் சொன்ன வார்த்தையில் ''ஊநஷோடசவர்ஷோ மே ராமோ ராஜீவ லோசந:'' என்று 'பதினாறு பிராயம் நிரம்பாதவன் இராமன்' என்றிருக்கையாலே பதினான்கு பதினைந்து பிராயமிருக்குமப்போது என்று சிலர் நினைக்கலாயிருந்தாலும் அந்த சுலோகத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளை ஆர அமர விமர்சங்களைச் செய்து பன்னிரண்டு பிராயமென்று ஸித்தாந்தம் செய்தருளியிருப்பது காண்க. ஆக, பெருமாள் தாடகா தாடகேயாதி நிரஸநம் பண்ணத் தொடங்கினது பன்னிரண்டாவது பிராயத்திலென்றும், ராவண ஸம்ஹாரம் பண்ணித் தலைக்கட்டினது முப்பத்தெட்டாவது பிராயத்திலென்றும் நிர்ணீதமாக வுள்ளது. கரதூஷணாதிவதத்தில் ''**அஸஹாயசூர** !'' என்கிற விருதும் பெற்றனர் பெருமாள். க்ஷத்ரிய ஜாதியில் திருவவதரித்த பெருமாள் சத்ருநிரஸனங்களை எவ்வளவு செய்திருந்தாலும் அது வியக்கத்தக்கதன்று; இதைப்பற்றி விரிவாக எழுதவேண்டிய ஆவச்யகதையுமில்லை. கண்ணபிரானுடைய சத்ருநிரஸன படுத்வம் இதிற்காட்டிலும் மிக விலக்ஷணமாயிருக்கும். பெருமாள் செய்த சத்ருநிரஸநம் பக்வரான பின்பு; கண்ணபிரான் தொட்டில் பருவமே பிடித்து; இது செய்து போந்ததும் அதிலும் இடைச்சாதியிலே தோன்றிக் கோபாலனென்றும் ஆயர்கோமானென்றும் பேர்பெற்றுவைத்து இது செய்ததும் இவனுக்குத் தன்னேற்றம்.

பகவத்கீதையில் அவதாரப்ரயோஜனத்தைச் சோதிவாய் திறந்து தானே பணிக்குமிடத்து ''பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம். தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே'' என்றருளினான். இவற்றில் ஸாது பரித்ராணந்தான் முக்கியமென்று எம்பெருமானார் திருவுள்ளம்பற்றினார். அது

http://acharya.org

அந்தராதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் விசதம் பூர்வபக்ஷி பரமபுருஷனுக்கு சரீரஸம்பந்தம் கிடையாதென்று ஒரு வார்த்தையைக் கிளப்ப, அதைக் கண்டிக்கவெழுந்த பாஷ்யகாரர் விபவாவதாரங்களில் எம்பெருமான் * இச்சாக்ருஹீதாபிமதோரு தேஹனு யிருக்கிறபடியை நிரூபித்தருளுகையில் *பரித்ராணாய ஸாதூநாமித்யாதி கீதாவசனத்தை யெடுத்துக்காட்டி "ஸாதுபரித்ராணமேவ உத்தேச்யம்; ஆநுஷங்கிகஸ் து துஷ்க்ருதாம் விநாச:; ஸங்கல்பமாத்ரேணாபி ததுபபத்தே:" என்றருளிச் செய்தார். இத்தால் ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதுதான் அவதாரப்ரதாநோத்தேச்யமென்று ஸ்வாமியின் திருவுள்ளமாகத் தேறுகின்றது. ஆனால், ஸ்ரீவசனபூஷணத்தில் நஞ்சீயருடைய திருவாக்காக எடுத்துக் காட்டப்பட்டிருப்பதாவது, (192) "ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமையென்று ஜீயரருளிச் செய்வர்" என்று. இங்கு மணவாள மாமுனிகளின் வியாக்கியான திவ்யஸூக்தி — "ஸங்கல்பமாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வசக்தியான ஸர்வேச்வரன் தன்னை யழியமாறி இதர ஸஜாதீயனாய் அவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்யராவணாதி நிரஸநரூப அதிமாநுஷ சேஷ்டிதங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் தொடக்கமான அவ்வோ பாகவத விஷயங்களில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே யென்று ஆப்த தமரான நஞ்சீயரருளிச்செய்வரென்கை" என்பதாம். இத்தால், ஸாதுபரித்ராணம் எப்படி ஸங்கல்பஸாத்யமன்றோ அப்படியே துஷ்க்ருத் விநாசநமும் ஸங்கல்பஸாத்யமன்று என்றதாகத் தேறும். இது அந்தராதிகரண ஸ்ரீ பாஷ்யஸூக்தியோடு விரோதியாதோவென்று சங்கிக்க வேண்டா. * சாதுசனத்தை நலியுங் கஞ்சனைச் சாதிப்பதற்கு, ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப் பிறந்த" என்றும் "மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்" என்றும் நம்மாழ்வாரருளிச்செய்த பாசுரங்களில் நோக்காக இப்படியும் நிர்வஹிக்கலாயிருந்தது. இத்தகைய சத்ருநிரஸனத்தை ஸ்ரீ ராமாவதாரத்திற்காட்டிலும் மேம்படச் செய்தது ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்திலேயாம். கண்ணன் பிறந்தவன்றே தொடங்கிச் செய்துபோந்தது தன்னேற்றம். *

5. **ப்ராப்தகாந்தாரயாத்ரௌ** — இராமபிரான் தண்டகாரண்ய யாத்திரை செய்தவன்; கண்ணபிரான் விருந்தாவன யாத்திரை செய்தவன்.

வனவாஸம் செய்ததில் ஸ்ரீராமக்ருஷ்ணர்களிருவர்க்குமுள்ள ஸாம்யத்தை முன்னம் நிரூபித்து, இதில் கண்ணனுக்குள்ள ஏற்றம் பிறகு நிரூபிக்கப்படுகிறது. இராமபிரான் தந்தையின் மனோரதப்படியும் * இச்சாமோ ஹி மஹாபாஹும் ரகுவீரம் மஹாபலம், கஜேந மஹதா யாந்தம் ராமம் ச்சத்ராவ்ருதாநநம் * என்ற ப்ரஜைகளின் குதூஹலத்தின்படியும் முடிபுனைந்து நாட்டையாள வெண்ணியிருக்க "ஆழிசூழுலகமெல்லாம் பரதனேயாள நீ போய்த், தாழிருஞ்சடைகள் தாங்கித் தாங்கருந்தவமேற்கொண்டு, பூழிவெங்கான நண்ணிப் புண்ணியபுனல்களாடி, ஏழிரண்டாண்டின் வாவென்று" கைகேயியிட்ட கட்டளையின்படி பதினாலாண்டு வனயாத்திரை செய்ய நேர்ந்தபடியால் ப்ராப்த காந்தார யாத்ரத்வம் இராமபிரானுக்கு ப்ரஸித்தமானது. இனி கண்ணபிரான்பாடு செல்வோம். "மதுரா நாம நகரீ புண்யா பாபஹரீ சுபா. யஸ்யாம் ஜாதோ ஜகந்நாத:" என்கிறபடியே *வளவெழுந்தவளமாட மதுரைமாநகரந்தன்னில் பிறந்துவைத்தும், நகரவாஸத்தை வெறுத்து வனவாஸம் பண்ணவேணுமென்கிற குதூஹலங்கொண்டே ஆயர்பாடிக் கணிவிளக்காகி "கற்றுத்தூளியுடை வேடர்கானிடைக் கன்றின்பின், எற்றுக்கென்

பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவமே!'' ''உடையுங் கடியனவூன்று வெம்பரற்களுடைக் கடியவெங்கானிடைக் காலடிநோவக் கன்றின்பின், கொடியேனென்பிள்ளையைப் போக்கினேனெல்லே பாவமே'' என்று தாய் வயிறெரிந்து கதறியழும்படி கானகம்படியுலாவியுலாவினன் கண்ணன். ஆக, வனயாத்திரை ஸ்ரீ ராமகிருஷ்ணர்களிருவர்க்கு மொத்திருக்கும்படியைக் காட்டினோம். இனி வனயாத்திரையில் கண்ணபிரானுக்குண்டான ஏற்றத்தைக் காட்டுவோம். இராமபிரான் சென்ற தண்டகாரண்யமானது ''பொருந்தார் கைவேல்நுதிபோல் பரல்பாய மெல்லடிக்கள் குருதிசோர, விரும்பாத கான்'' என்று தயரதன் தான் புலம்பிய அப் புலம்பல்பதிகத்திலுள்ளபடி மிகக் கொடிதாகவே யிருந்தது; கண்ணபிரான் சென்ற விருந்தாவனமோவென்னில்; நெரிஞ்சிக் காடாயிருந்ததை, ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் (5 - 6 -28) ''ப்ருந்தாவனம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்ட கர்மணா, சுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திமபீப்ஸதா.'' என்று கூறினபடியே கண்ணபிரான் தூய திருவுள்ளத்தினால் நினைத்தமாத்திரத்தில் மரதகப்பச்சையழுத்தின மாநிலமென்னும்படி [உத்பந்ந நவசஷ்பாட்யம்] பசும்புற்காடாக விளங்கிற்று. இவ்வளவேயோ ப்ருந்தாவனத்தின் சிறப்பு? * ஆஸாமஹோ சரணரேணுஜுஷாம் அஹம் ஸ்யாம் ப்ருந்தாவநே கிமபி குல்மலதௌஷதீநாம், யா: துஸ்த்யஜம் ஸ்வஜநம் ஆர்யபதஞ்ச ஹித்வா பேஜுர் முகுந்தபதவீம் ச்ருதிபிர் விம்ருக்யாம். * என்றும் * பத்யு: ப்ரஜாநாமைச்வர்யம் பசூநாம் வா ந காமயே, அஹம் கதம்போ பூயாஸம் குந்தோ வா யமுநாதடே * என்றும் உத்தவர்போல்வார் ப்ருந்தாவனத்திலே ஏதேனுமொன்றாக ஜனிக்கப்பெறவேணுமென்றார்களே; இப்படி தண்டகாவனத்தில் பிறவியை ஆசம்ஸித்தவர்களுண்டோ? [மேலே யெடுத்த இரண்டு சுலோகங்களின் பொருளாவது — வேதங்களும் தேடநின்ற க்ருஷ்ணன் போன வழியை யாவர் சில பெண்கள் குருஜனங்களையுமுதறித்தள்ளிப் பின்தொடர்ந்தார்களோ, அவர்களுடைய பாதரேணுவோட்டை ஸ்பர்சமுள்ளனவாய் ப்ருந்தாவனத்திலுள்ளனவான சிறு செடிகள் கொடிகள் ஓஷதிகளுள் ஏதேனுமொன்றாகப் பிறக்கவேணும். (2) ப்ரஜாபதி பசுபதிகளினுடைய ஐச்வர்யத்தையும் வேண்டேன்; * பூத்தநீள்கடம்பேறி யென்றும் * பூங்குருந்தேறியிருந்தியென்றும் சொல்லுகிறபடியே யமுனைக்கரையில் அவன் திருவடிகளால் மிதித்தேறின கடம்பாதல் குருந்தாதல் பிறப்பேனாகவேணுமென்கை.] இதையடியொற்றிக் கூரத்தாழ்வானும் * ப்ருந்தாவநே ஸ்திரசராத்மக கீடதூர்வா பர்யந்த ஜந்து நிவயே பத! யே ததாநீம், நைவால்பாமஹி ஜநிம் ஹதகாஸ் த ஏதே பாபா: பதம் தவ கதா புநராச்ரயாம:. * என்று நிர்விண்ணராய்ப் பேசினார். இத்தகைய பெருமை வாய்ந்த வனத்திலன்றோ கண்ணபிரான் யாத்திரை செய்தது. இராமன் சென்றவனம் இத்தகைத்தோ?... ... ... *

6. **மோக்ஷைச்வர்யப்ரதௌ** – இராமபிரான் பெரியவுடையார்க்கு மோக்ஷைச்வர்யமளித்தவன்; கண்ணபிரான் ததிபாண்டாதிகளுக்களித்தவன். மோக்ஷமாகிற ஐச்வர்யமென்கிற பொருள் தவிர, மோக்ஷமும் ஐச்வரியமுமென்கிற பொருளும் தகும். இராமன் ஸுக்ரீவ விபீஷணாதிகளுக்கு கிஷ்கிந்தைச்வர்ய லங்கைச்வர்யாதிகள் அளித்தவன். கண்ணன் குசேலாதிகளுக்கு * தத்தேஸ்ம வித்தேசதாம் *

''மோக்ஷைச்வர்ய ப்ரதௌ'' என்கிற விசேஷணம் மோக்ஷமாகிற ஐச்வர்யத்தை [முக்திச் செல்வத்தை] அளிப்பவர் என்றும், மோக்ஷத்தையும் ஐச்வர்யத்தையும் அளிப்பவர் என்றும் பொருள் தரும். இருபொருளையும் அடைவே விவரிக்கிறேன். இராமபிரான் பெரிய வுடையாரென்கிற ஜடாயு மஹாராஜர்க்கு சரம

http://acharya.org

ஸம்ஸ்காரம் பண்ணுவதற்கு முன்னே "யா கதிர் யஜ்ஞசீலாநாம் ஆஹிதாக்நேச் ச யா கதி:, அபராவர்த்திநாம் யா ச யா ச பூமிப்ரதாயிநாம். மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாந் அநுத்தமாந்." என்று சொல்லி நலமந்தமில்லதோர் நாட்டுக்கு விடை தந்தருளினன். *அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி* என்பதுமொன்றுள்ளது. கண்ணபிரான் செய்தருளின மோக்ஷப்ரதானத்திற்கு அளவே கிடையாது. *சிந்தயந்தீ ஜகத்ஸூதிம் பரப்ரஹ்மஸ்வரூபிணம், நிருச்ச்வாஸதயா முக்திம் கதா அந்யா கோபகந்யகா* (ஸ்ரீவிஷ்ணுபு.) என்று விக்ரஹ வைலக்ஷண்யத்திலீடுபாடே உபாயமாக விடுகொடுக்கப் பெற்றாள் சிந்தயந்தி; *தாயெடுத்த சிறுகோலுக்கு உளைந்தோடுமளவிலே தயிர்த்தாழியினுள்ளே தன்னை மறைத்திட்டுவைத்து 'மோக்ஷம் தாராவிடில் காட்டிக் கொடுப்பேன்' என்று வற்புறுத்தி வீடு பெற்றான் ததிபாண்டன்; 'இதுக்கும் மோக்ஷம் தரவேணும்' என்று அவன் நிர்ப்பந்திக்க மோக்ஷம் கொடுக்கப் பெற்றது அவனுடைய தயிர்த்தாழியும். *வேண்டடிசிலுண்ணும்போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பக்த விலோசனத்தில் பக்திபுரஸ்ஸரமாக அடிசில்கொண்டு வந்திட்ட ரிஷிபத்தினிகளிலே ஒருத்தியை "தத்ரைகா வித்ருதா பர்த்ரா பகவந்தம் யதாச்ருதம், ஹ்ருதோபகூஹ்ய விஜஹௌ தேஹம் கர்மநிபந்தனம்." என்று தன்னளவில் ப்ராவண்யத்தாலே அப்போதே வீடுபெறுவித்தனன். இங்ஙனே கண்ணனுடைய மோக்ஷப்ரதானத்தைப் பன்னியுரைக்குங்கால் பாரதமாம். ஆனால் இதில் நெடுவாசியுண்டு; இராமபிரான் செய்த மோக்ஷப்ரதானத்தில் ஆக்ஷேப ஸமாதானங்கள் நடைபெற்றிருக்கின்றன. "*ஆத்மாநம் மாநுஷம் மந்யே* என்றிருந்த பெருமாள் பெரிய வுடையார்க்கு எங்ஙனே மோக்ஷம் கொடுக்கத்தகும்?" என்கிற கேள்வியும், பரமபுருஷத்வப்ரயுக்தமான பெருமையினால் கொடுக்கவில்லை, *ஸத்யேந லோகாந் ஜயதி யென்ற பெருமையினால் கொடுத்ததென்கிற ஸமாதானமும் அவதரித்துள்ளது. இதன் விரிவை நம்பிள்ளை வைபவத்தில் காண்பது. கண்ணபிரான் செய்த மோக்ஷப்ரதானங்களைப் பற்றி சங்கையோ பரிஹாரமோ ஏதும் உதிக்கவில்லை. கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்திலே *ப்ருச்சாமி கிஞ்சந யதா கில ராகவத்வே மாயாம்ருகஸ்ய வசகோ மநுஜத்வ மௌக்த்யாத், ஸீதாவியோகவிவசோ ந ச தத்கதிஜ்ஞ: ப்ராதாஸ் ததா பரகதிம் ஹி கதம் ககாய?* என்று இராகவனை நோக்கிக் கேள்வி கேட்டாரேயொழிய, கண்ணனை நோக்கி இங்ஙனே கேட்டிலரே. ஆக ராமனுடைய மோக்ஷப்ரதானத்திற்காட்டிலும் கண்ணனுடைய மோக்ஷப்ரதானம் வீறுபெற்றதாயிற்று.

இனி ஐச்வர்யப்ரதானத்தை யெடுத்துக்கொள்வோம். இராமபிரான் *கொங்கைவன் கூனிசொற்கொண்டு குவலயத்துங்கக் கரியும் பரியுமிராச்சியமும் எங்கும் பரதற்கருளி* என்கிறபடியே அயோத்யைச்வர்யத்தை முழுதும் பரதாழ்வானுக்கே யருளினன். ஸுக்ரீவ மஹாராஜர்க்குக் கிஷ்கிந்தைச்வர்யத்தைக் கொடுத்தருளினன். விபீஷணாழ்வானுக்கு "என்னிலங்கு நாமத்தளவு மரசு" என்று சொல்லி ஒருநாளுமழியாத பெருஞ் செல்வத்தை யளித்தனன். கண்ணபிரான் ஐச்வர்யமளிப்பதற்குரிய க்ஷத்திரியகுலத்திலே பிறவாதிருக்கச் செய்தேயும் "தாநாமுஷ்டிமுசே குசேல முநயே தத்தேஸ்ம வித்தேசதாம்" என்னும்படி குசேல முனியை பூலோக குபேரனாக ஆக்கியருளினன். இதிலும் ராமனிற்காட்டிலும் கண்ணனுக்கு ஏற்றமுண்டு. பரதாழ்வானுக்குக் கொடுத்த செல்வம் பிறகு தனக்கேயாயிற்று. ஸுக்ரீவ விபீஷணர்களுக்குக் கொடுத்தது அவர்கள் தனக்கு உறுதுணைவராகவிருந்தனரென்றன்றோ? குசேலமுனிக்குக் கண்ணனளித்தது நிர்ஹேதுகமத்தனையே. ... ... *

7. **அவரகுலஜஸௌஹார்த்த தந்யௌ** — இராமபிரான், குஹன்முதலான கீழ்மக்களோடு தோழமை கொண்டவன். கண்ணன் தானே தாழ்ந்த குலத்திலே பிறந்து தாழ்ந்தாருடனே போது போக்கினவன்.

தாழ்ந்த ஜாதியிற் பிறந்தவர்களை அவரகுலஜ ரென்றும் ஜகந்ய ஜாதீய ரென்றும் சொல்லுவது. அவர்களோடே நேசங்கொள்வது **அவரகுலஜஸௌஹார்த்த** மெனப்படும். சாஸ்த்ரங்களில் "ஹீநப்ரேஷ்யம் ஹீநஸக்க்யம் ஹீந கேஹ நிஷேவணம்" என்று மூன்றும் உபபாதகமாகக் கூறப்பட்டுள்ளன. நீசர்களுக்கு வேலைக்காரனுகவிருப்பது, நீசர்களோடு நட்புகொள்வது, நீசர்களின் வீட்டுக்குள்ளே புகுவது என்னுமிவை மேம்பட்டவர்களுக்குத் தகாது — என்றிங்ஙனே நூற்கொள்கையிருக்க இதையொரு பெருமையாகவெடுத்துக் கூறலாமோவென்று சங்கையுண்டாகும். கேண்மின்; ஸ்வாபாவிகமாயும் ஒப்புயர்வற்றதாயுமுள்ள பெருமை பெற்றவர்களுக்கு இது இழிவாகாது என்பது மட்டுமன்றிக்கே மிகப் பெருமையுமாகுமென்று கொள்க. நம் போல்வாரிடத்துள்ள பெருமையானது ஸ்வாபாவிகமன்று; க்ஷணே க்ஷணே பங்கமடையக் கூடியதுமாகும். ஆகவே வந்தேறியும் க்ஷணபங்குரமுமான பெருமை பெற்ற சிறியோமான நமக்கே ஹீநஜனஸக்க்யம் அவத்யகரமாகும். *மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்குந் தேவாவோ* என்னும்படி பராத்பரனுயிருக்கின்ற பரம புருஷனுக்கு இது பெருமையை மிகமிக வளரச் செய்யும். ஸௌலப்யத்தை மஹாகுணமென்று கொண்டாடுகிறோம். பரத்துவத்தின் எல்லை நிலத்திலே நிற்கிற பரம புருஷனிடத்திற்காணும் ஸௌலப்யம் கொண்டாடப்படுகின்றதேயன்றி நீசத்தனத்தில் தலை நின்ற நம்போல்வாருடைய ஸௌலப்யமா கொண்டாடப்படுகிறது? இராமபிரான் நீசஜாதீயனுன குஹனேடு தோழமை கொண்டதைத் திருமங்கையாழ்வார் எவ்வளவு ஆச்சரியமாகப் பாடுகின்றூர்! * ஏழையேதலன் கீழ்மகனென்னுதிரங்கி மற்றவற்கு இன்னருள் சுரந்து, மாழைமான் மடநோக்கி உன் தோழி உம்பி யெம்பியென்றெழிந்திலை, உகந்து தோழன் நீ யெனக்கிங்கொழி யென்ற சொற்கள் வந்து அடியேன் மனத்திருந்திட * என்றன்றே அவர் பாசுரமிருப்பது. மநுஷ்ய ஜாதியிற் காட்டிலும் இழிவான வானர ஜாதியிற் பிறந்தாரோடுமன்றே கலந்துபழகினுர் பெருமாள். அதையும் பாடுகிறூர் திருமங்கையாழ்வார் தாமே "வாதமாமகன் மற்கடம் விலங்கு மற்றோர் சாதி யென்றெழிந்திலை" என்று. இராமபிரானுடைய இக்குணம் நிற்க; கண்ணபிரான் திறத்துச் செல்வோம்;

கண்ணனுடைய சரிதையில் தாழ்ந்தாரோடு கலந்து பரிமாறினது தான் மிகையாகக் கிடைக்கும். "ததபி பரமம் தத்வம் கோபீஜநஸ்ய வசம்வதம்" [யதிராஜஸப்ததி.] என்னும்படி ஆயரோடும் ஆய்ச்சியரோடுமே போதுபோக்கினன் பெரும்பாலும். பிற்காலத்திலே பாண்டவாதிகளோடே பழகினதுண்டாகிலும் "பாண்டவதூத:" "பார்த்தஸாரதி:" என்று அவர்களுக்குச் செய்த இழிதொழில்களை யிட்டுத் திருநாமம் ப்ரஸித்தமாயிரா நின்றதேயன்றி வேறில்லை. திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் திருநீர்மலைப் பதிகத்தில் (பா. 9) "மதியில் நீசரவர் சென்றடையாதவனுக்கிடம் மாமலையாவது நீர்மலையே" என்றருளிச் செய்துள்ளார். 'மதியில்லாத நீசரவர்கள் சென்று அடையக் கூடாதவனுக்கு' என்கிற பொருள் தான் வியாக்கியான ஸம்மதம். அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையிலும் இங்ஙனே தான் பொருளுரைக்கப்பட்டுள்ளது. ஒருகால் ஒரு பெரிய ஸதஸ்ஸில் உபந்யஸிக்க நேர்ந்தபோது "மதியில் நீசரவர் சென்றடை — யாதவனுக்கிடம்" என்று பிரித்து நீசர்களுஞ் சென்று அடையும்படியான யாதவனுக்கு — யதுகுலோத்பவனுக்கு — என்று பொருள் கூறினேன்; 'இது பூருவர்களின் வியாக்கியானத்திற்

http://acharya.org

காண்பதன்று; ஏதோ ரஸோக்தியாக விஜ்ஞாபித்தபடி' என்றும் சொன்னேன்; கேட்ட அனைவரும் 'இஃது இன்சுவைமிக்க பொருளே; பெரியவாச்சான்பிள்ளை கேட்டருளினால் திருவுள்ள முகந்தருள்வரே யொழிய விச்வாமித்ர ஸ்ருஷ்டி யென்று கருதார்' என்று கரகோஷத்துடன் கூறினர். ஒருவர் மட்டும் ''ஆழ்வார்கள் கண்ணனை யாதவனென்கிற சொல்லால் ஓரிடத்திலும் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லையே'' என்றார். உடனே பூதத்தாழ்வார் இரண்டாந் திருவந்தாதியில் (50) ''ஆயவனே யாதவனே யென்றவனை யார் முகப்பும்'' என்றருளிச் செய்திருப்பதை யெடுத்துக் கூறினேன்; ஸமாஹிதரானார். ... ... *

8. ஸௌந்தர்யம்—அழகில் ப்ரஸித்தி இருவர்க்குமொக்கும்.

இராமபிரானுடைய அழகையும் கண்ணபிரானுடைய அழகையும் பேசவேணுமானால் எத்தனை யுகம் பேசினாலும் போதாது. அளவுகடந்து பேசியுமிருக்கிறேன். இங்கு மிகச் சுருக்கமாக வெழுதுகிறேன். இராமனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்ய நினைத்த தயரதமன்னவன் இராமனைத் தன்னிடம் வரவழைத்தான்; வந்து கொண்டிருக்கிற அவனை மன்னவன் தூரத்திலிருந்து பார்க்கும்போது அவன்றனுள்ளம் பூரித்தபடியை வான்மீகி பேசுகிறார்—* சந்த்ரகாந்தாநநம் ராமம் அதீவ ப்ரியதர்சநம், ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்... ந ததர்ப்ப ஸமாயாந்தம் பச்யமாநோ நராதிப:* என்று. இங்கு (ரூபௌதார்ய குணை:) என்பதற்கு 'ரூபமென்ன, ஔதார்ய மென்ன, மற்றுமுள்ள குணங்களென்ன இவற்றாலே—என்று பொருள் கூறுவர் சிலர்; ஆசாரியர்கள் உகக்கும் பொருள் இதுவன்று. திருவாய்மொழி (5—3—6) ஈட்டில் ''[ரூபௌதார்ய குணை:] ரூபமென்கிறது வடிவழகை; ஔதார்யமென்கிறது அத்தை எல்லாருமநுபவிக்கும்படி ஸர்வஸ்வதானம் பண்ணிக்கொண்டிருக்கை'' என்றருளிச் செய்திருப்பது காண்க. ரூபத்தின் ஔதார்யமென்றதாயிற்று. இதற்குமேலே [பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்] என்றது வெகு அற்புதம். 'ஸர்வேஷாம்' என்று சொல்லவேண்டியிருக்க (பும்ஸாம் என்று) ஆடவர்களின் த்ருஷ்டிசித்தாபஹாரம் பண்ணுமவனென்கையாலே 'பெண்களை மயக்கும் வடிவழகில்லாதவன் இராமன்' என்று சில அரஸிகர்கள் பொருள் கூறுவர். கேண்மின். ஆண்களினழகைக் கண்டு ஆண்கள் மோஹிப்பதும், பெண்களினழகைக் கண்டு பெண்கள் மோஹிப்பதும் மேட்டுமடை; [அஸம்பாவிதம்.] இராமனழகைக் கண்டு ஆண்கள் மோஹிக்கின்றார்களென்றபோதே பெண்கள் படும்பாடு தண்டாபூபிகாந்யாயஸித்தம். விராட நகரத்தில் த்ரௌபதியினழகைக் கண்ட ஸ்த்ரீகள் **''பும்பாவம் மநஸா யயு:''** என்ன நின்றார்கள். இவ்வண்ணமாகவே கம்பராமாயணத்தில் ''ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்!'' என்று இராகவனது தோளழகைக் கண்ட புமான்கள் பெண்மையை விரும்பும்படியிருந்ததெனப்பட்டது. வாலி இராமனெய்த அம்புபட்டு மாளுந்தருவாயில் சிறிது போது தர்க்கிக்கிறானன்றோ; அப்போது ''ஓவியத்தெழுதவொண்ணா வுருவத்தாய்!'' என்று இராமபிரானை விளிக்கிறான். அவித்தவித்தெழுதப்படுகிற சித்திரத்திலும் இராமனுடையவுருவம் உள்ளபடி யெழுத வொண்ணாததென்று தெரிவித்தபடி. பல சொல்லி என்? காதும் மூக்கு மறுப்புண்டு கதறியழுது கொண்டே கரதூஷணர்களிடம் செல்லுகின்ற சூர்ப்பணகை ''தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ, புண்டரீகவிசாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ, கந்தர்வராஜப்ரதிமௌ பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ......'' என்று பெருமாளுடைய வடிவழகையே சொல்லிச் சொல்லிப் புலம்பினளென்றால் இன்னமுஞ் சொல்லவேணுமோ?'' * ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் ஸுவேஷதாம்,

http://acharya.org

தத்ருசுர் விஸ்மிதாகாரா ராமஸ்ய வநவாஸிந:* என்ற முரட்டான்களின் விஸ்மயம் ஒரு புறம்; பங்கப்பட்ட சூர்ப்பணகையின் கதறல் ஒரு புறம். இது நிற்க.

கண்ணனுடைய அழகைச் சிறிது பேசுவோம். "உன்னைக் கண்டார் என்ன நோன்பு நோற்றாள்கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள் என்னும் வார்த்தை யெய்துவித்த இருடீகேசா!" என்கிறாள் யசோதைப்பிராட்டி. கண்ணன் தான் மேய்த்த பசுக்களை மீட்டுக் கொண்டு ப்ருந்தாவனத்தில் நின்றும் திரும்பும்போது ஒரு காதிலே சீலைக்குதம்பையையும் மற்றொரு காதிலே செங்காந்தட் பூவையு மணிந்துகொண்டு வருகிறான்; அப்போது "காலிப்பின்னே வருகின்ற கடல் வண்ணன் வேடத்தை வந்து காணீர்" என்று தோழிமார்களெல்லாரையுமழைத்துக் காட்டிவிட்டு "ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர்! நானே மற்றாருமில்லை" என்று துணிந்து சொல்லுகிறாள். இவ்வநுபவம் கௌஸல்யைக்கு உண்டோ? கண்ணன் சிறுக்கனாய் எமுனைக்கரையிலே திரியும்போது அவன் வடிவழகைக் கண்டு மஹர்ஷிகள் பட்டபாட்டை ஒரு மஹாகவி சொல்லுகிறார் – *மணிவிடம்பிநி தஸ்ய மநோஹரே வபுஷி மக்நமநா முனிமண்டலீ, ஜபமமுஞ்சத ஹோமமமுஞ்சத வ்ரதமமுஞ்சத வேதமமுஞ்சத.* என்று. கண்ணன் அங்கு உலாவும்போது சில முனிவர்கள் ஜபம் செய்து கொண்டிருந்தார்கள்; சிலர் ஹோமஞ்செய்து கொண்டிருந்தார்கள்; சிலர் மௌனவ்ரதம் பூண்டிருந்தார்கள்; சிலர் வேதமோதிக் கொண்டிருந்தார்கள். கண்ணன் வடிவழகைக் கண்டவாறே ஜபம் முடிந்துவிட்டது; ஸ்வாஹா ஸ்வாஹாவென்று செய்யும் ஹோமமெல்லாம் ஹாஹா ஹாஹாவென்று மோஹமாயிற்று; மௌனவ்ரதத்திலிருந்தவர்கள் வாய்திறந்து புகழத் தொடங்கி விட்டார்கள்; வேதமோதினவர்களுக்கு வேதம் மறந்தே போயிற்று. வேதவேத்யனை நேரில் கண்ட பிறகு வேதமேதுக்கு? ஸர்வயஜ்ஞஸமாராத்யனைக் கண்ட பிறகு யஜ்ஞமேதுக்கு? என்று எல்லாவற்றையும் விட்டொழித்தார்கள். இதெல்லாம் ஒருபுறமிருக்க, *யதார்ஹம் கேசவே வ்ருத்திம் அவசா: ப்ரதிபேதிரே* என்னும் படி துர்யோதன ஸபையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றுபோதுமே. அதை *கழல் மன்னர் சூழ* என்கிற பெரியாழ்வார் பாசுரத்தின் வியாக்கியானத்தில் விளக்கங் காண்க. ... ... *

9. **பாரம்யே நிர்வ்யபேக்ஷை** — இராமன் *பவாந் நாராயணோ தேவ: * என்றால் அதற்கு இசையாதே * ஆத்மாநம் மாநுஷம் மந்யே * என்றனன். கண்ணன் கோவர்த்தநோத்தரணத்தில் வியந்த கோவலர்கள் 'தேவோ வா த்வம்' என்ன, அதற்குச் சீறி * அஹம் வோ பாந்தவோ ஜாத: * என்றனன்.

பரத்வகந்தமேயில்லாத தேவதாந்தரங்களுக்குப் பரத்வாரோபணத்தில் பேராசையுள்ளது. பராத்பரர்களான ஸ்ரீராமக்ருஷ்ணர்களுக்குப் பரத்வம் வெறுக்கத் தக்கதாகவுள்ளது. விச்வாமித்ர முனிவர் தயரதமன்னவன் பக்கலிலே வந்து "அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்" என்று இராமபிரானுடைய பரத்வத்தைப் பேசினார். *வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்* என்று புருஷ ஸூக்த ஸித்தமான பரத்வத்தையன்றோ *அஹம் வேத்மி மஹாத்மாநமென்று பேசிற்று. அங்ஙனம் பேசினது இராமபிரான் திருவுள்ளத்திற்கு அதருப்திகரமென்று தெரிந்து கொண்டன்றோ மறுநாள் ஆற்றங்கரையில் திருப்பள்ளியெழுச்சி பாடுகையில் "**கௌஸல்யா ஸுப்ரஜா ராம!...... உத்திஷ்ட நரசார்தூல!**" என்றனன் அம்முனிவன்தானே. நரசார்தூல! என்றவன் 'ஸுரசார்தூல' என்றாலாகாதோ? பரத்வஸாபேக்ஷனல்லனிவன் என்று தெரிந்து கொண்டன்றோ நரசார்தூலவென்று விளித்தது. பாலகாண்டகதை இருக்கட்டும்; இனி யுத்தகாண்ட முடிவிற் செல்வோம். ராவண ஸம்ஹாரமானபிறகு இந்திரன் வருணன் சிவன் பிரமன்

http://acharya.org

முதலான பலபல தேவர்கள் இலங்கையில் வந்து சேர்ந்து இராகவனை அபரிமிதமாகப் புகழ்கின்றனர். "அனைத்துலகு மனைத்துயிரு மமைத்தளித்துத் துடைப்பவன் நீ காண்!" என்றனர்; அப்போது அவர்களனைவரும் ஒருமிடறுகச் சொன்ன பரத்துவம் தனக்கு அஸஹ்யமாய் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்றனன் இராகவன். இங்கு (மந்யே) என்பதற்கு பஹுமந்யே என்று பொருள். கீதையில் "அபிசேத் ஸுதுராசாரோ பஜதே மாம் அநந்யபாக். ஸாதுரேவ ஸ மந்தவ்ய:" என்றவிடத்தில் நமது பாஷ்யகாரர் "மந்தவ்ய: — பஹுமந்தவ்ய:" என்றருளிச் செய்திருப்பதை நினைப்பது. 'எனக்கு நாராயணத்வமிருந்தாலும் அதில் விருப்பமில்லை; மநுஷ்யத்வமும் தசரதாத்மஜத்வமுமே எனக்கு பஹுமாநாஸ்பதம் என்றானாயிற்று. இனி கண்ணன்பாடு செல்வோம்; * ஆயிரங் கண்ணுடையிந்திரனாருக்கென்று ஆயர்விழவெடுத்த காலத்திலே 'நாம் பிறந்து வளருகிற ஊரிலே நம்முன்னே வேறொரு தெய்வத்திற்குப் பூஜை செய்ய அதை நாம் கண்டிருப்பதென்று ஒன்றுண்டோவென்று அந்தப் பூசனைகளை யெல்லாம் கோவர்த்தனமலைக்கே இடச்செய்து, பிறகு நேர்ந்த அதிவிருஷ்டியிலிருந்து கோகோபாலர்களைக் காப்பதற்காக ஏழுநாள் மலையைக் குடையாக வெடுத்துப் பிடித்து நிற்கிறான் கோவிந்தன். அவ்வதிமாநுஷ சேஷ்டிதங்கண்டு ஆச்சரியப்பட்ட ஆயர்கள் * பாலத்வஞ் ச அதிவீர்யஞ் ச ஜந்மசாஸ்மாஸு அசோபநம், சிந்த்யமாநமமேயாத்மந்! சங்காம் க்ருஷ்ண! ப்ரயச்சதி. தேவோ வா தாநவோ வா த்வம் யக்ஷோ கந்தர்வ ஏவ வா * என்றார்கள். இது புகழ்ச்சியுரையேயன்றி இகழ்ச்சியுரையன்றே. இதை ஸஹித்திலன் கண்ணபிரான். "நாஹம் தேவோ ந கந்தர்வோ நயக்ஷோ ந ச தாநவ:, அஹம் வோ பாந்தவோ ஜாதோ நைவ சிந்த்யமதோ ந்யதா" என்று — நான் தேவனுமல்லேன் தானவனுமல்லேன்; இடையர்களுக்குள்ளே கடைகெட்ட இடையன் காண்மின்; வேறுவிதமாக நினையாதீர்களென்று வெருட்டினான். இராமபிரானை நோக்கித் தேவர்கள் "பவாந் நாராயணோ தேவ:" என்றபோது 'நாஹம் நாராயண:' என்று மறுத்திலன்; தன்னுடைய பரத்துவத்தை ஒருவாறு இசைந்திருந்தானென்றே சொல்லலாம். தேவத்வத்தை நிந்தையாக நினைத்து வெறுத்தது கண்ணபிரானுக்கு ஏற்றம்.

10. **அதிமநுஜக்ருத்** — இராமன் கடலில் அணைகட்டினது முதலான அதிமாநுஷ காரியங்கள் செய்தவன், கண்ணன் ஸாந்தீபநி புத்ராநயன வைதிக புத்ராநயனாதிகளான அதிமாநுஷ க்ருத்யங்கள் பலபல செய்தவன்.

கூரத்தாழ்வான் தாமருளிச்செய்த பஞ்சஸ்தவத்தில் ஒரு ஸ்தவத்திற்கு அதிமாநுஷஸ்தவமென்றே திருநாமம் சாற்றியருளினர். அந்த ஸ்தவம் தொடங்கும் போதும் "அதிமாநுஷ சீலவ்ருத்தவேஷை: அதிவ்ருத்தாமர விக்ரம்ப்ரதாபை:" என்றருளிச் செய்தார். எம்பெருமான் தன்னுடைய விபவாவதாரங்களில் செய்து போந்தவை யெல்லாம் அதிமாநுஷங்களென்றாராயிற்று. அதிமாநுஷம் மட்டுமன்று; அதிதைவமுமாகுமென்றார். தேவதைகளின்படியையும் அதிக்ரமித்தது அதிதைவம். மத்ஸ்ய கூர்மாத்யவதாரங்களிலெல்லாம் இது காணலாயிருந்தாலும் இவ்விரண்டவதாரங்களில் அபரிமிதமாகக் காணலாயிருக்கும். ஸ்ரீ ராமாவதாரத்தில் தலையாகக் காட்டக்கூடிய அதிமாநுஷக்ருத்யம் கடலில் அணைகட்டினதொன்றும். மராமரமேழெய்தது முதலியவை இதற்கு ஈடாகமாட்டாவன்றோ. ஆனால்: ஸேது பந்தனமாகிற இவ்வதிமானுஷக்ருத்யத்தில் ஒரு குறையுண்டு; அதாவது, * குரக்கினப்படை கொடு குரைகடலின்மீதுபோய் * என்று திருமழிசையாழ்வாரும், * குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்டோடித் தரங்க நீரடைக்க

http://acharya.org

லுற்ற சலமிலாவணில் * என்று தொண்டரடிப்பொடியாழ்வாரும், *யாந்தி ந்யாயப்ரவ்ருத்தஸ்ய திர்யஞ்சோபி ஸஹாயதாம் * என்று முராரிகவியும் கூறின படியே இராமபிரான் செய்த ஸேதுபந்தனம் துணையின்றிக்கே செய்ததன்று. வானர வீரர்களைத் துணைகொண்டு செய்ததாக ப்ரஸித்திவந்து விட்டபடியால் ஸஸஹாய க்ருத்யமென்று குறைகூற இடமாயிற்று. இனி கண்ணனுடைய சேஷ்டிதங்களை யெடுத்துக்கொண்டாலோ அதிமாநுஷம் அதிதைவம் என்னும்படியான சேஷ்டிதங்கள்தாம் அபரிமிதம்; அவற்றில் ஒன்றுகூடப் பிறர் துணைகொண்டு செய்ததன்று. ஏழுநாள் குன்றைக் குடையாகவெடுத்து நின்றது, ஸாந்தீபநி புத்திரனை மீட்டுக் கொடுத்தது, வைதிகன் பிள்ளைகளைக் கொணர்ந்து தந்தது, மருமகன்றன் சந்ததியை உயிர்மீட்டுக் கொடுத்தது ஆகிய இவை அதிமாநுஷம் அதிதைவம் என்பதே யல்லாமல் ஒரு துணையுமின்றிக்கே செய்தவையுமாம்.

ஆக, நத்யா: கூலேவதீர்ணௌ'' என்று தொடங்கி ''அதிமநுஜக்ருதீ'' என்னுமளவாகவுள்ள பத்து விசேஷணங்களாலும் நிரூபிக்கப்பட்ட ஸ்ரீராமக்ருஷ்ணர்களின் பரஸ்பரஸாம்யம் பத்து உபந்யாஸங்களாக அநுபவிக்கத்தக்கது. இதில் ஒவ்வொன்றிலும் இராமபிரானுக்குக் குறைகாட்டிக் கண்ணபிரானுக்கு ஏற்றங் காட்டியிருப்பது ரஸோக்தியாகக் கொள்ளத்தக்கது. ... *

'இ' என்னுமெழுத்தை முற்கொண்டு, ஸ்வாமியின் 'அபூர்வார்த்த ரத்ன நிதி'யில் வெளிவந்துள்ள உபந்யாஸங்கள் - 4.

1. இல்லை யெனக்கெதிரில்லை யெனக்கெதிர்.
2. இன்னார் தூதனென நின்றான்.
3. இன்றுயாம் வந்தோமிரங்கு.
4. இப்பொழுதெம்மனோராலியம்புதற்கெளிதோ.

http://acharya.org